16-31 மார்ச் 2002 www.padippakam.com ரூ. 5.00



தமிழக போலீசின் பயங்கரவாத அட்டூழியம்

# புதிய ஜனநாயகம்



www.padippakam.com

# ஆந்திரா:
# “இம்” என்றால் சிறை! “ஏன்?” என்றால் படுகொலை!

ஆந்திர மாநிலத்தின் வாராங்கல் மாவட்டத்திலுள்ள வாராங்கல் — அனுமகொண்டா நெடுஞ்சாலையை, அப்பகுதி மக்கள் ''மோதல் படுகொலை சாலை'' என்றுதான் குறிப்பிடுகிறார்கள். இந்திய மாநில முதல்வர்களிலேயே, மிகச் சிறந்த முதல்வராக, நிர்வாகியாகப் புகழ்ந்து தள்ளப்படும் சந்திரபாபு நாயுடு ஆட்சியின் உண்மை முகத்தை இதைவிட எளிதாக ஒரே சொல்லில் அம்பலப்படுத்திவிட முடியாது!

நக்சல்பாரி புரட்சியாளர்களின் செல்வாக்கு மிகுந்த ஆந்திராவின் தெலுங்கானாப் பகுதியில் உள்ள வாராங்கல் மாவட்டத்தைத் திறந்தவெளி சிறைச்சாலையாக மாற்றியமைத்திருக்கிறார் சந்திரபாபு நாயுடு. கடந்த ஒரு வருடமாக அம்மாவட்டத்தில் நடப்பது போலீசு ராஜ்ஜியம்தான்.

அம்மாவட்டத்தில் அடிப்படைத் தேவைகளுக்காக, ஜனநாயக உரிமைகளுக்காக சட்டபூர்வ வழியில் போராடுபவர்களைக் கூட ''நக்சலைட்டுகள்'', ''பயங்கரவாதிகள்'' என முத்திரை குத்தி, ஆந்திர போலீசு நர வேட்டையாடுகிறது. அப்படி போராடுபவர்களைக் ''கொன்றுவிடுவோம்'' என போலீசார் மிரட்டுவதும், பொய் வழக்கு போட்டு, சட்ட விரோதமாகக் கொட்டடியில் அடைத்துச் சித்திரவதை செய்வதும் அம்மாவட்டத்தில் சர்வ சாதாரணமாக நடந்து வருகிறது.

அம்மாவட்டத்தில் சட்டபூர்வமாகச் செயல்பட்டு வரும் மக்கள் திரள் அமைப்புகளைச் சேர்ந்த 70-க்கும் மேற்பட்ட செயல் வீரர்களை, வாரம் ஒருமுறை போலீசு நிலையத்திற்கு வந்து கையெழுத்துப் போடச் செய்து, கிரிமினல்களைப் போல நடத்துகிறது ஆந்திர அரசு. ''மக்கள் பிரச்சினைகளுக்காகப் போராடக் கூடாது; அமைப்பில் இருந்து விலகிவிட்டதாக அறிவிக்க வேண்டும்'' என அவர்கள் போலீசாரால் மிரட்டப்படுகிறார்கள்.

இந்நிலையில் கடந்த டிசம்பர் மாத இறுதியில் மக்கள் திரள் அமைப்புகளைச் சேர்ந்த அயிலய்யா, சந்திரசேகர், பண்டேலா, சுரேந்தர், பிஸாதி சங்கர் ஆகிய நான்கு தோழர்கள் ஆந்திர போலீசாரால் கொல்லப்பட்ட சம்பவம், வெள்ளையும் சொள்ளையுமாகத் திரியும் சந்திரபாபு நாயுடுவின் ஆட்சி, பச்சை இரத்தம் குடிக்கும் காட்டேரியின் ஆட்சிதான் என்பதை மீண்டுமொரு முறை அம்பலப்படுத்திக் காட்டிவிட்டது.

★ மங்களபள்ளி அயிலய்யா, வாராங்கல் மாவட்டத்திலுள்ள தொர்குரு நகரைச் சேர்ந்தவர். மடிகா என்ற தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த, இருபத்தைந்து வயது இளைஞரான அயிலய்யா, பாடகர்; இசைக் கலைஞர். பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொண்டு பாடி வந்த அயிலய்யா, சமீபத்தில் தனி தெலுங்கானா மாநிலம் கேட்டு போராடும் தெலுங்கானா கலா சமிதி எனும் அமைப்பில் இணைந்தார்; அதன் அமைப்பாளராகவும் செயல்பட்டு வந்தார்.

ஹைதராபாத் நகரிலேயே தங்கிப் பணியாற்றி வரும் அயிலய்யா, கடந்த டிசம்பர் 22-ஆம் தேதி தனது சொந்த ஊருக்கு வந்திருந்தார். இதனை ஆள்காட்டி மூலம் மோப்பம் பிடித்துவிட்ட போலீசார், சாதாரண உடையில் அரசு அதிகாரிகளைப் போல அயிலய்யாவின் வீட்டிற்கு வந்தனர். அந்த இரு போலீசாரும் அயிலய்யாவிடம், ''இருதய நோய் சிகிச்சைக்காக அவருக்கு மூன்று இலட்ச ரூபாய் முதலமைச்சர் நிவாரண நிதியில் இருந்து ஒதுக்கப்பட்டிருப்பதாகவும், தங்களோடு உடனே அரசு விருந்தினர் மாளிகைக்கு வந்தால், கையோடு பணத்தை வாங்கிக் கொண்டு திரும்பி விடலாம்'' என நாடகமாடினர். இதை உண்மை என நம்பிவிட்ட அயிலய்யாவும் அவர்களோடு கிளம்பிச் சென்றார்.

மோட்டார் சைக்கிளில் அந்த இரு போலீசாருக்கும் இடையில் உட்கார வைக்கப்பட்டிருந்த அயிலய்யா, வண்டி அரசு விருந்தினர் மாளிகையில் நிற்காமல் சென்ற பொழுதுதான், தன்னைக் கடத்திச் செல்லுகிறார்கள் எனப் புரிந்து கொண்டு, சாலையில் அக்கம்பக்கத்தில் செல்லுவோருக்கும் கேட்கும்படி வண்டியை நிறுத்தச் சொல்லிக் கத்தினார்.



விசாரணை என்ற பெயரில் அழைத்துச் செல்லப்பட்டு ஆந்திர போலீசால் படுகொலை செய்யப்பட்ட சந்திரசேகர்.

டிசம்பர் 24-ஆம் தேதி மாலை 6 மணி போல் அயிலய்யாவைக் கடத்திச் சென்ற போலீசார், இரண்டு நாள் கழித்து, அயிலய்யா போலீசாரோடு நடந்த மோதலில் சுட்டுக் கொல்லப்பட்டதாக பத்திரிகைகளின் மூலம் அறிவித்தனர்.

★ வாராங்கல் நகருக்கு அருகேயுள்ள தர்மராம் என்ற கிராமத்தைச் சேர்ந்த சந்திரசேகர், பள்ளி ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். சம்பளம் வாங்கும் கடமைக்காக வாத்தியார் வேலையைப் பார்க்காமல், சந்திரசேகர் அர்ப்பணிப்போடு கிராமப்புற மாணவர்களுக்குப் பாடம் நடத்தி வந்தார். அதனால், சந்திரசேகர் தாழ்த்தப்பட்டவராய் இருந்த போதிலும், சுற்று வட்டார கிராம மக்கள் அவர் மீது மிகுந்த மதிப்பு வைத்திருந்தனர். மேலும், அவர் ஜனநாயக ஆசிரியர் கழகத்தின் முன்னணி செயல் வீரராகவும் செயலாற்றி வந்தார்.

டிசம்பர் 25-ஆம் தேதி அதிகாலை இரண்டு மணிக்கு சந்திர சேகர் வீட்டுக்கு வந்த போலீசு படை, தூங்கிக் கொண்டிருந்த அவரின் சட்டை கழுத்துப் பட்டியைப் பிடித்து இழுத்து, ''மாமியார் வீட்டுக்குப் போகலாம், வா'' என மிரட்டியது. சந்திரசேகரை இழுத்துப் போக வந்த போலீசு கும்பலில், மோதல் படுகொலைக்குப் பெயர் போன தட்சிணாமூர்த்தி என்ற துணை ஆய்வாளரும் இருந்தான்.

சந்திரசேகர் மீது மீண்டும் பொய் வழக்குப் போடுவதற்காகத் தான் அவரை போலீசார் இழுத்துச் செல்ல வந்திருப்பதாக நினைத்த சந்திரசேகரின் அண்ணன் மாணிக்கம், போலீசின் அத்துமீறலைக் கண்டித்து வாக்குவாதம் செய்தார். போலீசோ, ''சந்திரசேகரை காலையிலேயே திருப்பி அனுப்பி விடுவோம்'' எனக் கூறியதோடு, அந்த நாடகத்தை நம்ப வைப்பதற்காக சந்திரசேகரிடம், ''ஸ்வெட்டர் போட்டுக் கொள்; தலைக்குக் குரங்கு குல்லாப் போடு'' என நைச்சியமாகப் பேசி, அவரை பிடித்துச் சென்றனர். 25-ஆம் தேதி அதிகாலை உயிரோடு இழுத்துச் செல்லப்பட்ட சந்திரசேகர், மறுநாள் பத்மக்ஷம்மா குட்டலு என்ற குன்றின் அடிவாரத்தில் போலீசாரின் குண்டுக்குப் பலியாகிக் கிடந்தார்.

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

**தொகுதி: 17**

**இதழ் 7—9**

**16 பிப். - 31 மார்ச் 2002**

**உள்நாடு:**
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 120.00**

**வெளிநாடுகள்**
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 18**

**மின் அஞ்சல் முகவரி:**
**puthiyajananayagam@hotmail.com**

**படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்**

**புதிய ஜனநாயகம்**
**அஞ்சல் பெட்டி எண்: 6015,**
**அசோக் நகர்,**
**சென்னை - 600 083.**


## குஜராத் கலவரம்

# பார்ப்பன பயங்கரவாதம்

குஜராத் மாநிலத்தில் இந்து மதவெறி பயங்கரவாதிகள் நடத்தி வரும் கலவரம் இது வரை ஏறத்தாழ ஆயிரத்துக்கும் அதிகமான முசுலீம்களை பலி கொண்டு விட்டது. நகர்ப் புறங்களில் தணிந்து விட்ட கலவரம், இப்பொழுது முழு வீச்சோடு கிராமப்புறங்களை நோக்கித் திரும்பியிருக்கிறது. கிராமப்புறங்களில் இந்து மதவெறிக் கும்பல் முசுலீம் மக்களைக் கொன்று குவிப்பதோடு, ஊரையே கொள்ளையடித்தும் வருகிறது.

''இராம பக்தர்கள் எரித்துக் கொல்லப்பட்டதை சும்மா விடமாட்டோம்'' எனப் பகிரங் கமாக அறிவித்துவிட்டுதான் இந்து மதவெறியர்கள் இந்தக் கலவரத்தைத் தொடங்கி வரு கிறார்கள். ''கண்ணுக்குக் கண்'' என்ற பாணியில் கொல்லப்பட்ட முசுலீம்களில் பெரும் பாலோர் உயிரோடு பெட்ரோல் ஊற்றி எரித்துக் கொல்லப்பட்டுள்ளனர்; அகமதாபாத் நக ரிலுள்ள நரோதா மற்றும் மெகானிநகர் ஆகிய இரண்டு பகுதிகளில் மட்டும் கிட்டதட்ட 100 முசுலீம்கள் அவர்களின் வீட்டோடு எரித்துக் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

முசுலீம்களின் குடியிருப்புப் பகுதிகள் மட்டுமின்றி, முசுலீம்களுக்குச் சொந்தமான பெட்டிக் கடை தொடங்கி நகைக்கடை வரை அனைத்தும் குறி வைத்துத் தாக்கப்பட்டு, தீ வைத்துக் கொளுத்தப்பட்டுள்ளன. அம்மாநிலமெங்கும் ஏறத்தாழ பதினைந்து பள்ளி வாசல்கள் இடிக்கப்பட்டு, அவை கோவில்களாக மாற்றப்பட்டுள்ளன; அப்பள்ளி வாசல் களில் இந்துக் கடவுள்களின் படங்களை வைத்து, இந்து மதவெறிக் கும்பல் பஜனை நடத் துகிறது.

குஜராத் மாநில அரசுக்குச் சொந்தமான முசுலீம் வக்ஃப் போர்டு, சிறுபான்மையினர் நிதியுதவி கழகக் கட்டிடங்கள் கூட இந்து மதவெறி பயங்கரவாதிகளின் தாக்குதலில் இருந்து தப்பவில்லை. ''ஆர்.எஸ்.எஸ்.க்கு எதிராக முசுலீம்கள் ஒரு வார்த்தை பேசுவ தற்குக்கூடப் பலமுறை யோசிக்க வேண்டும்'' எனப் பாடம் புகட்டும் விதத்தில் இக்கலவ ரத்தை நடத்தி வருகிறது, இந்து மதவெறி பயங்கரவாதக் கும்பல்.

அகமதாபாத் நகரை இரண்டாகப் பிளந்து கொண்டு ஓடும் சபர்மதி ஆற்றின் கிழக்கே முசுலீம்களின் குடியிருப்புகள் நிறைந்திருக்கும் பகுதிகளில் கரும்புகையோடு பிணவாடை வீசிக் கொண்டிருந்தபொழுது, சபர்மதியின் மேற்கே இந்துக்கள் குடியிருக்கும் குப்தா நகரில் திருமண ஊர்வலம் குதூகலமாக நடந்தது. வாத்வாவிலும், ஷா ஆலம் பகுதியிலும் வசிக்கும் முசுலீம்கள் ஊரடங்கு உத்தரவு காரணமாக உயிருக்குப் பயந்து வீடுகளுக்குள் முடங்கிக் கிடந்த பொழுது, மேனக் சௌக்கில் இந்துப் பெண்கள் காய்கறி வாங்க சந்தைக்கு வந்தனர். நவ்ரங்புர் பகுதியைச் சேர்ந்த இந்து இளைஞர்களோ, அன்றைய பொழுதை கிரிக்கெட் விளையாடிக் கழித்தனர். எதிரும், புதிருமான அகமதாபாத்தின் இந்தக் காட்சிதான், குஜராத் மாநிலமெங்கும் நடந்து வரும் கலவரத்தின் உண்மை முகம்.

இந்து மதவெறி பயங்கரவாதிகளால் உயிரோடு கொளுத்தப்பட்ட முசுலீம் குடும்பங் களில் முன்னாள் காங்கிரசு எம்.பி. ஈஹ்சான் ஜாப்ரியின் குடும்பமும் அடங்கும். இவர் தனது குடும்பத்தினரின் உயிரைக் காப்பாற்ற போலீசாரைப் பலமுறை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு மன்றாடியிருக்கிறார். ஆனால், போலீசோ ஈஹ்சான் ஜாப்ரி தனது குடும் பத்தினரோடு உயிரோடு கொளுத்தப்பட்டு இரண்டு மணி நேரம் கழித்துதான் அவரது வீட்டுக்கு வந்தது. இந்து மதவெறி ஆட்சியின் கீழ் ஒரு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பி னருக்கே இதுதான் கதி என்றால், சாதாரண முசுலீம்களின் உயிருக்கும், உடமைக்கும் என்ன பாதுகாப்பு கிடைத்திருக்கும்?

இந்து மதவெறி பயங்கரவாதிகளால் உயிரோடு கொளுத்தப்பட்ட அன்சாரி இஸ்ரார் அகமது, முகம்மது ஷாஃபி என்ற இரு ரிக்ஷா ஓட்டும் தொழிலாளர்களை, சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றபொழுது, அரசு மருத்துவமனையைத் தங்கள் பிடியில் வைத்திருந்த இந்து மதவெறியர்கள், ''சிகிச்சைக்காக அவர்களை எடுத்து வந்தால் மீண்டும் கொளுத்துவோம்'' என மிரட்டி, மருத்துவமனைக்குள் நுழைய விடாமல் திருப்பி அனுப்பி விட்டனர்.

இப்படி உயிரோடு கொளுத்தப்பட்டு, உடம்பெங்கும் வெந்த நிலையில், உரிய மருத் துவ வசதி கிடைக்காமல், குற்றுயிராகக் கிடக்கும் முசுலீம்கள் இன்னும் சாவுப் பட்டியலில் சேர்க்கப்படவில்லை. வீட்டை இழந்து, குடிசையை இழந்து, உடமையை இழந்து அகதிக ளான முசுலீம்களும்; தாய், தந்தை, அண்ணன், அக்கா, தம்பி, தங்கை என சுற்றத்தாரை யெல்லாம் இழந்து அநாதையாகிப் போன முசுலீம்களும் அடுத்த வேளை கஞ்சிக்குக்கூடப் பள்ளிவாசல்களில்தான் தஞ்சமடைந்திருக்கின்றனர். அவர்களுக்கு நிவாரண உதவி அளிப்பது பற்றி மாநில அரசு மயிரளவு கூட அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை.

குஜராத் மாநில முதல்வர் நரேந்திர மோடி இந்தக் கலவரத்தை ''கோத்ரா சம்பவத் தினால் இந்துக்களுக்கு ஏற்பட்ட கோபம்'' என நியாயப்படுத்தினார். விசுவ இந்து பரி

படிப்பகம்

www.padippakam.com



அகமதாபாத்தில் உள்ள பாபு நகரை ஆயுதங்களோடு தாக்கச் செல்லும் இந்து மதவெறி பயங்கரவாதிகள்.

சத்தின் துணைத் தலைவர் கிரிராஜ் கிஷோருக்கு இந்தக் கலவரம் ''இந்துக்களின் வன்முறை கலந்த மிகச்சிறிய எதிர்வினை''. அத்வானிக்கோ, ''பயங்கரவாத பீதியை ஏற்படுத்தாத சாதாரண மதக் கலவரம்''.

ஓராயிரம் முசுலீம்களின் உயிரைப் பலி வாங்கிய, பல்லாயிரக்கணக்கான முசுலீம்களை அகதிகளாக்கிய இந்தக் கலவரத்தை ஏதோ அற்ப விவகாரம் போல, அலட்சியமாக ஒதுக்கித் தள்ளும் இந்து மதவெறியர்கள், 58 இராம பக்தர்கள் கொல்லப்பட்ட கோத்ரா சம்பவத்தை பயங்கரவாதம் என ஊதிப் பெருக்குகிறார்கள்.

### கோத்ரா தாக்குதல் - இந்து மதவெறியின் எதிர் விளைவே

இந்து மதவெறியர்கள் கோத்ரா சம்பவத்திற்கு வடிப்பதெல்லாம் முதலைக் கண்ணீர்தான். இன்னும் சொல்லப் போனால், கோத்ரா போன்றதொரு தாக்குதல் சம்பவம் நடைபெறாதா என அவர்கள் நரித்தனமாகக் காத்துக் கிடந்தனர் என்பதே உண்மை.

கடந்த ஆண்டு உ.பி.யில் கும்பமேளா நடந்தபொழுது, 2002 மார்ச் 15 இல் அயோத்தியில் பாபர் மசூதி வளாகத்தில் இராமர் கோவில் கட்டும் பணிகளைத் துவங்கப் போவதாக வி.இ.ப. அறிவித்தது. அதையடுத்து, இராமர் கோவில் மாதிரியைத் தூக்கிக் கொண்டு வட இந்திய மாநிலங்களில் ''ஷோபா யாத்திரை'' நடத்தப்பட்டது. இதன்பின் இந்து மதவெறிக் குண்டர்களுக்கு திரிசூலத்தை வழங்கி, சிறுபான்மை மக்கள் மத்தியில் பீதியை உருவாக்கினார்கள், இந்து மதவெறியர்கள். கடந்த சனவரியில் தில்லியில் இந்து மதச் சாமியார்களின் ஊர்வலம் நடந்தது; பிப்ரவரியில் இருந்து அயோத்தியில் இராமர் கோயில் கட்டும் பணிகளைத் துவக்கும் முகமாக யாகமொன்றை நடத்தி வருகிறார்கள்.

ஆனாலும், இராமர் கோவிலை முன் வைத்து இந்து மதவெறியர்கள் நடத்திய இந்தக் கூத்துக்களுக்கு, அவர்கள் எதிர்பார்த்தபடி இந்துக்களின் ஆதரவு கிடைக்கவில்லை. நியூயார்க் தாக்குதல், நாடாளுமன்றத் தாக்குதல் இரண்டுக்கும் பிறகு மேல்சாதி, நடுத்தர வர்க்க இந்துக்களிடமிருந்துவரும் பாக். எதிர்ப்பு / முசுலீம் எதிர்ப்பு உணர்வைக் கூட, இந்து மதவெறிக் கும்பல் ஓட்டுக்களாக மாற்ற முடியாமல், உ.பி.யில் பா.ஜ.க. தோல்வியடைந்தது.

இந்நிலையில், வி.இ.ப., அயோத்தியில் உள்ள கரசேவைபுரத்தில் நடத்தி வரும் யாகத்தில் கலந்து கொள்ள ''இராம சேவகர்கள்'' என்ற பெயரில் இந்து மதவெறிக் குண்டர்களையும் ஆதரவாளர்களையும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் அயோத்திக்கு அழைத்து வரத் தொடங்கியது. அயோத்திக்கு இராம சேவகர்களை அனுப்பி வைப்பதில் குஜராத் மாநிலம்தான் முன்னிலையில் இருந்தது. இந்த இராம சேவகர்கள் அயோத்திக்குப் போகும் வழியெங்கும் முசுலீம்களைச் சீண்டிக் கொண்டே சென்றனர். இராமர் கோவில் பிரச்சினையை வைத்து மீண்டும் மதவெறிக் கலவரத்தை நடத்தக் காத்துக் கிடந்த இந்து மதவெறிக் கும்பலுக்கு ஒரேயொரு சாக்கு தேவையாய் இருந்தது. அதை, கோத்ரா ரயில் நிலையத்தில் இராம சேவகர்கள் மீது முசுலீம்கள் நடத்திய தாக்குதல் வழங்கியது.

### கோத்ராவில் கொல்லப்பட்டவர்கள் அப்பாவிகளா?

கோத்ராவில் இராம சேவகர்கள் கொல்லப்பட்டதைக் கண்டிப்பதில் மதவெறி அமைப்புகளை விட, அவற்றை எதிர்ப்பதாகக் கூறும் மதச்சார்பற்ற கட்சிகள் தான் முன்னணியில் இருக்கின்றன. போலி கம்யூனிஸ்டுகளும், காங்கிரசும் கொல்லப்பட்ட இராம சேவகர்களை அப்பாவி இந்துக்கள் எனக் கூறி கண்ணீர் வடிக்கின்றன.

இந்தக் கும்பலால் தமிழகத்தில் மதச்சார்பற்ற ஜனநாயகக் கூட்டணியின் தலைவியாக முன்னிறுத்தப்பட்ட ஜெயாவோ, ''சிறுபான்மையினருக்கு எதிரான குற்றங்கள்தான் குற்றங்கள்; அதுவே பெரும்பான்மையினருக்கு எதிராக நடந்தால் குற்றங்கள் இல்லை எனப் பார்க்கக் கூடாது;... அரசியல் சாசனம் வழங்கியுள்ள உரிமைகளை அனுபவிக்கும் உரிமை சிறுபான்மையினருக்கு மட்டுமல்ல; பெரும்பான்மையினருக்கும் உரிமைகள் உண்டு.... இந்தக் குற்றத்தை மனிதத் தன்மைக்கே எதிரானதாகப் பார்க்க வேண்டும்'' என அ.தி.மு.க. தலைவி ஆர்.எஸ்.எஸ். தலைவியைப் போல் கண்டித்து அறிக்கை வெளியிட்டார்.

ஜெயாவின் அறிக்கையால் உற்சாகமடைந்த இந்து முன்னணி இராம. கோபாலன், ''ஜெயாவைத் தவிர வேறு யாரும் வாயைத் திறக்காதது ஏன்?'' என மதச்சார்பற்ற கட்சிகள் மேல் பாய்ந்தார். இராமரின் படத்தைச் செருப்பால் அடித்து ஊர்வலம் நடத்தியவர் பெரியார். அவரின் வாரிசாகத் தன்னை மார்தட்டிக் கொள்ளும் கருணாநிதி, இராம. கோபாலனின் மீது புலி போல் பாய்வார் என எதிர்பார்த்தால், அவரோ, ''இராம சேவகர்கள் கொல்லப்பட்டதை நாங்கள் கண்டித்திருக்கிறோம்'' என ஜெயாவுக்கும் சேர்த்து தன்னிலை விளக்கம்

இந்து மதவெறிக் கொலைக் கும்பலிடம் உயிர்ப் பிச்சை கேட்டு மன்றாடும் குத்புதீன் நஸ்ருதீன்.





படிப்பகம்

கொடுத்துவிட்டுப் பூனை போல் படுத்துக் கொண்டார்.

ஓட்டுக் கட்சிகள் புனித மாக மதிக்கும் சட்டத்தின்ப டியே, உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வருவதற்கு முன்பாக, அயோத்தியில் பாபர் மசூதி வளாகத்தினுள் இராமர் கோயிலைக் கட்டும் நோக்கத் துடன் யாகம் நடத்துவதும், அதற்காக அங்கே இந்துக் களைக் கும்பலாகத் திரட்டி பலப்பரீட்சை நடத்துவதும் கிரிமினல் குற்றமாகும். இராம சேவகர்கள், பெரும்பான்மை மதத்தினர் என்ற திமிரின் கார ணமாக, ''நாங்கள் இந்தக் கிரி மினல் குற்றத்தைச் செய்யப் போகிறோம்; உன்னால் முடிந்தால் தடுத்துப் பார்'' எனப் பகிரங்கமாக சவால் விட்டுத்தான் அயோத்திக்குப் போகிறார்களே தவிர, சும்மா ஊரைச் சுற்றிப் பார்த்து வரச் செல்லவில்லை. எனவே, இந்து மதவெறிக் குண்டர்கள் தலைமையில் அயோத்திக்குப் போகும் இந்த இராம சேவகர் களை அப்பாவி இந்துக்கள் எனக் கூறுவதே கடைந்தெ டுத்த அயோக்கியத்தன மாகும். இப்படி அயோத் திக்குச் செல்லும் ஆயிரக்க ணக்கான இராம சேவகர்களில் ஒரு 58 பேர் கோத்ராவில் முசுலீம்களால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டது, இந்து மதவெறியர்கள் விதைத்த வினையின் விளைவுதான். எனவே, இதனை உழைக்கும் மக்கள் கண்டிக்கவோ, இதற்காகக் கண்ணீர் வடிக் கவோ அவசியமேயில்லை.

''பெண்கள், குழந்தைகள் கூட அநியாய மாகக் கொல்லப்பட் டுள்ளனர்'' என்ற வாதம் பச்சாதா பத்தைக் கிளறிவிட்டு, இப்படுகொலைக்குக் காரணமாக இருந்த இந்து மதவெறி அரசி யலை மூடி மறைப்ப தற்குதான் பயன் படும்.



முசுலீம் எதிர்ப்பு முழக்கங்களைப் போட்டுக் கொண்டு அகமதாபாத்தில் இருந்து அயோத்திக்குச் செல்லும் வானரப் படை.

**சமரசத் திட்டமா? சதித் திட்டமா? சங்கராச்சாரி, தூதுவனா? வில்லனா?**

குஜராத் கலவ ரத்தைக் காட்டி, வி.இ.ப, தேசிய ஜன நாயகக் கூட்டணி அர சிடம் ''பிரச்சினைக்குரிய இடத்தைச் சுற்றி யிருக்கும் 42 ஏக்கர் நிலத்தை ஜூன் 2-ஆம் தேதிக்குள் வி.இ.ப.விடம் ஒப்படைக்க வேண்டும்; அயோத்தியில் வி.இ.ப. நடத்தி வரும் நூறு நாள் யாகத்திற்கு கரசேவகர்கள் வருவதைத் தடை செய்யக் கூடாது; மார்ச் 15 அன்று இராமர் கோயில் அருகே தூண்களை வைத்துப் பூஜை நடத்த் அனும திக்க வேண்டும்'' என காஞ்சி மட சங்கராச் சாரியைத் தூதுவனாக அமர்த்திக் கொண்டு பேரம் நடத்துகிறது.

ஏற்கனவே பாபர் மசூதி இருந்த, தற்பொழுது சட்ட விரோதமாகக் கட்டப்பட்ட இராமர் கோயில் இருக்கும் நிலத்தைத்தான், இந்து மத வெறி அமைப்புகளும், ஓட்டுக் கட்சிகளும், அரசும் சர்ச்சைக்குரிய இடம் எனக் கூறுகின்றன. பாபர் மசூதி இடிக்கப்பட்ட பின்பு, மசூதி வளாகத்தைச் சுற்றி வி.இ.ப. வளைத்துப் போட்டிருந்த நிலத்தையும் மைய அரசு கையகப்படுத்தியது. தற்பொ ழுது வி.இ.ப. ''இந்த நிலத்தைத் தன்னிடம் அளிக்க வேண்டும்; இந்தப் பகுதியில் கோயில் கட்டுவதை அரசு தடுக்கக் கூடாது'' எனப் பேரம் பேசுகிறது; ''சர்ச்சைக்குரிய பகுதி யாருக்குச் சொந்தம்?'' என நீதிமன்றம் தீர்ப்பு சொல்லட்டும் என நியாய வானைப் போலவும் காட்டிக் கொள்கிறது.

காஞ்சி மட சங்கராச்சாரி மூலம் வி.இ.ப. நடத்திவரும் பேரம் நயவஞ்சகமும், நரித்த னமும் நிறைந்தது. இராமர் கோயிலின் கருவறையை ஏற்கனவே பாபர் மசூதி இருந்த இடத்தில் அமைக்க வேண்டும் என்பதுதான் வி.இ.ப.வின் திட்டம். அங்கேதான் தற்போது சட்ட விரோ தமாக தற்காலிக இராமர் கோவில் அமைக் கப்பட்டுள்ளது. அதைச் சுற்றி அரசின் அனு மதியோடு இராமர் கோயிலின் பிற பகுதி களைக் கட்டத் தொடங்கிவிட்டால், பிறகு நீதிமன்றம் 'சர்ச்சைக்குரிய' இடம் முசுலீம்க ளுக்குத்தான் சொந்தம் என உத்தர விட்டால் கூட, அங்கே மீண்டும் மசூ தியைக் கட்ட முடியா தபடி நெருக்கடியை உருவாக்குகிறது வி.இ.ப.

மசூதியைச் சேதப்படுத்திவிட்டு, பின் இராம பஜனை நடத்தும் 'அப்பாவி' இந்துக்கள்!



காஞ்சி மட சங்க ராச்சாரி மூலம் வி.இ.ப. பேரம் நடத்தும் இந்தத் திட்டம், ''நாட்டில் அமைதியை உரு வாக்க வேண்டும்'' என்ற நல்ல நோக்கத் துடன் திடீரென உரு வாக்கப்பட்டதல்ல. மூன்று மாதங்க ளுக்கு முன்பாகவே

www.padippakam.com

இந்த நயவஞ்சகத் திட்டம் காஞ்சி சங்கர மடத்தில் இரகசியமாக உருவாக்கப்பட்டு, இது பற்றி பேச்சு வார்த்தை நடத்துவதற்கு ஜார்ஜ் பெர்னாண்டசும் வந்து போனார். இப்பொழுது காஞ்சிமட சங்கராச்சாரி தலைமையில் இந்து மதவெறியர்கள் ஒன்று திரண்டு, குஜராத் கலவரத்தைக் காட்டி, இந்தச் சதிகார சமரச திட்டத்தை நிறைவேற்றுமாறு மிரட்டுகிறார்கள்.



வி.இ.ப. சார்பாக முசுலீம் மதத் தலைவர்களிடம் பேரம் நடத்தும் ஜெயேந்திர சரசுவதி: சமரசத் தூதுவனா? சதிகார வில்லனா?

பிரதமர் வாஜ்பாயும் இந்த சமரச திட்டத்தை ஏற்றுக் கொண்டுவிட்டதாகவே கூறப்படுகிறது. குஜராத் கலவரத்துக்கு முன்பே பாபர் மசூதி வளாகத்தைச் சுற்றியுள்ள 67 ஏக்கர் நிலத்தையும் வி.இ.ப.விடம் கொடுக்கத் தயாராக இருந்த இந்தக் குள்ளநரியிடம் இப்பொழுது வேறெந்த நியாயத்தை எதிர்பார்க்க முடியும்?

பா.ஜ.க. கூட்டணியில் உள்ள 'மதச்சார்பற்ற' கட்சிகளும், பா.ஜ.க.வை எதிர்க்கும் காங்கிரசும், போலி கம்யூனிஸ்டுகளும், இந்த சமரசத் திட்டம் பற்றி முன்னரே இரகசியமாக பேச்சு வார்த்தை நடந்து வந்தபொழுது, அதனைப் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை. இப்பொழுது நெருக்கடி முற்றிய நிலையில், ''வி.இ.ப.விடம் ஒரு அங்குல நிலத்தைக் கூட கொடுக்கக் கூடாது; மைய அரசு நீதிமன்றத் தீர்ப்பு வரும்வரை காத்திருக்க வேண்டும்'' என வெற்றுக் கூச்சல் போடுகிறார்கள்.

இந்து மதவெறியர்கள் அயோத்தி பிரச்சினையில் இதற்கு முன் அடைந்த வெற்றிகள் அனைத்தும் பீதியூட்டி, சட்ட விரோதமான முறையில் பெற்றவைதான். இன்று எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து கொண்டு ''நீதிமன்ற தீர்ப்பு'' என நியாயம் பேசும் காங்கிரசு கட்சி, அன்று ஆளும் கட்சியாக இருந்தபொழுதுதான் சட்ட விரோதமான முறையில் பாபர் மசூதி வளாகத்தினுள் இருந்த இராமர் சிலையை வழிபட அனுமதித்தது; செங்கல் பூஜை நடத்த அனுமதித்தது. இறுதியாக, பாபர் மசூதியை இந்து மதவெறியர்கள் இடித்துத் தள்ளவும் துணை போனது. அப்பொழுதெல்லாம், போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட எல்லா மதச்சார்பற்ற கட்சிகளும் இந்து மதவெறியர்களின் அராஜகத்திற்கு சம்பிரதாயமான எதிர்ப்பு தெரிவித்ததற்கு மேல், வேறு எதையும் புடுங்கிவிடவில்லை. எனவே, மதச்சார்பற்ற கட்சிகள் இந்து மதவெறியர்கள் திணிக்கும் இந்த சமரச திட்டத்தை எதிர்ப்பதால் வாஜ்பாயி அடங்கிப் போய்விடுவார் என நம்பி இருப்பது ஏமாளித்தனமாக முடிந்துவிடும்.

மதச்சார்பற்ற கட்சிகளின் இந்தத் துரோகம் ஒருபுறமிருக்கட்டும்; நீதிமன்றம் அயோத்தி பிரச்சினையில் இந்து மதவெறியர்களுக்குச் சாதகமாக நடந்து கொள்ளவில்லையா? பாபர் மசூதியை இடித்துத் தள்ளிவிட்டு, அங்கு சட்ட விரோதமாகக் கட்டப்பட்ட இராமர் கோயிலுக்குச் சட்டபூர்வ அங்கீகாரம் அளித்த உச்சநீதி மன்றம், நியாயமான முறையில் முசுலீம்களுக்குச் சாதகமாக இறுதித் தீர்ப்பு வழங்கும் என எதிர்பார்க்க முடியுமா? அப்படியே உச்சநீதி மன்றம் நியாயமான தீர்ப்பை வழங்கினாலும், இந்து மதவெறியர்கள் அந்தத் தீர்ப்புக்கு மதிப்பு கொடுத்து மசூதியைக் கட்ட அனுமதித்து விடுவார்கா? அப்படி அவர்கள் அனுமதிக்காதபொழுது, அந்தக் கும்பலோடு நேருக்கு நேர் மோதும் துணிவும், திராணியும் போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்டு எந்த மதச்சார்பற்ற கட்சிக்காவது உண்டா?

மாநாட்டுக்கு மாநாடு செம்படை பேரணி நடத்தி வீரம் காட்டும் போலி கம்யூனிஸ்டுகள், குஜராத்தில் கலவரம் நடந்தபொழுது அம்மாநிலத்தை இராணுவத்திடம் ஒப்படைத்து விடும்படி கோரி பிரதமர் அலுவலகத்துக்கும், ஜனாதிபதி மாளிகைக்கும் தான் 'பேரணி' நடத்தினார்கள். குஜராத் மாநிலத்தில் அடுத்த வருடம் சட்டசபைத் தேர்தல் வருவதால், காங்கிரசுக் கட்சி கலவரத்தில் ஈடுபட்ட நடுத்தர வர்க்க – மேல் சாதி இந்துக்களை பகைத்துக் கொள்ள விரும்பவில்லை; கலவரத்தைக் கண்டித்து அறிக்கை விட்டதோடு முடங்கிக் கொண்டது. இந்தக் கலவரத்தின் சாயல் படியாத தமிழ்நாட்டில் கூட, இந்து மதவெறி பயங்கரவாதத்தை மக்களிடம் அம்பலப்படுத்தத் துணியாமல், ''மத நல்லிணக்கம்'' என்ற உப்புசப்பற்ற, நீர்த்துப் போன முழக்கத்தை முன் வைத்துக் கூட்டம் போடுகிறார்கள், இந்த வீரர்கள்.

இந்து மதவெறியர்களோடு அதிகாரத்தைப் பகிர்ந்து கொண்டுள்ள திராவிடக் கட்சிகள், ''கோத்ரா தாக்குதலுக்காக முசுலீம்களைத் தீவிரவாதத் தடுப்புச் சட்டத்தில் கைது செய்தது போல, குஜராத் கலவரத்தை நடத்திய இந்து மதவெறியர்களை 'பொடோ'வின் கீழ் ஏன் கைது செய்யவில்லை?'' என்ற நியாயமான கேள்வியைக் கூட எழுப்பவில்லை.

''பிரச்சினைக்கு உள்ளாகாத நிலத்தில் கோயில் கட்ட அனுமதிக்க வேண்டும்'' என மிரட்டுகிறது, வி.இ.ப. இதை நேரடியாக எதிர்க்கத் துணியாத கருணாநிதி, ''பிரச்சினைக்குரிய இடத்தில் கோயில் கட்ட அனுமதித்தால், நாங்கள் பதவி விலகுவோம்'' எனத் தலையைச் சுற்றி மூக்கைத் தொடுகிறார். இந்த சமயத்தில் மைய அரசைப் பகைத்துக் கொண்டு விலகினால், ஜெயா, தனது முதுகுத் தோலைப் பதம் பார்த்துவிடுவார் என்ற பயத்தினாலேயே இந்து மதவெறியர்களோடு சமரசம் செய்து கொள்கிறார், அவர்.

இந்த மதச்சார்பற்ற கட்சிகள் அனைத்தும் பாபர் மசூதி பிரச்சினையை நீதிமன்றத்தின் பக்கம் தள்ளிவிட்டுத் தந்திரமாக ஒதுங்கிக் கொண்டதால்தான், இன்று இந்து மதவெறியர்கள் திணிக்கும் தீர்ப்பை ஏற்றுக் கொள்ள வேண்டிய நெருக்கடி உருவாகியிருக்கிறது. இந்து மதவெறி பாசிஸ்டுகளின் பலமே, இந்த மதச்சார்பற்ற கட்சிகள் அதை நேருக்கு நேர் எதிர்க்கத் துணியாத, அவற்றின் பலவீனத்தில்தான் அடங்கியுள்ளது.

வி.இ.ப. திணிக்கும் இந்த சமரசத் திட்டம், ஏதோ முசுலீம் மக்களின் மத-வழிபாட்டு உரிமையைப் பறிப்பதாக மட்டும் சுருக்கிப் பார்த்துவிட முடியாது. ''இந்து மதவெறி பயங்கரவாதிகள் சொல்லுவதுதான் சட்டம் - நீதி; அதை ஒருவனும் எதிர்த்துப் பேசக் கூடாது'' என்று நாட்டை ஒரு இருண்ட காலத்திற்குள் தள்ளிவிடும் பேரபாயம் இது. இதற்கு மதச்சார்பற்ற கட்சி என்ற போர்வையில் வரும் இன்னுமொரு பாசிசக் கட்சியான காங்கிரசு மாற்றாக அமைய முடியாது; இந்து மதவெறி பயங்கரவாதிகளுக்கு விட்டுக் கொடுத்துச் சமரசம் செய்து கொள்ளும் போலி கம்யூனிஸ்டுகள், திராவிடக் கட்சிகளால் இப்பேரபாயத்தை வீழ்த்தவும் முடியாது.

மாறாக, புரட்சிகர - முற்போக்கு ஜனநாயக அமைப்புகளின் தலைமையில் இந்து மதவெறி பயங்கரவாதிகளை வெறுக்கும் மக்களை அணிதிரட்டி, அமைப்பாக்கி, அச்சமூக விரோதக் குண்டர்களோடு நேருக்கு நேராக தெருவில் மோதுவதன் மூலம் மட்டுமே அவர்களை வீழ்த்த முடியும்; சட்ட விரோத இராமர் கோயிலை அப்புறப்படுத்திவிட்டு, பாபர் மசூதியை மீண்டும் கட்டவும் முடியும்.



படிப்பகம்

www.padippakam.com

# நீதிக்குக் கல்லறை இந்து மதவெறியர்களுக்கு விடுதலை

இந்தியாவையே உலுக்கிப் போட்ட மும்பய் கலவரம் நடந்து முடிந்து பத்தாண்டுகள் உருண்டோடி விட்டன. இந்த இந்து மதவெறிக் கலவரத்தைத் தூண்டி விட்டு, அதற்குத் தலைமையேற்று நடத்திய பால் தாக்கரே உள்ளிட்ட இந்து மதவெறியர்கள்; அவர்களுக்குத் துணை போன போலீசு அதிகாரிகள் எனக் குற்றவாளிகளின் பெயர்களைப் பட்டியல் போட்டு, அவர்களைத் தண்டிக்கக் கோரும் சிறீகிருஷ்ணா கமிசன் விசாரணை அறிக்கை வெளிவந்து ஏறத்தாழ ஐந்தாண்டுகள் கழிந்து விட்டன. ஆனாலும் இக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட மும்பய் நகர முசுலீம் மக்களுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை.

சிவசேனா கட்சியின் தலைவர் பால் தாக்கரே; கலவரம் நடந்த பொழுது மும்பய் நகரின் போலீசு ஆணையாளராக இருந்த ஆர்.டி. தியாகி போன்ற ''மேல்தட்டு'' குற்றவாளிகள் தொடங்கி, கலவரத்தில் ஈடுபட்ட சிவசேனாவின் அடிமட்டத் தொண்டன், கடைநிலை போலீசுக்காரன் வரை குற்றவாளிகள் அனைவரும் சர்வ சுதந்திரமாக வெளியே சுற்றிக் கொண்டு திரிகின்றனர். நாட்கள் நகர நகர இந்த அரசு இயந்திரம், நீதிமன்றம் இக்குற்றவாளிகளைத் தண்டிக்குமா என்பதே கேள்விக் குறியாகி வருகிறது.

பா.ஜ.க. - சிவசேனா இந்து மதவெறிக் கூட்டணி மகாராஷ்டிரா மாநிலத்தை ஆண்டபொழுது, மும்பய் கலவரம் பற்றிய உண்மைகளைக் குழி தோண்டிப் புதைத்து விட வேண்டும் என்பதற்காகவே சிறீகிருஷ்ணா கமிசனை பாதியிலேயே கலைத்தது. இந்து மதவெறியர்களின் இச்சதிக்கு எதிராக நாடெங்கும் பரவலாக ஆர்ப்பாட்டங்கள் வெடித்ததால், அப்பொழுது பிரதமராக இருந்த 'மிதவாதி' வாஜ்பாயி மீண்டும் அக்கமிசனை நியமித்து, இந்து மதவெறிக் கும்பலை நியாயவானாகக் காட்டினார். இதன்பின், இந்துமதவெறி கூட்டணி ஆட்சி சிறீகிருஷ்ணா கமிசன் விசாரணை அறிக்கையை வெளியேவிட மறுத்து, அதனைச் சட்டபூர்வமாகவே குப்பைக் கூடைக்குள் தள்ளி விட முயன்றது. இதற்கு எதிராகவும், பாதிக்கப்பட்ட முசுலீம்களும், பல்வேறு ஜனநாயக அமைப்புகளும் போராட வேண்டியிருந்தது.

இப்பொழுது மகாராஷ்டிர மாநில அரசு அதிகாரம் பா.ஜ.க. - சிவசேனா இந்து மதவெறிக் கூட்டணியின் கைகளில் இல்லை. காங்கிரசு - தேசியவாதி காங்கிரசு கூட்டணிதான் இப்பொழுது மகாராஷ்டிரா மாநிலத்தை ஆளுகிறது. ''அதிகாரத்தை எங்களிடம் கொடுங்கள்; கலவரத்தில் ஈடுபட்ட இந்து மதவெறியர்களைத் தண்டிக்கிறோம்'' என்று வசனம் பேசித்தான் இந்தக் கூட்டணி முசுலீம்களிடம் ஓட்டுப் பொறுக்கியது. ஆனால் இந்த 'மதச்சார்பற்ற' கூட்டணி, அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தி எதையும் புடுங்கவில்லை என்பதே உண்மை.

காங்கிரசு - தேசியவாதி காங்கிரசு கூட்டணி இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, மும்பய் கலவரம் தொடர்பாக பால் தாக்கரேயைக் கைது செய்தது. உடனே, பால் தாக்கரே, ''என்னை விடுதலை செய்யாவிட்டால் மும்பய் மீண்டும் எரியும்'' என மிரட்டினார். இதனால் அரண்டு போன மதச்சார்பற்ற கூட்டணி அரசு, ஒப்புக்காக அவரைச் சிறையில் அடைத்துவிட்டு, பிணையில் வெளியே விட சம்மதித்தது. ஆனால், வழக்கை விசாரித்த நீதிமன்றமோ, பால் தாக்கரேவுக்கு எதிரான வழக்கையே தள்ளுபடி செய்துவிட்டு அவரை விடுதலை செய்தது.

பால் தாக்கரே பிரபலமான இந்து மதவெறி அரசியல் தலைவராக இருப்பதால், அவர் மும்பய் கலவர வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டது இந்தியாவெங்கும் வெட்ட வெளிச்சமானதோடு, பலத்த கண்டனத்தையும் சந்தித்தது. ஆனால், பால்தாக்கரே அளவிற்கு பிரபலமாகாத குற்றவாளிகள், குறிப்பாக சிறீகிருஷ்ணா கமிசனால் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் போலீசு அதிகாரிகள், காங்கிரசு - தேசியவாதி கூட்டணி அரசால் வழக்கில் இருந்து விடுவிக்கப்படுவது காதும் காதும் வைத்தாற்போல கமுக்கமாக நடந்து வருகிறது.

★ நிகில் காப்ஸே - மும்பய்க் கலவரம் நடந்த பொழுது, மும்பய் நகர போலீசில் உதவி ஆய்வாளராகப் பணியாற்றி வந்தான். கலவரத்தின் பொழுது இவனது தலைமையில் இருந்த போலீசு படை, ஆர்.ஏ.கே. தெருவில் உள்ள ஹரி மசூதியில் தொழுகை செய்து கொண்டிருந்த முசுலீம்களின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி, ஆறு அப்பாவி முசுலீம்களைக் கொன்று குவித்தது. காலில் குண்டடிப்பட்ட ஒரு முசுலீம் சிறுவன், உயிரைக் காப்பாற்றிக் கொள்ள தப்பியோட முயன்ற பொழுது, அச்சிறுவனின் மார்பில் சுட்டுக் கொன்ற போலீசு மிருகம்தான் நிகில் காப்ஸே.

முசுலீம்கள் மசூதிக்குள் ஆயுதங்களைப் பதுக்கி வைத்திருந்ததாகக் கட்டுக் கதையைப் பரப்பி, இந்த துப்பாக்கிச் சூட்டை மும்பய் போலீசு நியாயப்படுத்தியது. ஆனால், சிறீகிருஷ்ணா கமிசன் விசாரணையின்பொழுது போலீசின் இந்த மோசடி அம்பலமானதோடு, ''மனிதத் தன்மையற்ற மிருகத்தனமான நடத்தைக்காக'' நிகில் காப்ஸே தண்டிக்கப்பட வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டது. ஆனால், காங்கிரசு - தேசியவாதி கூட்டணி அரசால், சிறீகிருஷ்ணா கமிசனின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட சிறப்பு போலீசு படையோ, ''எந்தவொரு கிரிமினல் வழக்கும் காப்ஸேயின் மீது தொடர முடியாது'' எனக் கூறி, நிகில் காப்ஸேயை விடுவித்துவிட்டது.

★ ''மும்பய் கலவரத்தின் பொழுது, அன்டாப் குன்று பகுதியைச் சேர்ந்த ஆறு காவலர்கள், இந்து மதவெறி கும்பல் முசுலீம்களைத் தாக்கியதைக் கண்டு கொள்ளாமல் விட்டதோடு, இந்து மதவெறியர்கள் ஆயுதங்களோடு முசுலீம்களைத் தாக்கியதை ஊக்கப்படுத்தினர்; இந்து மதவெறியர்களோடு கை கோர்த்துக் கொண்டு, இந்த ஆறு போலீசாரும் முசுலீம்களைத் தாக்கினர்'' என

தொடர்ச்சி 10-ஆம் டக்கம்

**சிறீகிருஷ்ணா கமிசனில் சாட்சியம் அளித்ததால், மும்பய் போலீசாரால் மிரட்டப்படும் அப்துல் ஹக் அன்சாரி.**





படிப்பகம்

## மேற்கு வங்கத்தை ஆள்வது

# 'இடது' முன்னணியா? இந்து முன்னணியா?

முசுலீம்கள் நடத்திவரும் பள்ளிக் கூடங்களான ''மதராசா''க்கள் தேசவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. மதராசாக்களுக்கும் பாக். உளவு நிறுவனமான ஐ.எஸ்.ஐ.க்கும் இரகசியத் தொடர்பு உள்ளது ஐ.எஸ்.ஐ.யின் பயங்கரவாத நடவடிக்கைகள் நாட்டுக்குப் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. வடகிழக்கு மாநிலங்களில் ஐ.எஸ்.ஐ.யால் பயிற்றுவிக்கப்பட்ட பயங்கரவாதிகள் தீவிரமாகச் செயல்படுகிறார்கள். மதராசாக்களில் மத அடிப்படைவாதத்தைப் பரப்பி இளைஞர்களை அணிதிரட்டி வருவதோடு வெடிகுண்டுகளையும் இரகசியமாக இறக்குமதி செய்து சீர்குலைவு நடவடிக்கைளில் ஈடுபட்டு வருகிறார்கள். இப்போது நமது மாநிலத்திலும் அவர்கள் நுழையத் தொடங்கி விட்டார்கள். அங்கீகரிக்கப்படாத மதராசாக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுப்போம்.

- இப்படி முசுலீம் பயங்கரவாதப் பீதியூட்டி எச்சரிப்பது இந்துவெறி பாசிசத் தளபதி அத்வானி அல்ல; இந்து முன்னணி இராம. கோபாலனும் அல்ல. இப்படி எச்சரிப்பவர் கையில் சூலாயுதம் இல்லை; நெற்றியிலே ராம நாமமும் இல்லை; இவர் இந்துவெறி பாசிசப் பரிவாரத்தைச் சேர்ந்தவருமில்லை.

இவர் பா.ஜ.க.வின் இந்துத்துவக் கொள்கைகளை எதிர்ப்பதாகக் கூறிக் கொள்ளும் கட்சியின் முக்கியப் பிரமுகர். மதச் சார்பின்மையே எங்கள் கொள்கை; நாங்கள் சிறுபான்மை முசுலீம்களின் காவலர்கள் என்றெல்லாம் கூறிக் கொள்ளும் 'இடது சாரி' முன்னணியின் முக்கிய தலைவர். பா.ஜ.க. ஆளும் மாநில முதல்வரைப் போல இசுலாமியப் பயங்கரவாதப் பீதியூட்டிய இவர் மே.வங்க 'மார்க்சிஸ்டு' முதல்வரான புத்ததேவ் பட்டாச்சார்யா!

புத்ததேவ் பட்டாச்சார்யாவின் இந்த எச்சரிக்கைகளைக் கண்டு பூரித்துப் போன உள்துறை அமைச்சர் அத்வானி, ''யதார்த்தமான நிலைமைகளைப் புரிந்து கொண்டு மனசாட்சிப்படி அவர் எச்சரித்தது பாராட்டுக்குரியது'' என்று வாழ்த்தி வரவேற்கிறார். இந்துவெறி பாசிசத்தை ஆதரிக்கும் பார்ப்பன - தேசிய பத்திரிகைகள், ''நாட்டைச் சூழ்ந்துள்ள பயங்கரவாத அபாயத்தை வேறுப்பதில் எல்லோரும் ஒன்று பட்டு நிற்க வேண்டும். இத்தகைய தேசிய பிரச்சினைகளில் அரசியல் கூடாது. மே.வங்க மார்க்சிஸ்டு முதல்வர் இதை சரியாகவே உணர்ந்து செயல்படுகிறார். வறட்டுத்தனமான பழைமைவாத மார்க்சிஸ்டுகளிடமிருந்து அவர் வேறுபட்டு நிற்கிறார்'' என்று பாராட்டி தலையங்கமும் சிறப்புக் கட்டுரைகளும் எழுதுகின்றன.

''இல்லையிலை; அவர் அப்படியெல்லாம் பேசவில்லை. ஒரு கம்யூனிஸ்டு முதல்வர் பா.ஜ.க.வினரைப் போல ஒரு போதும் பேசவோ, செயல்படவோ மாட்டார்'' என்று போலி கம்யூனிஸ்டுகளான 'மார்க்சிஸ்டுகள்' சத்தியம் செய்கிறார்கள். ஆனால் மே.வங்க முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யாவின் அண்மைக் கால நடவடிக்கைகளும் வாக்குமூலங்களும் அவர் கம்யூனிசப் போர்வையிலுள்ள பா.ஜ.க மாநில முதல்வர் என்றே மெய்ப்பித்துக் காட்டுகின்றன.

மே.வங்கத் தலைநகர் கல்கத்தாவிலுள்ள அமெரிக்க தகவல் மையத்தை, கடந்த ஜனவரி 22-ஆம் தேதியன்று மோட்டார் சைக்கிளில் வந்த முகமூடியணிந்த இருவர் குண்டுவீசித் தாக்கியதோடு, அங்கு காவலுக்கு நின்ற போலீசுக்காரர்கள் மீதும் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தி ஐவரைக் கொன்று தப்பியோடி விட்டனர். இத்தாக்குதலைச் செய்தது யார் என்று விசாரணை நடந்து கொண்டிருந்தபோது, "ஆசிப்ரோசா கமாண்டோ படை எனும் பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த அப்தாப் அன்சாரி என்ற தீவிரவாதி இதைச் செய்துள்ளதாக மத்திய அரசு அறிவித்தது. பாக். உளவு நிறுவனமான ஐ.எஸ்.ஐ.யின் கூட்டாளியான இவன் துபாயைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கி வருவதாகவும், இவனையும் இவனது கூட்டத்தையும் பிடிக்க முயற்சி செய்து வருவதாகவும் இந்திய உளவுத்துறை அறிவித்தது. அதைத் தொடர்ந்து பா.ஜ.க. அரசின் உள்துறை அமைச்சரான அத்வானி, பாகிஸ்தானின் பயங்கரவாதச் சதிகள் பற்றி பெருங் கூச்சல் போட்டார்.

கல்கத்தாவில் நடந்த அமெரிக்க தகவல் மைய கட்டிடத் தாக்குதலை ஒட்டி மூன்று மதராசா பள்ளி ஆசிரியர்கள் உள்ளிட்டு 55 பேரை மே.வங்கப் போலீசார் கைது செய்து வதைத்தனர். தீவிரமாக விசாரணை நடத்தி வருவதாகவும் குற்றவாளிகளைத் தேடி வருவதாகவும், காசுமீரைச் சேர்ந்த லஸ்கர் - இ - தொய்பா என்ற தீவிரவாத அமைப்பினர் இத்தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்றும் மத்திய அரசுக்குத் தெரிவித்தனர். பாக். ஆதரவு பெற்ற பயங்கரவாதக் குழுவின் கைவரிசையா அல்லது ஆத்திரமுற்ற தனிநபர்களின் பழிவாங்கும் செயலா என்று விசாரணையில் இதுவரை தெளிவாகவில்லை என்று மே.வங்க போலீசு புலனாய்வுத் துறை தலைவர் சௌமன் மித்ரா பேட்டியளித்தார்.



ஆனால், அடுத்த சில நாட்களிலேயே ஜார்கந்த் மாநிலத்திலுள்ள ஹசாரிபாக் நகரில் இரு முசுலீம்களை டெல்லி போலீசார் சுட்டுக் கொன்று விட்டு, இவர்கள்தான் கல்கத்தாவில் தாக்குதலை நடத்தியவர்கள் என்றனர். பாகிஸ்தானியர்களான சலீம் மற்றும் முகமது இத்ரிஸ் ஆகிய இரு தீவிரவாதிகளும் பதுங்கியிருந்த வீட்டைச் சுற்றி வளைத்த

www.padippakam.com

போது அவர்கள் ஏ.கே. 47 இரக இயந்திரத் துப்பாக்கியால் சுட்டதாகவும், போலீசார் தற்காப்புக்காகத் திருப்பிச் சுட்டபோது அவ்விருவரும் கொல்லப்பட்டதாகவும், அவர்கள் பதுங்கியிருந்த இடத்திலிருந்து ஏராளமான வெடிகுண்டுகளும் ஆயுதங் களும் கைப்பற்றப்பட்டதாகவும் மைய அரசின் உள்துறை செயலர் அறிவித்தார். டெல்லி போலீசாரின் இந்த அதிரடி நடவ டிக்கை பற்றி மே.வங்கம் மற்றும் ஜார்கந்த் மாநிலப் போலீசாருக்கோ, அரசுக்கோ முன்கூட்டியே அறிவிக்கப்படவுமில்லை.

ஒரு தீவிரவாதத் தாக்குதல்; அதைத் தொடர்ந்து இது பாக். பயங்கரவாதிகளின் கைவரிசை என்ற குற்றச்சாட்டு; அடுத்த சில நாட்களில் சில முசுலீம் இளைஞர்கள் போலீ சுடன் நடந்த மோதலில் கொல்லப்பட்டதா கவும் அவர்கள்தான் தாக்குதலை நடத்திய பயங்கரவாதிகள் என்றும் அரசு அறிவிப்பு; அவர்களுக்கு அடைக்கலம் அளித்து உத வியதாக கணக்கற்ற முசுலீம்கள் கைது செய்யப்பட்டு சிறையிலடைப்பு என்ற போக்கானது டெல்லி நாடாளுமன்றத் தாக்குதல் சம்பவத்திலிருந்து கேள்விமுறை யின்றித் தொடர்ந்து கொண்டிருக்கிறது. அதேசமயம் கொல்லப்பட்டவர்கள் பாகிஸ் தானைச் சேர்ந்த உளவாளிகள் என்பதற்கு எந்த ஆதாரத்தையும் இதுவரை இந்திய அரசு காட்டவில்லை. வீரப்பன் வேட்டை என்ற பெயரில் தமிழக-கர்நாடக அதிரடிப் போலீசுப் படையினரால் அப்பாவி மக்கள் வதைக்கப்படுவதைப் போலவே, தீவிர வாதிகளுக்கு அடைக்கலம் கொடுத்ததாக அப்பாவி முசுலீம்கள் பலர் கைது செய்யப் படுவதும் கேள்விமுறையின்றித் தொடர் கிறது. டெல்லி நாடாளுமன்றத் தாக்கு தலைத் தொடர்ந்து, காசுமீரைச் சேர்ந்த கல்லூரிப் பேராசிரியரான கீலானியைக் கைது செய்ததோடு அவரது குடும்பத் தையும் விசாரணை என்ற பெயரில் வதைத்த கொடுமை ஒன்றே இதற்குச் சான்று கூறப் போதுமானது. பயங்கரவாத பீதியும் தேசப் பாதுகாப்பு என்ற வெறியூட்டலும் பத்திரிகைகளின் ஆதரவும் நிலவுவதால் தொடரும் இக்கொலை வெறியாட்டத் தையும், அப்பாவி முசுலீம்கள் மீதான தாக்குதலையும் பற்றி எந்தவொரு ஓட்டுக் கட்சியும் வாய் திறப்பதில்லை.

அமெரிக்காவில் செப்.11 அன்று உலக வர்த்தக மையக் கட்டிடத் தாக்குதலைத் தொடர்ந்து பயங்கரவாதப் பீதியூட்டி வரும் அமெரிக்க வல்லரசு, ஆப்கான் போர் முத லாக உலகெங்கும் ஆக்கிர மிப்பு - மேலாதிக்க அடாவ டித்தனங்களில் ஈடுபட்டு வரு கிறது. அதேபோல, இசுலா மிய தீவிரவாதப் பீதியூட்டி தேசப் பாதுகாப்பு - தேச ஒற்றுமை என்ற பெயரில் தேசியவெறி - போர் வெறியூட்டி இந்துவெறி ஆட்சியா ளர்கள் பாசிச ஆதிக்கத்தை நிலைநாட்டி வருகிறார்கள்.

இப்பாசிச சதிகளை அம்பலப்படுத்தி முறியடிப்பதற்குப் பதிலாக, போலி கம்யூ னிஸ்டுகள் தாங்களும் தேசப் பாதுகாப்பு - தேச ஒற்றுமை ஜோதியில் சங்கமமாகி, பயங்கரவாதப் பீதியூட்டக் கிளம்பி விட்டார்கள். கல்கத்தாவிலுள்ள அமெரிக்க தகவல் மைய கட்டிடத் தாக்குதலை நடத்தி யவர்கள் பாக். தீவிரவாதிகள்தான் என்று ஹசாரிபாக்கில் இரு முசுலீம்களை டெல்லி போலீசார் சுட்டுக் கொன்றதைத் தொடர்ந்து, மே. வங்க போலி கம்யூனிஸ்டு முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா, ''மதராசாக்கள் தேச விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.'' என்று எச்சரித்து தன்பங் குக்குப் பயங்கரவாதப் பீதியூட்டினார். உடனே மே.வங்க மாநில உயர் போலீசு அதிகாரிகளும் ஒத்தூதி, வடகிழக்கு மாநி லங்களின் வழியே மதராசாக்கள் மூலமாக பாக். உளவாளிகளும் பயங்கரவாதக் கருத் துகளும் ஊடுருவி வருவதாக அச்சுறுத் தினர். அப்பாவி முசுலீம்கள் பலர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு இழுத்துச் செல்லப்பட்டனர்.

மே.வங்கத்தில் நூற்றுக்கணக்கான மத ராசாக்கள் வெளிநாட்டு உதவியுடனோ அல்லது சுயமாகவோ இயங்கி வருகின்றன. அவை ஏழை முசுலீம் குழந்தைகளுக்கு மதிய உணவோடு கல்வி அளிக்கின்றன. மே.வங்க மதராசா கல்வி வாரியத்தின் பாடத்திட்டப்படி இசுலாமிய மற்றும் அரா பிய கல்வியைக் கற்பிக்கின்றன. அரசு பள்ளிகளில் இடம் கிடைக்காததாலும் ஏழ்மை காரணமாகவும் பல்லாயிரக்கணக் கான குழந்தைகள் மதராசா பள்ளிகளில் படிக்கின்றனர். இப்பள்ளிகளில் மேல் நிலைக் கல்வி வரை படித்த மாணவர்க ளுக்கு உரிய அளவு கல்லூரிகளை நிறுவுமா றும், வஃக்ப் வாரிய கல்விக் கூடங்களில் பயிலும் மாணவிகளுக்குத் தொழிற்கல்வி பயிற்சி அளிக்க அனுமதிக்குமாறும் முசு லீம்கள் நீண்ட காலமாகக் கோரி வருகின் றனர். ஆனாலும் இன்றுவரை இடது முன்னணி அரசு இவற்றை நிறைவேற்ற வில்லை. இசுலாமிய இறையியலும் மத அடிப்படைவாதமும் மதராசா பள்ளிகளில் கற்பிக்கப்பட்டு, மத உரிமையின் பெயரில் பிற்போக்குத்தனம் வளர்க்கப்படுகிறதே தவிர, மதராசாக்கள் தேசவிரோத நடவடிக் கைகளில் ஈடுபட்டதாக ஆதாரபூர்வமாக எந்த செய்தியையும் அரசு இதுவரை வெளி யிடவுமில்லை.

அதேசமயம் இதர மாநிலங்களைப் போலவே இடதுசாரிகள் ஆளும் மே.வங்கத்திலும் முசுலீம்கள் இரண்டாம் தர குடிமக்களாகவே நடத்தப்படுகிறார்கள். அரசுப் பள்ளிகளில் முசுலீம் குழந்தைக ளுக்கு இடம் கிடைப்பதில்லை. பெருநகரங் களில் முசுலீம்களுக்கு எளிதில் வாடகைக்கு வீடு கிடைப்பதில்லை. தனியார் நிறுவனங் களில் முசுலீம் இளைஞர்களுக்கு சாதாரண மாக வேலை கிடைப்பதில்லை. அரசு மருத் துவமனைகளிலும் பொது இடங்களிலும் அவர்கள் பாரபட்சமாகவே நடத்தப்படுகி றார்கள். இந்த உண்மைகளை நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென் நிறுவியுள்ள ''ப்ரோடிசி டிரஸ்ட்'' எனும் அமைப்பினர் தமது ஆய்வறிக்கையிலேயே அம்பலப்ப டுத்தியுள்ளனர்.

இந்நிலையில் முதல்வர் பட்டாச்சார்யா, மதராசாக்களை எச்சரித்து பயங்கரவாதப் பீதியூட்டியதும், ஆத்திரமடைந்த முசு லீம்கள் ஜமியா - இ - உலேமா ஹிந்த் என்ற இசுலாமிய அடிப்படைவாத அமைப்பின் தலைமையில் திரண்டு, ''பட்டாச்சார் யாவே, பகிரங்க மன்னிப்பு கேள்!'' என்று கல்கத்தாவில் பெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். இந்நிலைமையைக் கண்டு பீதிய டைந்த 'இடது முன்னணி' ஆட்சியாளர்கள், வருமாண்டில் நடைபெறவுள்ள உள்ளூ ராட்சித் தேர்தலில் முசுலீம் ஓட்டு வங்கியை இழக்க நேரிடுமோ என்ற அச்சத்தில் முதல்வரை நிர்பந் தித்தனர். உடனே 'மார்க்சிஸ்ட்' முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா, ''மதராசாக்களைப் பற்றி நான் அப்படிப் பேசவேயில்லை; பத்திரிகைகள் தவறாக செய்தி வெளியிட்டுள்ளன'' என்று கூசாமல் புளுகினார். வேடிக்கை என்னவென்றால் 'மார்க்சிஸ்ட்' கட்சியின் அதி காரபூர்வ வங்கமொழி நாளே டான ''ஜனசக்தி''யும் ''மதரா சாக்கள் தேசவிரோத நடவடிக் கையில் ஈடுபடுவதாக முதல்வர் குற்றச்சாட்டு!'' என்றே கொட்டை எழுத்தில் செய்தி வெளியிட்டது. இப்போது தமது கட்சி

''பட்டாச்சார்யாவே, பகிரங்க மன்னிப்பு கேள்!'' - மதராசாக்கள் பற்றி அவதூறு செய்து பயங்கரவாதப் பீதியூட்டிய மே.வங்க 'மார்க்சிஸ்ட்' முதல்வரைக் கண்டித்து கொல்கத்தாவில் முசுலீம்களின் ஆர்ப்பாட்டம்.





படிப்பகம்

www.padippakam.com



கொல்கத்தா அருகே பாங்கரில் முசுலீம் ஏழைக் குழந்தைகளுக்குக் கல்வியளிக்கும் மதராசா.

நாளேடும் தவறான செய்தி வெளியிட்டுள்ளதாக 'மார்க்சிஸ்ட்' முதல்வர் வெட்கமின்றி ஒப்புக் கொள்கிறார்.

இது ஏதோ போலி கம்யூனிஸ்டு முதல்வர் வாய் தவறி பேசி, பிறகு வாபஸ் பெற்ற சாதாரண விவகாரமாகக் கருத முடியாது. மே.வங்கம் மற்றும் திரிபுராவின் 'மார்க்சிஸ்டு' முதல்வர்களும், இடதுசாரி கூட்டணியும் அரசும் பல்வேறு விவகாரங்களில் பா.ஜ.க.வின் இந்துவெறி பாசிசக் கொள்கைகளுக்கு வெளிப்படையாக ஆதரவு தெரிவித்து வருகின்றன. பா.ஜ.க. அரசு, இந்திய இசுலாமிய மாணவர் இயக்கத்தின் (''சிமி'') மீது தடை விதித்ததை மே.வங்க இடது முன்னணி அரசு வரவேற்று ஆதரித்ததோடு, அத்தடைச் சட்டத்தை மே.வங்கத்தில் செயல்படுத்த ஒத்துழைப்பதாகவும் அறிவித்தது. டெல்லி நாடாளுமன்றத் தாக்குதலைத் தொடர்ந்து, பா.ஜ.க. அரசு தேசிய வெறி - போர்வெறியூட்டி பாக். மீது படையெடுக்க எல்லையில் படைகளைக் குவித்தபோது, மே.வங்க 'இடது' முன்னணித் தலைவர்கள், ''எல்லைக்கு அப்பாலுள்ள பயங்கரவாதப் பயிற்சி முகாம்களை ஒழிக்க வேண்டுமானால், பாக். மீது படையெடுப்பதுதான் ஒரே தீர்வு; பயங்கரவாதம் இனிமேல் தலைதூக்கவே முடியாமல் பாகிஸ்தானுக்குப் பாடம் புகட்டவேண்டும். இன்றைய நெருக்கடியான சூழலில் அரசியல் ரீதியில் இந்தியா ஒன்றுபட்டு நிற்கவேண்டும்'' என்று வெளிப்படையாகவே பேட்டியளித்தனர். ஆனால் 'மார்க்சிஸ்ட்' கட்சியின் அகில இந்தியத் தலைவர்களோ, பாக்.குடன் போர் வேண்டாம்; பேச்சு வார்த்தைகளின் மூலம் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று அறிக்கை வெளியிடுகின்றனர்.

கட்சியின் முடிவுக்கு எதிராகச் செயல்படும் மே.வங்கக் கட்சிக் கிளை மற்றும் மாநில முதல்வரின் நடவடிக்கைகளைக் கண்டு விமர்சிக்க முடியாமல் அகில இந்திய தலைவர்கள் கையைப் பிசைந்து கொண்டு நிற்கின்றனர். முதல்வர் அப்படிச் சொல்லவில்லை; இப்படிப் பேசவில்லை என்று சந்தர்ப்பவாத விளக்கமளித்து பூசிமெழுகி வருகின்றனர். ஆனால் மே.வங்க முதல்வரோ, பா.ஜ.க.வினரே ஆச்சரியப்படுமளவுக்கு அதன் பாசிசக் கொள்கைகளை கம்யூனிசப் போர்வைக்குள் இருந்து கொண்டு விசுவாசமாகச் செயல்படுத்தி வருகிறார். பா.ஜ.க. அரசு பயங்கரவாத ''பொடோ'' சட்டத்தைக் கொண்டு வந்தால், அதற்குப் போட்டியாக பாசிச ''பொகா'' சட்டத்தை ஏவி மக்களை ஒடுக்கத் துடிக்கிறார். பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுவதாகக் கூறி, பா.ஜ.க.வுக்கு முன்னோடியாக மே.வங்கத்தில் ஊர்வலம், பொதுக்கூட்டம், ஆர்ப்பாட்டங்களைக் குறிப்பிட்ட நேரத்தில், நகருக்கு வெளியே ஒதுக்குப்புறமான இடங்களில்தான் நடத்தவேண்டும் என்று உத்தரவிட்டு எச்சரிக்கிறார். ''நாங்களும் பா.ஜ.க.வும் ஒண்ணு, இதை அறியாதவன் தலையிலே மண்ணு!'' என்று பா.ஜ.க. அரசின் மாநில முதல்வராக தனது நடவடிக்கைகளின் மூலம் நிரூபித்து வருகிறார்.

மொத்தத்தில் பா.ஜ.க.வின் இந்துத்துவ கொள்கைகளை எதிர்ப்பதாகக் கூறிக் கொண்டு இந்துவெறி பாசிசக் கொள்கைகளைத் தாங்கள் ஆளும் மாநிலங்களில் விசுவாசமாக நடைமுறைப்படுத்துவதே போலி கம்யூனிஸ்டுகளின் சமரச - சந்தர்ப்பவாத உத்தியாகி விட்டது. பாசிச இந்திராவின் வெளியுறவு கொள்கைகள் முற்போக்கானவை; உள்நாட்டுக் கொள்கைகள் பிற்போக்கானவை என்று போலி கம்யூனிஸ்டுகள் சந்தர்ப்பவாத வியாக்கியானம் செய்து வந்ததைப் போலவே, இப்போது நாட்டைக் கவ்வியுள்ள பயங்கரவாதத்தை எதிர்ப்பதில் பா.ஜ.க.வுடன் ஓரணி; அதன் அரசியல் - பொருளாதாரக் கொள்கைகளைப் பொருத்தவரை நாங்கள் வேறணி என்று வியாக்கியானம் செய்யக் கிளம்பிவிட்டார்கள். இத்துரோகிகளின் மறைமுகமான ஆதரவைச் சாதகமாக்கிக் கொண்டு ஆளும் இந்துவெறி கும்பல் சட்டபூர்வமாகவே பாசிச அடக்குமுறையைத் திணித்து வருகிறது.

''போலி கம்யூனிச - போலி சோசலிசக் கட்சிகளின் ஆதரவு இல்லாமல் பாசிசம் அதிகாரத்துக்கு வரமுடியாது; பாசிசத்தின் வெற்றிக்கு முதன்மையான காரணம், பாசிசத்துடன் சமரசம் செய்து கொள்ளும் போலி கம்யூனிஸ்டுகளின் சந்தர்ப்பவாதக் கொள்கைதான்!'' என்று பாசிச எதிர்ப்புப் போராளியான தோழர் டிமிட்ரொல் ஏறத்தாழ 65 ஆண்டுகளுக்கு முன்பே அம்பலப் படுத்திக் காட்டினார். இந்த உண்மையை இந்திய போலி கம்யூனிஸ்டுகள் தமது நடவடிக்கைகள் மூலம் மீண்டும் நிரூபித்துக் காட்டி வருகிறார்கள்.

● மனோகரன்

7-ஆம் பக்கத் தொடர்ச்சி

விசாரணை கமிசன் குற்றம் சுமத்தியது. கமிசனின் பரிந்துரைக்கு ஏற்ப இந்த ஆறு போலீசாரின் மீது நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, இவர்களுள் ஒருவர் மீது கூட கிரிமினல் வழக்கு பதிவு செய்ய முடியாது எனக் கைவிரித்து விட்டது, காங்கிரசு - தேசியவாதி கூட்டணி அரசு.

❋ மும்பய் கலவரத்தின்பொழுது மும்பய் மாநகர போலீசு ஆணையாளராக இருந்த ஆர்.டி. தியாகி, பைதோனி பகுதியில் முசுலீமுக்குச் சொந்தமான சுலைமான் பேக்கரி கடைக்குள் புகுந்து, நிராயுதபாணியான 9 முசுலீம் தொழிலாளர்களைச் சுட்டுக் கொன்றார். மகாராஷ்டிரா மாநில அரசு இவரைக் கைது செய்ய முயன்றபொழுது, தியாகி நெஞ்சு வலி என மருத்துவமனையில் படுத்துக் கொண்டு கைதாகாமல் தப்பித்து விட்டார். இவர் மீதான கிரிமினல் வழக்கு ஆமை வேகத்தில் நடந்து கொண்டிருக்க, இந்த பயங்கரவாத கிரிமினல் குற்றவாளியோ பிணையில் வெளியே வந்து சுதந்திரமாக சுற்றிக் கொண்டிருக்கிறார்; இது ஒருபுறமிருக்க, சிவசேனாவில் சேர்ந்து அரசியல் பாதுகாப்பையும் தேடிக் கொண்டு விட்டார்.

சிறீகிருஷ்ணா கமிசன் 31 போலீசார் மீது கிரிமினல் வழக்குகள் பதிவு செய்ய வேண்டும் என மாநில அரசுக்குப் பரிந்துரைத்திருக்கிறது. ஆனால், மாநில அரசோ இந்த 31 போலீசாரில், 22 போலீசாரை அனைத்து கிரிமினல் வழக்குகளில் இருந்தும் விடுவித்து விட்டது. மீதி 9 போலீசார் மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்குகள் கூட, வேண்டுமென்றே போதிய ஆதாரங்கள் சேகரிக்கப்படாமல் உலுத்துப் போனவையாக இருக்கின்றன. மேலும், மும்பய் கலவரத்தையொட்டி இந்து மதவெறியர்கள் மீது தொடுக்கப்பட்ட வழக்குகளில் 60 சதவீத கிரிமினல் வழக்குகள் (1348 வழக்குகள்) போதிய ஆதாரமில்லை எனக் கூறப்பட்டு, கைகழுவப்பட்டு விட்டன.

சிறீகிருஷ்ணா கமிசன் விசாரணையில் ராம் தேசாய் என்ற போலீசு அதிகாரிக்கு எதிராகச் சாட்சியம் அளித்ததால், போலீசு அதிகாரிகளால் தொடர்ந்து மிரட்டப்பட்டு வரும் அன்சாரி, ''எங்களுக்கு நிவாரணம் வேண்டாம்; நீதி வேண்டும்'' எனக் கேட்கிறார்.

அரசு நிர்வாகம் முழுமையும் காவிமயமாக்கப்பட்டு வரும் இவ்வேளையில், 'மதச் சார்பற்ற' ஓட்டுக் கட்சிகள், இந்து மதவெறி பாசிசத்தை உறுதியாக எதிர்க்க முடியாமல், அதோடு தாஜா செய்து கொள்ளும் இவ்வேளையில், அன்சாரி கேட்கும் நீதி, தானாகக் கனிந்து கையில் விழுந்துவிடாது; அதைப் பெறுவதற்கு, புரட்சிகர அமைப்புகளின் தலைமையில் திரண்டு, இந்து மதவெறி பாசிசக் கும்பலை எதிர்த்துப் போராடுவதைத் தவிர, வேறு வழியும் கிடையாது.

● செல்வம்



படிப்பகம்

## அவலத்தில் குஜராத் மக்கள் அடக்குமுறையில் ஆட்சியாளர்கள்

**கூ**லி உயர்வு கேட்டால் ஒடுக்குவோம்; கோரிக்கை வைத்துப் போராடினாலும் ஒடுக்குவோம் என்று அடக்குமுறைச் சட்டங்களைக் கொண்டு எச்சரிக்கும் இந்துவெறி ஆட்சியாளர்கள், நிலநடுக்கப் பேரழிவில் வீடு - வாசல்களையும் உற்றார் உறவினர்களையும் இழந்து தவிக்கும் மக்கள் நிவாரண உதவி கேட்டுப் போராடுவது கூட குற்றம் என்று அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளார்கள்.

ஜனவரி 26 - குஜராத் நிலநடுக்கப் பேரழிவின் முதலாண்டு நினைவு நாள். மாளாத் துயரத்தை நெஞ்சிலே சுமந்து கொண்டு, தங்களுக்கு இன்னமும் நிவாரண உதவிகள் செய்யாத அரசைக் கண்டித்து ஆயிரக்கணக்கான மக்கள் அந்நாளில் அகமதாபாத் நகரிலுள்ள காந்தி ஆசிரமத்தின் அருகே உண்ணாவிரதமும் தர்ணா போராட்டமும் நடத்தினர். "லோக் அதிகார் மன்ச்" எனும் தன்னார்வ அமைப்பு ஜனவரி மாத மத்தியிலிருந்தே நிவாரண உதவிகள் செய்யாத அரசைக் கண்டித்து, பாதிக்கப்பட்ட மக்களைத் திரட்டி கட்ச் மாவட்டத்தின் பல பகுதிகளில் ஆர்ப்பாட்டங்களை நடத்தியது. குறிப்பாக, ராபார், பசாவ், அன்ஜார் ஆகிய தாலுகா வளர்ச்சி அலுவலகங்கள் முன்பாக பெருந்திரளாக பாதிக்கப்பட்ட மக்கள் திரண்டு, "நிவாரணத் தொகையைக் கொடு! வீடு கட்ட உதவித் தொகை கொடு!" என்ற முழக்கங்களுடன் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.



**நிலநடுக்கப் பேரழிவில் வீடு-வாசல்களை இழந்து. அரசாங்கத்திடமிருந்து எவ்வித நிவாரண உதவியும் கிடைக்காமல் சென்னைக்கு வந்து பிச்சை எடுக்கும் குஜராத் மக்கள்.**

இப்படிப் போராட்டம் நடத்தினால், இந்துவெறி ஆட்சியாளர்களின் யோக்கியதை நாடெங்கும் நாறிப் போகும் என்று பீதியடைந்த கட்ச் மாவட்ட ஆட்சியரான சிப்பார், போராட்டத்தை ஒடுக்க போலீசைக் கட்டவிழ்த்து விட்டார். எங்கெல்லாம் மக்கள் கூடி போராடுகிறார்களோ அங்கெல்லாம் போலீசார் பாய்ந்தோடிச் சென்று தடியடி நடத்தி அவர்களை விரட்டியடித்தனர். போராட்டத்தில் ஈடுபட்ட பட்-படியா, வாகத் முதலான பகுதிகளைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்களின் குடிசைகள் போலீசாரால் இடித்துத் தள்ளப்பட்டன. இதை எதிர்த்து பாதிக்கப்பட்ட மக்கள் சாலை மறியலில் இறங்கியதும் அவர்கள் மீது போலீசார் கண்மூடித்தனமாக தடியடி தாக்குதல் நடத்தி பலரது மண்டையை உடைத்தனர். ஜனவரி 26-ஆம் தேதியன்று காந்தி ஆசிரமம் அருகே தர்ணா போராட்டம் நடத்தியவர்கள் மீது தடியடி நடத்தி விரட்டியடித்த போலீசார், போராட்டம் நடந்த இடத்தில் அமைக்கப்பட்டிருந்த கொட்டகையையும், ஒலிபெருக்கிச் சாதனங்களையும் அடித்து நொறுக்கினர். குடிநீர் தட்டுப்பாடு நிலவும் சூழ்நிலையில், தர்ணா போராட்ட கொட்டகையில் வைக்கப்பட்டிருந்த தண்ணீர் பானைகளையும் உடைத்தெறிந்துள்ளனர். இதுவும் போதாதென்று, "லோக் அதிகார் மன்ச்" அமைப்பின் முன்னணியாளர்கள் மீது கொலை முயற்சி -கலவரத்தில் ஈடுபட்டது முதலான கொடிய குற்றங்களின் கீழ் பொய் வழக்குகளைச் சோடித்து சிறையிலடைத்துள்ளனர்.

ஆனால் எவ்வளவுதான் அடக்குமுறையை ஏவி போராட்டங்களை மூடி மறைத்தாலும், இந்துவெறி ஆட்சியாளர்களின் யோக்கியதை நாடெங்கும் அம்பலப்பட்டுக் கிடப்பதைத் தடுக்க முடியவில்லை. குஜராத் நிலநடுக்கப் பேரழிவினால் பாதிக்கப்பட்ட ஏழைகள் பலர், அரசாங்கத்திடமிருந்து எவ்வித நிவாரண உதவியும் கிடைக்காத நிலையில் வேறு வழியின்றி நாடெங்கும் பெருநகரங்களில் குடும்பம் குடும்பமாகப் பிச்சை எடுத்து வயிற்றைக் கழுவுகின்றனர். அண்மையில், சென்னை - அண்ணாசாலையில் போக்குவரத்து "சிக்னல்"களின் அருகே வாகனங்களில் வருவோரிடம் கைக்குழந்தையுடன் பிச்சை எடுக்கும் குஜராத் ஏழைக் குடும்பங்களைப் பற்றிய செய்தி நாளேடுகளில் வெளிவந்தன. சென்னையில் மட்டும் இப்படி 200 குடும்பங்கள் நெரிசல் மிக்க சாலைகளில் பிச்சை எடுத்துக் கொண்டு பரிதவிக்கின்றன.

அமெரிக்கா - ரசியாவிடமிருந்து பல ஆயிரம் கோடிகளுக்கு அதிநவீன ஆயுதங்களை வாங்கிக் குவித்தும், இன்னும் பல நூறு கோடிகளை வாரியிறைத்து "அக்னி" வாணவேடிக்கை காட்டியும், 'தேசப் பாதுகாப்பு' என்ற பெயரில் ஆளும் இந்துவெறி பாசிச கும்பல் கொட்டமடிக்கிறது. ஆனால் இலட்சக்கணக்கான குஜராத் மக்கள் வாழவழியின்றி தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். இதைவிட தேசிய அவமானம் வேறு இருக்க முடியுமா?

## அமெரிக்காவில் தொடரும் பாசிச காட்டுமிராண்டித்தனம்

**ஏ**காதிபத்தியவாதிகள், நிறவெறியும் இனவெறியும் ஆக்கிரமிப்பு வெறியும் கொண்ட பாசிசக் காட்டுமிராண்டிகள், அதிலும் செப்டம்பர் 11 பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு ஆசிய நாடுகளைச் சேர்ந்த முசுலீம்கள் மீது அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் காட்டும் வக்கிரமும் வெறுப்பும் அடக்குமுறையும் எல்லைமீறிப் போய்விட்டன.

பாகிஸ்தானைச் சேர்ந்த உஸ்மாநஹீத் என்ற பெண், அமெரிக்காவிலுள்ள நியூஜெர்சி நகரில் கடந்த பத்தாண்டுகளாகக் குடியிருந்து வருகிறார். கடந்த அக்டோபர் 3-ஆம் தேதியன்று அமெரிக்க புலனாய்வுப் படையைச் (எஃப்.பி.ஐ) சேர்ந்த அதிகாரிகளும், குடிபெயர்ந்தோர் துறையினரும் நள்ளிரவில் அவரது வீட்டைச் சோதனையிட வந்தனர். சோதனைக்குப் பின்னர் அவரைக் கைது செய்வதாகக் கூறினர். காரணம் கேட்டபோது, சில நாட்களுக்கு முன்பு அவரது சகோதரர் கைது செய்யப்பட்டதாகவும் அவரிடம் உஸ்மா நஹீத்தின் முகவரி இருந்ததாகவும் கூறினர். நஹீத், பிறந்து சில நாட்களேயான கைக்குழந்தையுடன் இருந்ததால், கனரக வாகன ஓட்டுநரான அவரது கணவர் அன்சர் மெக்மூத் என்பவரைக் கைது செய்து இழுத்துச் சென்றனர்.

ஆனால் மூன்று மாதங்களுக்கு மேலாகியும் அன்சர் இன்னமும் விடுதலை செய்யப்படவில்லை. அவர் மீது என்ன வழக்கு போடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படவில்லை. கைது செய்யப்பட்ட

www.padippakam.com



உஸ்மா நஹீதின் சகோதரர் என்ன ஆனார் என்றும் தெரியவில்லை. இவர்கள் மீது ''விசா''காலம் முடிந்தபின்னரும் அனுமதியின்றி அமெரிக்காவில் தங்கியதாகக் குற்றம் சாட்டப்படலாம் என்கிறார் ஒரு அமெரிக்க அதிகாரி. ஆனால் ''விசா'' காலம் முடிந்த பின்னர் தங்கியதற்காக எந்த நாட்டின் அரசும் விசாரணையின்றி ஒருவரை சிறையிலடைப்பதில்லை. குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் வெளியேறுமாறு எச்சரிப்பதுதான் வழக்கமாக நடக்கும். ஆனால் செப்டம்பர் 11-இல் நடந்த பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு அமெரிக்காவில் சந்தேகப்படும் வெளிநாட்டவரைக் கைது செய்து வதைப்பது சர்வசாதாரணமாகிவிட்டது. குடிபெயர்ந்தோர் துறையினர், வெளிநாடுகளைச் சேர்ந்த 6 லட்சம் மாணவர்களின் பின்னணியை ஆராய்ந்து வருவதோடு, சான்டியாகோவில் 50 மாணவர்களைக் கைது செய்துள்ளனர்.

கடந்த அக்டோபர் 26-ஆம் தேதியன்று அமெரிக்காவில் நிறைவேற்றப்பட்ட ''யு.எஸ். பேட்ரியாட்'' எனும் பாசிச பயங்கரவாதச் சட்டப்படி, அமெரிக்கக் குடிமக்கள் அல்லாத பிற நாட்டவரைப் பயங்கரவாதிகள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்து சிறையிலடைக்க முடியும். இதற்கு தகுந்த ஆதாரங்களைக் காட்ட வேண்டும் என்பது அவசியமில்லை. இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னரே, தெற்காசியா மற்றும் அரபு நாடுகளைச் சேர்ந்த 1200 பேர் அமெரிக்க புலனாய்வுப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் பாகிஸ்தானியர்கள் ஆவர். அவர்களில் ஒருவர்தான் அன்சர் மெக்மூத்.

சிறைகளில் இத்தகைய விசாரணைக் கைதிகளின் நிலைமை மிகமோசமாக உள்ளது என்று அமெரிக்க மனித உரிமை அமைப்புகளே குற்றம் சாட்டுகின்றன. அவர்கள் கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டு பூட்சு கால்களால் எட்டி உதைக்கப்படுகிறார்கள்; இசுலாமிய மத உணர்வுகளுக்கு எதிராக அவர்களைப் பன்றி இறைச்சியை உண்ணச் சொல்லி கட்டாயப்படுத்தி வதைக்கிறார்கள் என்று அமெரிக்காவில் குடியேறிய தெற்காசிய நாட்டவர்களின் சங்கங்கள் கண்டனம் தெரிவித்துள்ளன. குடிபேறியவர்களை விசாரணையின்றி சிறையிலடைத்து வதைக்கும் கொடுஞ்செயலை எதிர்த்து, தெற்காசிய நாட்டவர்கள் கடந்த ஜனவரியில் நியூஜெர்சி நகரில் ஆர்ப்பாட்டமும், சிறைச்சாலை அருகே ஊர்வலமும் நடத்தியுள்ளதோடு, வழக்கு மன்றத்திலும் முறையிட்டுப் போராடி வருகின்றனர்.

குடியேறிய வெளிநாட்டவர் மீது பாய்ந்து குதறும் அமெரிக்கப் பாசிசக் காட்டுமிராண்டிகளுக்கு உலகின் பிற நாடுகளது ஜனநாயகம் - மனித உரிமை பற்றிப் பேச என்ன அருகதை இருக்கிறது?

## லாவோஸ்: போர் முடிந்தாலும் கொலைகள் ஓயவில்லை

ஆப்கானில் அமெரிக்காவின் குண்டுவீச்சுத் தாக்குதல் முடிவுக்கு வந்துவிட்டது. ஆனால் தென்கிழக்காசியாவில் உள்ள சின்னஞ்சிறு நாடானலாவோசில், 28 ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்கா நடத்திய ஆக்கிரமிப்புப் போரின்போது வீசப்பட்ட குண்டுகள் அவ்வப்போது வெடித்து, இன்னமும் பலர் கொல்லப்பட்டு வருகிறார்கள்.

1964-லிருந்து 1973 வரை லாவோஸ் நாட்டின் மீது அமெரிக்க வல்லரசு ஏறத்தாழ 20 லட்சம் டன் எடையளவுக்குக் குண்டுகளை வீசியது. அமெரிக்கா வீசிய குண்டுகளின் அளவானது இரண்டாம் உலகப் போரில் பயன்படுத்தப்பட்ட குண்டுகளின் அளவைவிட மிக அதிகமாகும். உலகிலேயே மிக அதிகமாக குண்டுவீச்சுத் தாக்குதலுக்கு ஆளான நாடு லாவோஸ்தான்! இந்தோசீனா தீபகற்பத்தை ஆக்கிரமிக்கும் வெறியில் வியட்நாம், லாவோஸ், கம்போடியா ஆகிய சின்னஞ்சிறு நாடுகளின் மீது மட்டும் ஏறத்தாழ 35 லட்சம் டன் எடையுள்ள குண்டுகளை அமெரிக்கா வீசியுள்ளது. இவற்றில் பல லட்சம் டன் எடையுள்ள குண்டுகள் வெடிக்காத நிலையில் இப்பிராந்தியம் முழுவதும் சிதறிக் கிடக்கின்றன. இதில் லாவோஸ் நாட்டில் மட்டும் உள்ள வெடிக்காத குண்டுகளின் அளவு மட்டும் ஏறத்தாழ 6 லட்சம் டன்களாகும்.

வானிலிருந்து வீசப்படும் உயர் அழுத்த வெடிகுண்டுகள், கையெறி குண்டுகள், துப்பாக்கிக் குண்டுகள், பீரங்கி குண்டுகள் என 200 வகையான குண்டுகள் லாவோஸ் நாடெங்கும் சிதறிக் கிடக்கின்றன. வெளிப்படையாகக் கண்ணுக்குத் தெரிந்தால் இவற்றை அகற்றிவிடலாம். ஆனால் காடுகளிலும் புதர்களிலும் வயல்வெளிகளிலும் மண்ணில் புதைந்து கிடக்கும் இக்குண்டுகள் எப்போது வெடிக்கும் என்று யாருக்கும் தெரியாது. லாவோஸ் நாட்டின் 18 மாகாணங்களில் மூன்று மாகாணங்கள் தவிர இதர அனைத்து மகாணங்களிலும் குண்டுவெடிப்புப் பயங்கரம் தொடர்ந்து நீடிப்பதாக அனைத்துலக நிலக்கண்ணி வெடி அகற்றும் நிபுணர்களும் உடல் ஊனமுற்றோர் சங்கங்களும் எச்சரித்துள்ளன.



ஆக்கிரமிப்புப் போருக்குப் பின்னரும் லாவோஸ் மக்களைக் காவு கொள்ளும் அமெரிக்கக் குண்டுகள்.

டென்னிஸ் பந்துபோல மஞ்சள் நிறமுடைய சிறிய கையெறி குண்டுகள் மரத்தடியில் கிடக்கும்போது அவற்றைப் பழங்கள் என்று கருதி கையிலெடுத்து வெடித்துச்சிதறிய குழந்தைகள்; மூங்கில் காடுகளில் மரம் வெட்டும்போது குண்டு வெடித்து மாண்ட விவசாயிகள்; விளைநிலத்தில் களையெடுக்கும்போது குண்டு வெடிப்பில் இறந்த பெண்கள் - என லாவோஸ் நாடெங்கும் பயங்கரங்கள் தொடர்கின்றன. 1973-லிருந்து 2000 ஆண்டுவரை இதுபோன்ற குண்டு வெடிப்புகளில் மட்டும் 11,000 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 20,000-க்கும் மேற்பட்டோர் உடல் ஊனமாகியுள்ளனர்.

ஆக்கிரமிப்புப் போர் முடிந்து பல ஆண்டுகளாகிவிட்ட பின்னரும் சின்னஞ்சிறு நாடான லாவோஸ் இன்னமும் மீளமுடியாத துயரத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. கொலைகார அமெரிக்காவோ உலகெங்கும் பயங்கரவாத எதிர்ப்பு - ஜனநாயக நாடகமாடிக் கொண்டு, மேலாதிக்க ஆக்கிரமிப்புப் போரைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

## தனியார்மயம்: அரசுத்துறைகள் மட்டுமா? ஆரம்பப் பள்ளிகளும்தான்!

தனியார் பள்ளிகளில் கல்விக் கட்டணம் அதிகமாக இருப்பதால் அரசாங்கத்தின் இலவசப் பள்ளிகளில் குழந்தைகளைப் படிக்க வைக்கும் ஏழைகளின் தலையில் இடியை இறக்கியுள்ளது, டெல்லி மாநிலத்தை ஆளும் காங்கிரசு அரசு. ''ஒரு குழந்தைக்கு ஆரம்பக் கல்வி அளிக்க ஆண்டுக்கு ஏறத்தாழ ரூ. 800 செலவாகிறது. ஆனால் கல்விக் கட்டணமாக பெற்றோர்களிடமிருந்து ரூ. 4 முதல் ரூ. 10 வரைதான் வசூலிக்கப்படுகிறது. இதனால் அரசாங்கத்துக்குப் பெருத்த இழப்பு ஏற்படுகிறது'' என்று நியாயவாதம் பேசும் டெல்லி மாநில காங்கிரசு ஆட்சியாளர்கள், அரசாங்கப் பள்ளிகளைத் தனியாருக்குத் தாரைவார்க்கக் கிளம்பிவிட்டார்கள்.

எந்தெந்த அரசாங்கப் பள்ளிகளில் மாணவர்களின் தேர்ச்சி விகிதம் குறைவாக உள்ளதோ, அந்தப் பள்ளிகள் தனியார் கல்வி



படிப்பகம்

www.padippakam.com



நிறுவனங்களிடம் கையளிக்கப்படும். இதுதவிர, எந்தவொரு தனியார் கல்வி நிறுவனம், அரசாங்கம் செலவிடும் தொகையில் பாதியை - அதாவது ஒரு மாணவனுக்கு ரூ. 400 வீதம் - ஏற்க முன்வந்தால், அப்பள்ளி தனியார் கல்வி நிறுவனத்துக்கு ஒப்படைக்கப்படும். இப்பள்ளிகளில் ஆரம்பக் கல்வியளிக்க ஒரு மாணவனிடமிருந்து குறைந்தபட்சம் ரூ. 100 கட்டணமாக வசூலிக்கப்படும். இலவசக் கல்விக்கு மதிப்பு இல்லை. பெற்றோருக்கும் அக்கறையில்லை. ஆசிரியர்களுக்கும் பொறுப்பு இல்லை. அரசாங்கத்திடமும் நிதி இல்லை. எனவே அரசாங்கப் பள்ளிகளைத் தனியாரிடம் ஒப்படைப்பதில் தவறு இல்லை என குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வி அளிப்பதையே மறுத்து தனது சமூகப் பொறுப்பையும் கைகழுவிக் கொண்டுள்ளது, டெல்லி மாநில அரசு.

சில ஆண்டுகளுக்கு முன்பு, மாணவர்கள் படித்துவிட்டுச் சொந்த நாட்டிற்கு சேவை செய்யாமல் வெளிநாடுகளுக்குச் சென்றுவிடுகிறார்கள் என்று குற்றம் சாட்டி, டெல்லி மாநில அரசு கல்லூரி மற்றும் உயர் கல்விக்கு வழங்கப்படும் நிதி ஒதுக்கீட்டைப் பட்ஜெட்டில் குறைத்தது. இப்போது அடிப்படை - ஆரம்பக் கல்வி அளிப்பதும் தண்டச் செலவு என்று தனியார் கல்வி வியாபாரிகளின் பகற் கொள்ளைக்குப் பாதச் சேவை செய்யக் கிளம்பி விட்டது.

டெல்லி மாநிலத்தில் இனி தொழிலாளர்கள், உதிரிப் பாட்டாளிகள், விவசாயிகளின் ஏழை குழந்தைகள் அரசாங்கப் பள்ளிகளில் ஆரம்ப - இலவசக் கல்வி கூட பெற முடியாமல் தற்குறிகளாக்கப்படுவார்கள். அரசு பள்ளிகளில் பணியாற்றி வரும் ஆசிரியர்கள் இனி தனியார் கல்வி முதலாளிகளிடம் அற்பக் கூலிக்குக் கொத்தடிமைகளாக்கப்படுவார்கள். இதுதவிர, தனியார் கல்வி வியாபாரிகள் தமது விருப்பப்படி ஆசிரியர்களை நியமித்துக் கொள்ளவும் நீக்கவும் உரிமை அளிக்கப்பட்டுள்ளதோடு, மாணவர்களின் தேர்ச்சி விகிதத்தைப் பொருத்து சம்பளம் மற்றும் படிகளை அளிக்கலாம் என அரசு பரிந்துரைத்துள்ளது.

குழந்தைகள் அனைவருக்கும் இலவச கட்டாயக் கல்வியளிக்க உத்திரவாதம் செய்ய வேண்டும் என அரசியல் சட்டத்தின் வழிகாட்டும் நெறிமுறைகள் வலியுறுத்துகிறது. மேலும் அண்மையில், குழந்தைகள் கல்வி பெறும் உரிமைக்கான மசோதாவை நிறைவேற்றியுள்ள இந்திய அரசு, 6 முதல் 14 வயது வரையிலான குழந்தைகளுக்குக் கல்வியை அடிப்படை உரிமையாக்கியுள்ளது. ஆனால் தனியார்மய - தாராளமய துரோக வெள்ளத்தில் மக்களின் அடிப்படை உரிமைகளும் காகிதச் சட்டங்களும் அடித்துச் செல்லப்படுகின்றன.

டெல்லி மாநில அரசுக்கு முன்னதாக, மும்பய் நகரில் அரசு பள்ளிகளைத் தனியார் கல்வி நிறுவனங்களுக்குத் தாரை வார்க்கும் திட்டம் வேகமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அதன் வழியில், அரசாங்க ஆரம்பப் பள்ளிகளைப் பெற்றோர் - ஆசிரியர் கழகத்திடம் ஒப்படைக்க பாசிச ஜெயா கும்பல் முயற்சித்து வருகிறது.

## கொலைகார முதலாளிக்கு பா.ஜ.க. அரசு கௌரவ விருது


பல்வேறு துறைகளில் சிறப்பாகப் பணியாற்றியோருக்கு ஆண்டுதோறும் பத்ம ஸ்ரீ, பத்ம பூஷன், பத்ம விபூஷண் ஆகிய விருதுகள் இந்திய அரசால் அளிக்கப்பட்டு வருகின்றன. தகுதியற்ற பலருக்கும் ஆளும் வர்க்க விசுவாசிகளுக்கும் பலமுறை இவ்விருதுகள் வழங்கப்பட்டு வந்தன. இதிலே இன்னும் ஒருபடி முன்னேறி, நாடறிந்த கொலைகார முதலாளி கேஷுப் மகிந்திரா என்பவருக்கு இவ்வாண்டு பத்ம விபூஷண் விருது வழங்க பா.ஜ.க. அரசு முடிவு செய்துள்ளது.

யார் இந்த கேஷுப் மகிந்திரா? ஜீப், கார், சுமை ஊர்திகள் உற்பத்தியிலும் மற்றும் பல்வேறு தொழில்களிலும் ஈடுபட்டுள்ள "மகிந்திரா அண்டு மகிந்திரா" நிறுவனத்தின் தலைவராக உள்ள தரகுப் பெருமுதலாளி. கேஷுப் மகிந்திரா, போபால் யூனியன் கார்பைடு இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் தலைவராக இருந்தபோதுதான், அந்த ஆலையிலிருந்து வெளியேறிய நச்சு வாயு தாக்கி பல்லாயிரக்கணக்கானோர் பலியானார்கள். மேலும் பல்லாயிரக்கணக்கான உழைக்கும் மக்கள் தீராத நோய்கள் தாக்கி அங்கங்கள் விகாரமாகி இன்னமும் வேதனையில் துடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

"மெதில்-ஐசோ-சயனைடு" என்னும் நச்சு வாயுவை வெளியேற்றி பல்லாயிரக்கணக்கான போபால் மக்களைப் படுகொலை செய்த யூனியன் கார்பைடு ஆலையானது அமெரிக்கப் பன்னாட்டு மூலதன நிறுவனம் ஆகும். இந்நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பில் இருந்தவர் வாரன் ஆண்டர்சன் என்ற அமெரிக்கர். இந்நிறுவனத்தின் இந்தியப் பிரிவுக்குத் தலைவராக இருந்தவர்தான் கேஷுப் மகிந்திரா.

போபாலில் நடந்த நச்சு வாயு படுகொலையை யொட்டி யூனியன்கார்பைடு நிறுவனத்தின் நிர்வாகிகள், அதிகாரிகள் மீது மையப் புலனாய்வுத் துறை (சி.பி.ஐ) வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கில் வாரன் ஆண்டர்சனும், கேஷுப் மகிந்திராவும் பிரதான குற்றவாளிகள் என்று சி.பி.ஐ. குற்றம் சாட்டியுள்ளது. 1987-ஆம் ஆண்டு டிசம்பர் முதல் நாளன்று நீதிமன்றத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட போதிலும் கடந்த 15 ஆண்டுகளில் வாரன் ஆண்டர்சனோ, கேஷுப் மகிந்திராவோ இதுவரை நீதிமன்றத்துக்கு வரவேயில்லை. வழக்கு விசாரணைக்காக வாரன் ஆண்டர்சனை இந்தியாவுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாதிக்கப்பட்ட போபால் மக்கள் பல்வேறு அமைப்புகள் மூலம் இதுவரை 10 முறை மத்திய அரசிடம் மனுக்களைக் கொடுத்துப் போராடியுள்ளனர். ஆனால் அக்கொலைகாரனை இந்தியாவுக்கு இழுத்து வந்து வழக்கு மன்றத்தில் நிறுத்தி தண்டிக்க இந்திய ஆட்சியாளர்கள் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கேஷுப் மகிந்திராவையும் தண்டிக்கவில்லை.

அதேசமயம் இத்தரகுப் பெருமுதலாளி நாட்டிற்கு அரிய சேவைகள் செய்துள்ளதாகப் பாராட்டி, வெட்கமின்றி விருது அளிக்கக்கிளம்பியுள்ளது பா.ஜ.க. அரசு. அடுத்த ஆண்டில் இத்துரோகிகள், கொலைகாரன் வாரன் ஆண்டர்சனுக்கு பத்ம ஸ்ரீ விருது அளித்து கௌரவித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.




கொலைகார முதலாளிக்கு விருது வழங்கிய மக்கள் விரோத ஆட்சியாளர்களுக்கு எதிராக போபால் மக்களின் ஆர்ப்பாட்டம்.



படிப்பகம்

www.padippakam.com

### நான்கு மாநிலத் தேர்தல் முடிவுகள்:

# இந்து மதவெறி மீது விழுந்த பேரிடி

பாரதீய ஜனதா - ஆர்.எஸ்.எஸ். உள்ளிட்ட இந்து மதவெறி பாசிச பரிவாரங்கள் நடந்து முடிந்த நான்கு மாநிலத் தேர்தல்களிலும் மண்ணைக் கவ்வியிருக்கின்றன. தேர்தல் ஆணையத்தைக் கைக்குள் போட்டுக் கொண்டு, அதிகார முறைகேடுகள் செய்து, கோடிகோடியாகப் பணத்தை வாரி இறைத்து, ஜெயலலிதா போட்டியிட்டு வெற்றி பெற்று பதவியைப் பிடித்த ஆண்டிப்பட்டி இடைத்தேர்தல் கிளப்பிய புழுதி தமிழ்நாட்டு மக்களின் கவனத்தை மூழ்கடித்துவிட்டது. எனவே, வடஇந்தியாவிலும், கிழக்கிலும் இந்தியாவை ஆளும் கூட்டணித் தலைமைக் கட்சி அடைந்த படுதோல்வி அவ்வளவு பெரிதாகப் பேசப்படவில்லை.

குறிப்பாக, பசு வளையம், கைலாசம், இராமஜென்ம பூமி என்றெல்லாம் இந்து மத வெறியர்கள் கொண்டாடும் ''புண்ணிய பூமி''யான உத்திரப் பிரதேசத்திலும், உத்திராஞ்சலிலும் அவர்கள் கட்சியைத் தோற்கடித்து, இடுப்பை முறித்திருக்கிறார்கள். பார்ப்பன மேல்சாதியினர் பெரும்பான்மையாக வாழும் உத்திராஞ்சல் மாநிலம், அவர்களின் ஆதிக்கத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவே பா.ஜ.க. ஆதரவுடன் சமீபத்தில் உருவாக்கப்பட்டது. இரண்டு ஆண்டுகளாகியும் எவ்வித சமூகப் பொருளாதார முன்னேற்றமும் காணாத நிலையில் பா.ஜ.க. எதிர்பாராத வகையில் படுதோல்வி கண்டு ஆட்சியை இழந்தது. குழுச் சண்டைகளால் பிளவுபட்டிருந்த போதும் காங்கிரசு மீண்டும் உயிர்பெற்று ஆட்சியைப் பிடித்து விட்டது.

இந்துத்துவ சித்தாந்தத்தின் சின்னமாக அயோத்தி பாபரி மசூதி இடிப்பு - இராமன்கோவில் கட்டும் இயக்கத்தை முன் வைத்து கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக அரசியல் நடத்தி வருகிறது ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பல். 1990களின் ஆரம்பத்தில் உ.பி.யில் அக்கும்பல் ஆட்சியைப் பிடித்ததை இந்த அரசியலின் வெற்றியாகக் கருதியது. ஆனால், உ.பி.யில் பா.ஜ.க. ஆட்சியைப் பிடிக்க முடிந்ததற்கான காரணம் வேறாக இருந்தது. போஃபார்ஸ் உட்பட இலஞ்ச - ஊழல் அதிகார முறைகேடுகளால் காங்கிரசைத் துடைத்தெறிந்த உ.பி. வாக்காளர்கள் வி.பி. சிங் தலைமையிலான ஜனதாவைப் பெரும்பான்மையாக ஆதரித்தனர். அதோடு இளைய பங்காளி என்கிற முறையில் கணிசமான ஆதரவு பெற்றிருந்தது பா.ஜ.க. ஆனால், விரைவிலேயே ஜனதா தளம் சிதறிப்போன நிலையில், காங்கிரசு மீண்டும் உயிர் பெறுவதை வெறுத்த உ.பி.வாக்காளர்கள், வேறு மாற்று இல்லாத நிலையில் பா.ஜ.க.வை ஆதரித்து ஆட்சியில் அமர்த்தினர். ஆனால், இதைத் தமது இந்துத்துவா சித்தாந்தத்துக்குக் கிடைத்த வெற்றி எனக் கருதி, மத்தியில் ஆட்சி புரிந்த காங்கிரசின் நரசிம்ம ராவ் கும்பலுடன் இரகசிய உடன்படிக்கை வைத்துக் கொண்டு, பாபரி மசூதியை இடித்து, நாடு முழுவதும் மதவெறிப் படுகொலையை நடத்தியது, ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. பாசிச கும்பல்.

அடுத்து வந்த உ.பி. மாநிலத் தேர்தல்களில் பாபரி மசூதி இடிப்புக்கு மக்கள் ஆதரவு தெரிவித்து ஆட்சியில் அமர்த்துவார்கள் என்று எண்ணியிருந்த ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பலுக்குப் பேரிடி கிடைத்தது. அக்கும்பலைத் தோற்கடித்து முலயம் சிங் - கன்சிராம் தலைமையிலான சமாஜ்வாதி - பகுஜன் சமாஜ் கட்சிக் கூட்டணிக்குப் பெரும்பான்மை கொடுத்து ஆட்சியில் அமர்த்தினர். குறிப்பாக, பிற்பட்ட - தாழ்த்தப்பட்ட சாதிகள் மற்றும் சிறுபான்மையினர் ஆதரவோடு இக்கூட்டணிக்குக் கிடைத்த வெற்றி, இந்து மத வெறிக்கு எதிராகக் கிடைத்த வெற்றியாகக் கருதப்பட்டது. ஆனால், முலயம் - கன்சிராம் கட்சிகளுக்கிடையே சாதி அடிப்படையிலான பதவிச் சண்டை வெடித்து, அக்கூட்டணி ஆட்சி கவிழ்ந்து போனது.

எதிர்த்தரப்பின் இந்தப் பிளவைப் பயன்படுத்திக் கொண்டும், பாபரி மசூதி - இராமன் கோவில் பிரச்சினையை அடக்கி வைத்துக் கொண்டும் அடுத்த உ.பி. தேர்தலைச் சந்தித்த பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பல் கணிசமான வெற்றியைப் பெற்றாலும், பெரும்பான்மை பலம் பெற்று ஆட்சியைப் பிடிக்க முடியவில்லை. பகுஜன் சமாஜ் கட்சியுடன் சந்தர்ப்பவாதக் கூட்டு வைத்து மாயாவதி ஆறு மாதம் - கல்யாண் சிங் ஆறு மாதம் எனப் பேரம் பேசி ஆட்சி அமைத்தது. ஆறுமாதம் ஆட்சி நடத்திய மாயாவதி பா.ஜ.க.வுக்கு ஆதரவு தர மறுத்துவிட்டார். அதன் பிறகு காங்கிரசு, பகுஜன் சமாஜ் கட்சிகளைப் பிளந்து, கட்சி மாறிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மந்திரி பதவிகளும், பெரும் விலையும் கொடுத்து நாட்டிலேயே கேடு கெட்ட ஒரு கிரிமினல் ஆட்சியை உ.பி.யில் நடத்திவந்தது, பா.ஜ.க.

பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்குள்ளேயே வெடித்த குழுச் சண்டை - பதவிச் சண்டை காரணமாக, இரண்டு முறை முதல் மந்திரிகளை மாற்றியது. ஆனால், இந்தக் கும்பலின் ஆட்சியில் இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள், கிரிமினல்மயமாதல், பொருளாதார நெருக்கடிகள் அதிகரித்து வந்தன. உலகமயமாதல், தனியார்மயமாதல், தாராளமயமாதல் - புதிய பொருளாதார கொள்கையின் தாக்குதல்களைச்

அயோத்தியில் இருந்து தில்லி வரை நடந்த சேத்தவாணி சந்த் யாத்திரை: அயோத்தி பிரச்சினையைச் சூடேற்றி ஓட்டைக் கவ்வ நினைத்த பா.ஜ.க. மண்ணைக் கவ்வியது.





படிப்பகம்

சகித்துக் கொள்ள முடியாமல் மக்களிடையே ஆத்திரம் பொங்கி வழிந்து கொண்டிருந்த நிலையில், மீண்டும் அயோத்தி விவகாரத்துக்கு முக்கியத்துவமளித்து, இராமன் கோவில் கட்டுவதற்கு நாள் குறித்து - உண்மையில் மற்றொரு சுற்று மதவெறிப் படுகொலைகளுக்கு நாள் குறித்து - மதவெறித் தீ மூட்டிக் குளிர் காய்வதற்கு எத்தணித்தது. மறுபுறம் பாகிஸ்தானுக்கு எதிரான போர்வெறிக் கூச்சல், படைக் குவிப்பு என்று தேசிய வெறியூட்டுவதன் மூலமும், எல்லை கடந்த பயங்கரவாதம், இசுலாமிய பயங்கரவாதம், பாகிஸ்தானிய சதி - நாசவேலை என்று பீதியூட்டுவதன் மூலமும் அரசியல் ஆதாயம் அடைந்துவிட முடியும் என்று நம்பியது.

ஆனால், இவை எதனாலும் உ.பி.யில் மட்டுமல்ல, தேர்தல்கள் நடந்து முடிந்த நான்கு மாநிலங்களிலும் பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பலின் வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. உத்திரப் பிரதேசத்தில் முதலாவது பெரிய கட்சி என்கிற நிலையை இழந்து, மூன்றாவது நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது. கலைக்கப்பட்ட சட்டப் பேரவையில் 160 எம்.எல்.ஏ.க்களையும் ஏறக்குறைய 60 கட்சி மாறிகளின் ஆதரவையும் பெற்றிருந்த பா.ஜ.க., இப்போது 88 தொகுதிகளிலும் அதனின் கூட்டாளிகள் 19 தொகுதிகளிலும் மட்டுமே வெற்றி பெற்றுள்ளனர்.

உத்திராஞ்சலில் தனிப் பெரும்பான்மை பெற்றிருந்த பா.ஜ.க. இம்முறை 19 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற முடிந்தது. பஞ்சாபில் அகாலி தளத்தின் இளைய பங்காளியாகச் சேர்ந்து கூட்டணி ஆட்சியில் பங்கேற்றிருந்த பா.ஜ.க., இத்தேர்தலில் காங்கிரசிடம் அக்கூட்டணி ஆட்சியைப் பறிகொடுத்ததுடன், 19 எம்.எல்.ஏ.க்களைப் பெற்றிருந்த பா.ஜ.க. மூன்று தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்று படுகுப்புற வீழ்ந்தது. எல்லைப்புற மாநிலமான பஞ்சாபில் பாகிஸ்தான் எதிர்ப்பு போர்வெறி - தேசிய வெறி அவர்களைக் காப்பாற்றவில்லை. அகாலிதளம் — பா.ஜ.க. கூட்டணியின் இலஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள், புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாக அமலாக்கப்பட்ட மக்கள் விரோத நடவடிக்கைகள் ஆளும் கூட்டணியின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தது.

உ.பி.யைப் போலவே கட்சி மாறிகளைக் கொண்டு ஆட்சியைப் பிடிப்பதற்கு பா.ஜ.க. எத்தணித்தது, மணிப்பூர் மக்களிடையே வெறுப்பைத்தான் ஏற்படுத்தியது. இதனால் முன்பு 26 எம்.எல்.ஏ.க்களைக் கொண்டிருந்த பா.ஜ.க. 46 தொகுதிகளில் போட்டியிட்டு 4 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்று அடிமட்டத்திற்குத் தள்ளப்பட்டுவிட்டது.

இந்தத் தேர்தல்களோடு, ''ஒரு தேசியக் கட்சி'' என்று பீற்றிக் கொண்டிருந்த பா.ஜ.க. சில வட்டாரங்களில் மட்டுமே செல்வாக்குள்ள ''பிராந்தியக் கட்சி'' என்பது முடிவாகிவிட்டது. நாட்டிலுள்ள சிறியதும் பெரியதுமான 28 மாநிலங்களில் குஜராத், ஜார்கண்ட் மற்றும் குட்டி மாநிலமான இமாச்சலப் பிரதேசத்தில் மட்டுமே அக்கட்சி ஆட்சி நடக்கிறது. அக்கட்சியை இளைய பங்காளியாகக் கொண்ட கூட்டணி கட்சிகளின் ஆட்சி அரியானா மற்றும் ஒரிசாவில் உள்ளன. ஆக, பெரும்பாலான மாநிலங்களில் பா.ஜ.க ஆட்சி இழப்பு உட்பட செல்வாக்கிழந்த நிலையில் உள்ளது. இதனால் வரவிருக்கும் குடியரசுத் தலைவர் தேர்தலிலும், ''பொடோ'' போன்ற பா.ஜ.க.வின் இச்சைக்குரிய சட்டங்களை மாநிலங்களவையிலும் நிறைவேற்றுவதில் தடைகள் ஏற்படும்.

இந்துத்துவ மதவெறி, போர்வெறி - தேசியவெறி மற்றும் பயங்கரவாத எதிர்ப்புக் கூச்சல் மூலம் இந்துக்களை மட்டுமே கொண்ட நிரந்தரமானதொரு ஓட்டு வங்கியை ஏற்படுத்திவிட முடியும் என்கிற மூல உத்தி வகுத்துக் கொண்டு பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். உள்ளிட்ட இந்து பாசிச பரிவாரங்கள் திட்டமிட்டு செயல்படுகின்றன. இந்த வகையிலான முயற்சி அதிக பட்ச பலனைக் கொடுத்துவிட்டு சரியத் தொடங்கிவிட்டது. பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பலின் சித்தாந்தம் இதற்குமேல் நாடாளுமன்றத்தில் அதற்குத் தனிப் பெரும்பான்மை பலத்தையோ, பெரும்பாலான மாநிலங்களில் ஆட்சி அதிகாரத்தையோ பெற்றுத் தரப்போவதில்லை என்பது உறுதியாகி விட்டது.

ஆனால், பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பலோ கண்முன்னே தெரியும் இந்த உண்மையைக் காண மறுக்கிறது. ஆட்சியில் இருப்பவர்களுக்கெதிரான மக்களின் இயல்பான வெறுப்பும், முலயம் - கன்சிராமின் சாதிய ரீதியிலான அணிதிரட்டலும் மட்டுமே தனது தோல்விக்குக் காரணம் என்று சித்தரிக்கிறது. உ.பி.யை மட்டும் எடுத்துக் கொண்டால்கூட, பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பல் அதிகபட்சம் 36 சதவீத மக்கள் ஆதரவைப் பெற்றிருந்த நிலைபோய், படிப்படியாக அது குறைந்து வந்திருக்கிறது. தற்போது சுமார் 20 சதவீத வாக்காளர் ஆதரவை மட்டுமே பெற்றிருக்கிறது. அதேசமயம் பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கொள்கைக்கு நேரெதிரான சமாஜ்வாதி, பகுஜன் சமாஜ் கட்சிகளின் செல்வாக்கு படிப்படியாக உயர்ந்து, முதலிரண்டு இடங்களைப் பிடித்துள்ளன.


ஆட்சியாளர்களுக்கெதிரான மக்கள் வெறுப்பு, இதனால் ஆட்சியாளர்களைத் தோற்கடித்து, எதிர்க்கட்சிகளை வெற்றி பெறச் செய்வது என்கிற எதிர்மறை வாக்களிப்பு நாடு முழுவதும் பரவலாகக் காணப்படுகிறது. அதற்குக் காரணம், மத்தியிலும் மாநிலங்களிலும் உள்ள அரசாங்கங்கள் அனைத்தும் உலகமயமாக்கம், தனியார்மயமாக்கம், தாராளமயமாக்கம் என்கிற மக்கள் விரோத - புதிய பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிக்கின்றன. நாட்டிலுள்ள அனைத்து ஓட்டுக் கட்சிகளும் இதை ஆதரிக்கின்றன; என்றாலும் ஆட்சியில் இல்லாத கட்சிகள் இதை எதிர்ப்பதைப் போல நாடகமாடுகின்றன. இதை நம்பி எதிர்த்தரப்புக்கு மக்கள் வாக்களித்து பதவியில் அமர்த்துகின்றனர். இவை பதவி ஏற்ற சில மாதங்களிலேயே சாயம் வெளுத்து மக்கள் வெறுப்புக்கு ஆளாகின்றன. ஆனாலும் அடுத்த 5 ஆண்டுகளுக்கு எதுவும் செய்ய முடியாது, மக்கள் திணறுவதும் அவதியுறுவதும் தொடர்கிறது.

எனவே, பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கு மாற்றாக காங்கிரசு, சமாஜ்வாதி, பகுஜன் சமாஜ் என்று பிற கட்சிகளைத் தேர்ந்தெடுத்த போதும், அரசியல் பொருளாதார நெருக்கடிகள் முற்றுகின்றனவே தவிர தீரவில்லை. நாட்டிலேயே இன்னமும் பெரிய மாநிலமான உ.பி.யில் தொங்கு நிலை சட்டமன்றம் உருவாகி இருப்பது அரசியல் நெருக்கடியை மேலும் தீவிரமாக்கியிருக்கிறது. இந்தத் தேர்தல்களில் எதிர்பாராத அளவு வெற்றியை கன்சிராம் - மாயாவதி தலைமையிலான பகுஜன் சமாஜ் கட்சி பெற்றுள்ளது. தனிப்பெரும்பான்மையை ஒருபோதும் பெற முடியாத நிலையில் எந்த ஆட்சி அமைவதானாலும் தனது ஆதரவு அவசியம் என்கிற முக்கியமான இடத்தைப் பெறுவதே அக்கட்சியின் குறியாக இருந்தது. இந்த முயற்சியில் அது வெற்றி பெற்றுவிட்டது. இதன் வெற்றிக்கு ஒரு முக்கியமான காரணம், இதுவரை ''மனுவாதிகள்'' என்று சாடிவந்த இக்கட்சி பார்ப்பனர், தாக்கூர் என்று பெரும்பாலும் மேல்சாதி மனுவாதியினரை தனது வேட்பாளர்களாகக் கொண்டிருந்ததுதான். தனித்தனி எம்.எல்.ஏ.க்கள் அல்லது குழுக்கள் குதிரை பேரங்கள் நடத்தி கட்சி அல்லது அணிமாறுவதற்குப் பதில் ஒரு கட்சியாக குதிரை மந்தைகளை வைத்துப் பேரங்கள் பேசி விலைபோவதுதான் பகுஜன் சமாஜின் சித்தாந்தம்.

நடந்து முடிந்த தேர்தல்களில் படுதோல்வி கண்டாலும் பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பல் துவண்டு போகாமல் தற்போது தனது மதவெறி இந்துத்துவா சித்தாந்தத்தை தீவிரப்படுத்தியிருக்கிறது. அதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. கட்சி மாறிகளைக் கொண்டு மீண்டும் தானே அதிகாரத்தை நிறுவுமளவுக்கு எதிர்த்தரப்பு பலவீனமான சந்தர்ப்பவாதிகளாக இருப்பது மற்றும் நாட்டின் முதன்மையான எதிர்த்தரப்பாகிய காங்கிரசு, புதிய பொருளாதாரக் கொள்கையின் உறுதியான ஆதரவாளர்களாகவும் இந்துமத வகுப்புவாதக் கொள்கையின் மறைமுக ஆதரவாளனாகவும் இருப்பது. ஆகவே, ஓட்டுக்கட்சி அரசியலுக்கு உள்ளாகவே ஒரு மாற்றுத் தலைமையை - மூன்றாவது அணியை உருவாக்குவது என்பது பகற்கனவுதான்.

● ஆர்.கே.

www.padippakam.com



# தனியார்மயத்தின் தோல்விக்கு சென்னை துறைமுகமே சாட்சி

இந்திய அரசின் புதிய பொருளாதாரக் கொள்கை நாட்டின் பல லட்சம் தொழிலாளர்களையும், விவசாயிகளையும் வீதிக்குத் துரத்திக் கொண்டுள்ளது. தனியார்மயம், தாராளமயத்தின் பெயரால் ஆலை மூடலும், ஆட்குறைப்பும் ஒருபுறம் நடக்கும்போதே, நாட்டின் பொதுத்துறை நிறுவனங்களையும் அந்நிய பன்னாட்டு கம்பெனிகளிடம் விற்றுக் கொண்டிருக்கிறது. இதில் துறைமுகப் பொறுப்புக் கழகங்களும் தப்பவில்லை.

சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகம் இந்தியாவின் பெரிய, முக்கியமான துறைமுகங்களில் இரண்டாம் இடத்தை வகிக்கிறது. பல்லாயிரம் தொழிலாளர்களின் உழைப்பில் உருவாகி வளர்ந்து வந்திருக்கும் இத்துறைமுகத்தின் பல்வேறு பகுதிகளையும் தனியாருக்கு விற்க அரசு முடிவு செய்து அதை நடைமுறைப்படுத்தியும் வருகிறது. வழக்கம் போலவே இதற்கும் அரசு தரப்பில் இத்துறைமுகம் நட்டத்தில் இயங்குவதாக விளக்கமளிக்கப்படுகிறது.

ஆனால் ஆண்டுதோறும் சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகம் ஈட்டி வந்த லாபத்தைக் கொண்டுதான் அண்மையில் எண்ணூரில் புதிய துறைமுகம் கட்டப்பட்டது. பொன் முட்டையிடும் வாத்தை அறுத்துப் பார்த்த முட்டாளின் கதைபோல், இலாபத்தில் இயங்கும் துறைமுகத்தை நட்டக் கணக்குக் காட்டி பன்னாட்டுக் கம்பெனிகளிடம் விற்பனை செய்வது அரசின் முட்டாள்தனமா? துரோகமா?

குறிப்பாக, சென்னை துறைமுகத்தில் அதிக வருவாயை ஈட்டித் தரும் சரக்கு பெட்டகப் பிரிவு 1985-இல் தொடங்கப்பட்டது. ஏற்றுமதி இறக்குமதி சரக்குகளைப் பெட்டகங்கள் மூலம் இடமாற்றம் செய்வதால் உற்பத்தி பெருகியதோடு, இலாபமும் அதிகரித்தது. அரசு, உள்ளூர் ஒப்பந்தக்காரர்கள், தொழிலாளர்கள் என்ற முத்தரப்பு ஒத்துழைப்பில் இயங்கி வந்த இப்பிரிவில் கிடைக்கும் வருவாய் நேரடியாக துறைமுகப் பொறுப்புக் கழகத்திற்கு கிடைத்து வந்தது.

இப்போது அப்பிரிவை இயக்கும் பொறுப்பை ஆஸ்திரேலியா நிறுவனமான பி அண்ட் ஓ (P&O) என்ற கம்பெனியிடம் முப்பது ஆண்டுகளுக்கு ஒப்பந்தத்திற்கு விட்டுள்ளது அரசு. ஒப்பந்தப்படி பி அண்ட் ஓ கம்பெனியானது கிடைக்கும் இலாபத்தில் 35 சதத்தை மைய அரசுக்குச் செலுத்த வேண்டும். இதில் துறைமுகப் பொறுப்புக் கழகத்திற்கு அந்நிறுவனம் மூலம் எந்த வருமானமும் கிடைக்காது. அதாவது, மத்திய அரசு அந்நியக் கம்பெனியோடு கூட்டுச் சேர்ந்து துறைமுகப் பொறுப்புக் கழகத்தை நட்டத்தை நோக்கி உந்தி தள்ளுகிறது.

சரக்கு பெட்டகப் பிரிவில் வேலை செய்த தொழிலாளர்கள் மாத சம்பளம் தவிர ஊக்கத் தொகை, நாலரை மணி நேர கூடுதல் பணி வாய்ப்பு (OT) ஆகியவற்றின் மூலமாகவும் கணிசமான வருமானத்தைப் பெற்று வந்தனர். இப்போது இந்த 592 தொழிலாளர்களும் துறைமுகத்தின் உள்பிரிவு பணிகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர். ஏற்கனவே உள்பிரிவில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும், இவர்களுக்கும் சேர்த்து வேலையைப் பகிர்ந்தளிக்க முடியாமல் விருப்ப ஓய்வு போன்ற கவர்ச்சிகரமான திட்டங்களின் கீழ் ஆட்குறைப்பும் தொடங்கி விட்டது.

இங்கு செயல்படும் எச்.எம்.எஸ்., சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யூ.சி., ஐ.என்.டி.யு.சி., எம்.பி.யு.எல்., இரயில்வே மென்ஸ் யூனியன் முதலிய அனைத்து பெரிய தொழிற்சங்கங்களும் தொழிலாளர்களை அணிதிரட்டி இத்தனியார்மய நடவடிக்கைக்கு எதிராகப் போராடவில்லை. இது பொதுத்துறையைத் தனியார்மயமாக்கும், நாட்டைப் பன்னாட்டு நிறுவனங்களுக்குக் கூறு போட்டு விற்கும் நடவடிக்கையின் ஒரு பகுதி என்பதையே மூடிமறைத்து விட்டன. அதோடு நிர்வாகத்திடம் இத்தனியார்மயமாக்கும் நடவடிக்கைக்கு ஒப்புதலும் அளித்துவிட்டு, 'வேலை உத்திரவாதம் கிடைத்தால் போதும்' என்று சமரசம் செய்து கொண்டன. அதன் பின்னர் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் ஒன்றிணைந்து தன்னிச்சையாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட போது, அதை முறியடிக்கும் கருங்காலி வேலையையும் இத்தொழிற்சங்கங்கள் முன்னின்று செய்தன.

இந்நிலையில் ஐக்கிய தொழிலாளர் முன்னணியைச் சேர்ந்த வழக்கறிஞர் பிரகாஷ், தொழிலாளர்களின் சார்பாக உயர் நீதி மன்றத்தில் வழக்காடினார். நீதிமன்றமோ மத்திய அரசின் தனியார்மயமாக்கலுக்கு வக்காலத்து வாங்கி, பி அண்ட் ஓ கம்பெனியிடம் போட்டுள்ள ஒப்பந்தம் செல்லுபடியாகும்; சரியானதுதான் என்று தீர்ப்பளித்தது. தீர்ப்பு வெளியான அன்றிலிருந்து பழைய தொழிலாளர்கள் யாரும் உள்ளே வரக்கூடாது என்று அதிகாரபூர்வமாக தடை செய்து அவர்களை வெளியில் விரட்டியது, பி அண்ட் ஓ கம்பெனி.

ஒருபுறம் துரோக தொழிற்சங்கங்களாலும், இன்னொருபுறம் பன்னாட்டு கம்பெனிக்கு சாதகமாகச் செயல்படும் நீதிமன்றத்தாலும் ஏமாற்றப்பட்ட தொழிலாளர்கள், அடுத்ததாக எப்படிப் போராடுவது என்று தெரியாமல் விழிபிதுங்கி கையறு நிலையில் நிற்கின்றனர். மறுபுறம், சரக்குப் பெட்டகப் பிரிவைப் போலவே முக்கியமான இதர துறைகளையும் தனியாருக்கு விற்கும் பணியில் அரசு மும்முரமாக இறங்கியுள்ளது.

எண்ணெய் இறக்குமதி பிரிவை தரகு முதலாளியான அம்பானியின் ரிலையன்ஸ் நிறுவனத்திற்கு விற்கவும், இரும்புத்தாது, நிலக்கரி இறக்குமதி செய்யும் துறைகளையும் ஒவ்வொன்றாக பகுதி பகுதியாக தனியார்மயமாக்கவும், ஏற்கனவே துறைமுகத்தின் உள்பிரிவு, வெளிப்பிரிவுகளில் உள்ள துறை செயல்பாடுகளை ஆட்குறைப்புக்கு வசதியாக சுருக்கவும் அரசு திட்டமிட்டு வருகிறது. அதோடு புதிதாய் தொடங்கப்பட்ட எண்ணூர் துறைமுகத்தின் அனைத்து பிரிவுகளையும் ஒப்பந்த தொழிலாளர்களைக் கொண்டு இயக்குவதோடு, அதை 'முதல் தனியார் துறைமுகமாகவும்' அறிவித்துள்ளது அரசு.

இவை ஒருபுறமிருக்கட்டும்! தனியார்மயமானால் விரைவாகவும் பொறுப்பாகவும் திறமையாகவும் வேலைகள் நிறைவேறும்; இதன் மூலம் சரக்குகள் விரைவாக உடனுக்குடன் ஏற்றி இறக்கப்படும்; வர்த்தகம் பெருகும்; பொருளாதாரம் உயரும் என்று கதையளந்தார்களே, அப்படி ஏதாவது நடந்துள்ளதா? ஒரு வெங்காயமும் இல்லை.

''துறைமுகத்தில் ஒரு கப்பல் வந்தால் முன்பெல்லாம் 4 நாட்களுக்கு ஏற்றுமதி - இறக்குமதி வேலைகள் நடக்கும். 'ஆனால்



படிப்பகம்

www.padippakam.com

நாங்கள் இரண்டே நாட்களில் சேவைகளை விரைந்து செய்வோம்' என்றது ஆஸ்திரேலிய கம்பெனி. ஆனால் இப்போது 10 நாட்களானாலும் காரியங்கள் நடப்பதில்லை. இறக்கி வைக்கப்பட்ட பொருட்களை 'டெலிவரி' செய்வதில் அதீத தாமதம் செய்கிறார்கள். சரக்குகள் வெளியேறாமல் தங்கி இருப்பதற்கான தாமதக் கட்டணம், அபராதக் கட்டணம் என்று எங்களிடம் போட்டு தீட்டுகிறார்கள். அடுத்த நிமிடமே சரக்குகளை எடுத்துச் செல்லத் தயாராக இருக்கும் எங்களுக்குத் தாமதத்தை ஏற்படுத்துவதோடு அபராதமும் விதித்தால் அது எப்படி நியாயமாகும்?'' என்று குமுறுகிறார்கள் சென்னை ஏற்றுமதி - இறக்குமதி முகமையாளர்கள்.

முகமையாளர்கள் சங்கத் தலைவரான சி.கோடாடியா, ''பல கோடி ரூபாய் மதிப்புடைய சரக்குகள் சென்னை துறைமுகத்தில் தேங்கிக் கிடக்கிறது. இச்சரக்குகளை நம்பி வியாபாரம் செய்து வரும் பலதரப்பட்ட வர்த்தகர்களும், தொழிலுக்குரிய மூலப் பொருள் வந்து சேராமல் காத்திருக்கும் தொழிற்சாலைகளும் பெருத்த பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர். வழக்கமான பணிகளையே விரைந்து முடிப்பதாகச் சொல்லி சிறப்புச் சேவைக் கட்டணம் என்ற பெயரில் 65% கூடுதல் கட்டணத்தை ஆஸ்திரேலிய கம்பெனி, வியாபாரிகளிடம் அநியாயமாகப் பறிக்கிறது. சரக்குகளை ஏற்றி இறக்குவதில் ஏற்படும் பெருத்த தாமதம் காரணமாக சென்னை துறைமுகமா? வேண்டவே வேண்டாம் என்று கப்பல்களை வாடகைக்கு விடும் நிறுவனங்களும் அலறி ஓடுகின்றன'' என்று குற்றம் சாட்டுகிறார்.

முகமையாளர்களின் இந்த வாக்குமூலங்கள் எல்லாம், தனியார்மயம், தாராளமயத்தை தீவிரமாக ஆதரிக்கும் ''துக்ளக்'' பத்திரிகையிலேயே வெளிவந்தவைதான்! தனியார் முதலாளிகளின் 'திறமை'யான சேவைக்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்?

அன்ற கடல் வழியே கப்பல் மூலமாக வாணிகம் செய்ய வந்த பிரிட்டிஷாரின் கிழக்கிந்தியக் கம்பெனி நமது நாட்டையே காலனியாக்கி அடிமைப்படுத்தியது. வங்காளத்தில் அதன் ஆதிக்கத்துக்குச் சேவை செய்த மீர்ஜாபரை துரோகி என்கிறது வரலாறு. கிழக்கிந்திய கம்பெனிக்குப் பதிலாக இன்று ஆஸ்திரேலியாவின் பி அண்டு ஓ கம்பெனி; மீர்ஜாபருக்குப் பதிலாக இந்து வெறி கூட்டணி ஆட்சியாளர்கள்!

**தகவல்:**
**புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, சென்னை.**


''புதிய ஜனநாயகம்'' உரிமையாளர்
மற்றும் இதர விவரங்கள்
படிவம் IV (விதி 8-இன் படி)

| | | |
|---|---|---|
| 1. வெளியிடும் இடம் | : | 25, அருணாச்சலம் தெரு, ஜோதிராமலிங்க நகர், சென்னை - 600 083. |
| 2. வெளியிடும் காலம் | : | மாதம் இருமுறை |
| 3. அச்சிடுபவர் பெயர் | : | இரா. சண்முகராசு, |
| இந்தியக் குடிமகனா? | : | ஆம் |
| முகவரி | : | எழில் பிரிண்ட்ஸ், 110, 2-ஆம் தளம், 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024. |
| 4. வெளியிடுபவர் பெயர் | : | இரா. சண்முகராசு, |
| இந்தியக் குடிமகனா? | : | ஆம் |
| முகவரி | : | 25, அருணாச்சலம் தெரு, ஜோதிராமலிங்க நகர், சென்னை - 600 083. |
| 5. ஆசிரியர் பெயர் | : | இரா. சண்முகராசு |
| இந்தியக் குடிமகனா? | : | ஆம் |
| முகவரி | : | 25, அருணாச்சலம் தெரு, ஜோதிராமலிங்க நகர், சென்னை - 600 083. |

இரா. சண்முகராசுவாகிய நான், மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என்று உறுதியளிக்கின்றேன்.

1.3.2002

(ஒ-ம்) இரா. சண்முகராசு,
வெளியிடுபவர்.



## ஆண்டிப்பட்டி:

# பொறுக்கி அரசியலைத் தோலுரித்து புரட்சிகர அரசியல் பிரச்சாரம்

பணபலம், குண்டர்பலம், சாதிய பலம், அதிகார பலத்தோடு பாசிச ஜெயா ஆண்டிப்பட்டி இடைத்தேர்தலில் போட்டியிட்டதைக் கண்டு பீதியடைந்து, எதிர்க்கட்சிகள் பக்கவாட்டில் ஒதுங்கிக் கொண்டு ஓட்டுப் பொறுக்கிய நிலையில், ஆண்டிப்பட்டி தொகுதி முழுவதும் விவசாயிகள் விடுதலை முன்னணியும் புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணியும் தேர்தல் புறக்கணிப்பு பிரச்சார இயக்கத்தை வீச்சாக நடத்தின.

ஆண்டிப்பட்டி, ஜக்கம்பட்டி, கொண்டீ நாயக்கன்பட்டி, ரங்கசமுத்திரம், நாச்சியாபுரம், பொம்மிநாயக்கன்பட்டி, சுப்பலாபுரம், குன்னூர், கானாவிளக்கு, சிலோன் காலனி முதலான பகுதிகளிலும் சுற்றுப்புற கிராமங்களிலும் துண்டுப் பிரசுரத்துடன் தோழர்கள் வீடுவீடாகப் பிரச்சாரம் செய்தனர். பெரும்பாலான கிராமங்களில் கூலி விவசாயிகளும் நெசவாளர்களும் பிழைப்புக்காக வெளியூர் சென்றுவிட்டனர். பெண்கள், வயதானவர்கள், அவர்களின் பராமரிப்பில் உள்ள குழந்தைகளை மட்டுமே காண முடிந்தது. பாசிச ஜெயா கும்பலின் ஆட்சியில் பணப்புழக்கம் பெருகி வருவதாக கதையளந்தார்கள். பாசிச ஜெயா ஆண்டிப்பட்டியில் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டதும் பணப்புழக்கம் ஏற்பட்டது. அது, சாராய வியாபாரிகள், ஓட்டுக் கட்சி தரகர்கள் - குண்டர்கள், ஒப்பந்தக்காரர்கள் என்ற மட்டத்தில் சுழன்றது. உழைக்கும் மக்களோ அடுத்த வேளை சோற்றுக்கு என்ன வழி என்று புரியாமல் தத்தளித்துக் கொண்டிருந்தார்கள். தேர்தல் புறக்கணிப்பு பிரச்சார இயக்கத்திற்கு அவர்களிடம் நன்கொடை கேட்ட போது, ''உங்களுக்கு வயிறு நிறைய சோறு போடுகிறோம்; எங்களிடம் காசில்லை'' என்று வருத்தத்துடன் கூறினார்கள்.

''ஓட்டுப் போடாதே என்று சொல்வதற்கும் ஆட்கள் உண்டா? நாங்கள் நினைத்ததைத் தான் நீங்கள் சொல்கிறீர்கள். இந்த நேரத்தில் இதை வெளியில் சொல்ல அச்சப்பட்டுக் கொண்டிருந்தோம். தைரியமாக சொல்லும் நீங்கள் யார்?'' என்று அக்கறையுடன் கேட்டு பல கிராமங்களில் விவசாயிகள் வரவேற்று ஆதரித்தனர்.

ஆண்டிப்பட்டி மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை முன்வைத்து ஓட்டுக் கேட்கக் கூட தி.மு.க., அ.தி.மு.க. முன்வரவில்லை. ''அம்மாவே வருக!'', ''அப்பாவே வருக!'' என்று துதிபாடுவதையே இப்பிழைப்புவாதிகள் அரசியலாக்கினர். ம.தி.மு.க.வோ வெளிப்படையாகவே சாதி அரசியலில் தஞ்சம் புகுந்தது. போலி கம்யூனிஸ்டு கட்சி அணிகள், மக்கள் மத்தியில் தேர்தல் புறக்கணிப்பு பிரச்சாரம் செய்யலாம் என்று முன்வந்த் போதிலும், ''எதுவும் செய்ய வேண்டாம்!'' என்று கட்டளையிட்டு போலி கம்யூனிஸ்டு தலைவர்கள் பாசிச ஜெயா கும்பலுக்கு தமது எஜமான விசுவாசத்தைக் காட்டிக் கொண்டார்கள். அரசியல் களத்தில் எதிர்க்கட்சிகள் அனைத்தும் முடமாகிக் கிடந்த நிலையில், மாற்று அரசியலை - புரட்சிகர-அரசியலை முன்வைத்து செஞ்சட்டையுடன் 40-க்கும் மேற்பட்ட தோழர்கள் செங்கொடியுடன் பிப்ரவரி 12-ஆம் தேதியிலிருந்து 17-ஆம் தேதி முடிய தொடர்ந்து கிராமங்கள்தோறும் பிரச்சாரம் செய்தனர். இத்தேர்தல் புறக்கணிப்பு பிரச்சாரமும் 17-ஆம் தேதியன்று ஆண்டிப்பட்டியில் நடந்த பொதுக் கூட்டமும் வறுமை - அறியாமை இருளில் தத்தளிக்கும் மக்களிடம் புதிய நம்பிக்கையை விதைத்தது.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழக போலீசின் பயங்கரவாதப் பேயாட்டம்

சென்னையில் மொத்தமாக கஞ்சா வியாபாரம் செய்து வரும் ராஜேஸ்வரி என்ற பெண்ணைத் தற்பொழுது சென்னை மாநகர போலீசு வலை வீசித் தேடி வருவதாகக் கூறுகிறது. அந்தப் பெண் தலைமறைவாக இருந்து கொண்டு கஞ்சா வியாபாரம் செய்தவரல்ல. அந்தப் பெண்ணின் பங்களா சென்னை - அசோக் நகர் போலீசு நிலையம் அருகில்தான் உள்ளது. ''அந்த பங்களாவில் அடியாட்களின் பாதுகாப்போடு சட்ட விரோத கஞ்சா வியாப்பாரம், ஏதோ மளிகைக் கடையில் பொட்டலம் கட்டித் தருவது போல வெளிப்படையாக நடந்து வந்தது எங்களுக்கே தெரிந்திருக்கும்பொழுது, போலீசுக்குத் தெரியாமலா நடந்திருக்கும்?'' என அந்தப் பகுதி மக்கள் உண்மையைப் போட்டு உடைக்கிறார்கள்.

✸ இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பாக பண்ருட்டி அருகாமையில் நடந்த கள்ளச் சாராய சாவுகள் பற்றி விசாரிக்கச் சென்ற மனித உரிமை பாதுகாப்பு கவுன்சில் அமைப்பினரிடம் உயிர் பிழைத்த ஒருவர், ''அந்த விஷ சாராயம் புதுப்பேட்டை போலீசு நிலையத்தில் இருந்துதான் விற்பனைக்கு வந்ததாக''க் கூறியிருக்கிறார். பஞ்சாயத்துத் தேர்தல் நடந்த பொழுது போலீசு கைப்பற்றிய கள்ளச் சாராயத்தை, போலீசு நிலையத்தில் பதுக்கி வைத்துவிட்டு, தேர்தல் முடிந்த பிறகு கள்ளச் சாராய வியாபாரி மொட்டைக்காளையின் மூலமாக, புதுப்பேட்டை போலீசுக்காரர்கள் விற்பனைக்கு அனுப்பியதாக அவர் கூறியிருக்கிறார்.

✸ தமிழகத்தின் பிரபலமான தாதாவான சென்னையைச் சேர்ந்த அயோத்திக் குப்பம் வீரமணியைப் பிடிக்க சமீபத்தில் சென்னை போலீசு புறப்பட்டுப் போனது. அப்பொழுது அவனுக்கு இது பற்றி தகவல் கொடுத்து, அவனை அயோத்தி குப்பத்தில் இருந்து தப்ப வைத்து, பாண்டி, நாகப்பட்டினம் பகுதிகளில் அவனைப் பத்திரமாக பாதுகாத்து இறுதியாக அவனைத் திருத்துறைபூண்டி நீதிமன்றத்தில் சரணடையச் செய்ய வைத்தது சென்னை போலீசில் இருக்கும் வீரமணி ஆதரவு கோஷ்டிதான் என பத்திரிகைகள் அம்பலப்படுத்தியுள்ளன.

போலீசுக்கும் சமூக விரோத கிரிமினல்களுக்கும் இடையே இருக்கும் மாமன் - மச்சான் உறவு சிதம்பர இரகசியமல்ல. அதற்கு நாடெங்கிலும் இருந்து இப்படிப்பட்ட பல ஆயிரக்கணக்கான சம்பவங்களை அடுக்கிக் காட்டலாம். ஆனாலும், போலீசின் கிரிமினல் தொடர்பை விம்ர்சிக்கும் நீதிமன்றங்கள், முதலாளித்துவ அறிஞர்கள், பத்திரிகைகள் அனைத்தும் போலீசு துறையைச் சமூக விரோத, மக்கள் விரோத அமைப்பாகக் கூறுவதில்லை.

''அரசின் மற்ற துறைகளில் இருப்பதைப் போலவே போலீசிலும் சில கறுப்பு ஆடுகள் இருக்கின்றன. ஆதலால், இதை ஊதிப் பெருக்க வேண்டியதில்லை. நீதிமன்றம், மனித உரிமை கமிஷன்கள் மூலம் போலீசின் கிரிமினல் தொடர்புகளுக்குக் கடிவாளம் போட்டு விடலாம். நல்ல சம்பளம் கொடுப்பதன் மூலம், மனித உரிமைகளை போலீசாருக்குக் கற்பிப்பதன் மூலம், போலீசைத் திருத்தி விடலாம். குறைபாடுகள் இருந்தாலும் போலீசு என்று ஒன்று இருப்பதனால்தான், நாட்டில் இந்தளவிற்காவது ஒழுங்கு இருக்கிறது. அதுவும் தீவிரவாத அபாயம் பெருத்துவரும் இவ்வேளையில், போலீசின் சேவை நாட்டிற்கு அவசியம் தேவை'' என்றெல்லாம் கூறி, இவர்கள் போலீசின் சமூக விரோதத் தன்மையைப் பூசி மெழுகிவிடுகிறார்கள்.

இப்படி இவர்கள் என்னதான் பூசி மெழுகினாலும், போலீசாரைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தாலும், ''போலீசு என்பதே மக்கள் விரோத, சமூக விரோத கிரிமினல் அமைப்புதான்; நீதிமன்றம், மனித உரிமை கமிசன்களால் கிரிமினல் போலீசு கும்பலுக்குக் கடிவாளம் போட முடியாது; அதைத் திருத்த முடியாது'' என்பதைத் தமிழ் நாட்டில் நடந்த சில சம்பவங்கள் பொட்டில் அடித்தாற்போல அம்பலப்படுத்தி விட்டன.

✸ சந்தன மரக் கடத்தல் வீரப்பனைப் பிடிப்பதற்காக அனுப்பப்பட்ட சிறப்பு அதிரடிப்படை நடத்திய அட்டூழியங்களை விசாரிப்பதற்காக 28.6.98 அன்று சதாசிவம் கமிசன் நியமிக்கப்பட்டது. இக்கமிசனின் முதல்கட்ட விசாரணை சனவரி 2000-இல் நடந்த பின், இக்கமிசன் மேலும் விசாரணையைத் தொடர்ந்து நடத்த முடியாதபடி கர்நாடக போலீசு, நீதிமன்றத்தில் தடை வாங்கியது. தனது சட்ட விரோத பயங்கரவாதத்தை மூடிமறைக்க சட்டத்தையே பயன்படுத்திக் கொண்டது, போலீசு. இந்தத் தடை 30.11.2001 அன்று விலக்கப்பட்ட பின்பு, கமிசனின் இரண்டாம் கட்ட விசாரணை கடந்த பிப்ரவரி முதல் வாரம் நடந்தது. அக்கமிசனில் சாட்சியளிக்க வந்த வள்ளி என்ற பெண்ணின் கதையைக் கேளுங்கள்; அதன்பிறகு போலீசைத் திருத்த முடியுமா என்பதை முடிவு செய்யுங்கள்.

சேத்துக்குளியைச் சேர்ந்த வள்ளியும் அவரது கணவர் சம்புவும் மீன்பிடித்து வாழ்க்கை நடத்தி வந்தனர். பத்து வருடங்களுக்கு முன்பு, கர்நாடக அதிரடிப் படை இவர்கள் இருவரையும் வீரப்பனைப் பற்றி விசாரிப்பதற்காக பண்ணாரி போலீசு நிலையத்திற்கு இழுத்துப் போனது. பின் அங்கிருந்து மாதேஸ்வரன் மலையில் உள்ள ''வொர்க்ஷாப்'' என்றழைக்கப்படும் இரகசிய சித்திரவதைக் கூடத்திற்கு இவர்கள் போலீசாரால் கடத்தப்பட்டனர்.

அங்கு சம்புவும் வள்ளியும் கொடூரமாக போலீசு கும்பலால் தாக்கப்பட்டனர். பின் இருவரும் நிர்வாணமாக்கப்பட்டு, அவர்களுக்கு ''ஷாக்'' (மின் அதிர்ச்சி சித்திரவதை) கொடுக்கப்பட்டது. கைகள், கால்கள், தொடைகள், மர்ம உறுப்புகள் என உடலெங்கும் இவர்களுக்கு ''ஷாக்'' கொடுக்கப்பட்டது. மின் அதிர்ச்சி தாளாமல் இவர்கள் மயங்கிச் சுருண்டு விழுந்தால், மயக்கம் தெளிவிக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டனர். ஏறத்தாழ பத்து நாட்கள் நிர்வாணமாகவே வைக்கப்பட்டு, இவர்கள் போலீசாரால் வதைக்கப்பட்டனர்.

அதன்பின் சம்புவும்

**வீரப்பனைப் பிடிக்க அனுப்பப்பட்ட அதிரடிப் படையால் கொடூரமாகச் சித்திரவதை செய்யப்பட்ட அப்பாவி பெண்கள்.**





படிப்பகம்

www.padippakam.com

வள்ளியும் "வொர்க்ஷாப்" பிற்குப் பின்னுள்ள காட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டு, வள்ளியின் கண்முன்னே சம்புவை ஓடவிட்டு போலீசார் சுட்டுக் கொன்றனர். வீரப்பன் கும்பலோடு நடந்த மோதலில் சம்பு சுட்டுக் கொல்லப்பட்டதாக போலீசின் பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டது.



செஞ்சி கிளைச் சிறைக் காவலர்களின் காமவெறிக்குப் பலியான ரீத்தா.

கதிறியழுத வள்ளியை, சம்புவின் உடலிற்கு அருகில் கூட நெருங்க விடாமல், மீண்டும் "வொர்க் ஷாப்"பிற்குத் தூக்கி வந்த போலீசார், அவரை நிர்வாணப்படுத்தி கை, கால்களுக்கு விலங்கு மாட்டி படுக்க வைத்தனர். அச்சித்திரவதைக் கூடத்தில் சட்ட விரோதமாக அடைத்து வைக்கப்பட்டிருந்த மற்ற "கைதிகள்" அழைத்து வரப்பட்டு, அவரைப் பார்த்தபடி உட்கார வைக்கப்பட்டனர். மூடலய்யா என்ற போலீசு அதிகாரி நான்கு போலீசுக்காரன்களைக் கூப்பிட்டு, வள்ளியைக் கற்பழிக்குமாறு உத்தரவிட்டான். அந்த நான்கு போலீசு மிருகங்களும் வள்ளியை மாறி மாறி கற்பழித்தபொழுது, அதை மற்ற போலீசுக்காரன்கள் ரசித்துப் பார்த்தனர். வள்ளியின் அலறலையும், இந்தக் குரூரத்தையும் உட்கார்ந்து இருந்தவர்கள் சிலர் திரும்பிப் பார்த்தபொழுது அவர்கள் கொடூரமாகத் தாக்கப்பட்டார்கள். இப்படி ஏறத்தாழ பத்து மாதங்களாக வள்ளி சித்திரவதை செய்யப்பட்டு, சிதைக்கப்பட்டு, நடைப்பிணமாகத் துரத்தியடிக்கப்பட்டாள்.

✱ வீரப்பனைத் தேடுகிறோம் என்ற பெயரில் அதிரடிப்படை நடத்திய அட்டூழியங்களை கமிசன் விசாரித்து வரும் பொழுதே, அது பற்றியெல்லாம் அலட்டிக் கொள்ளாமல், தமிழ்நாடு போலீசும், கர்நாடக போலீசும் கூட்டாகச் சேர்ந்து கொண்டு நக்கீரன் நிருபர் சிவசுப்பிரமணியத்தின் மீது அடக்குமுறையை ஏவிவிட்டு வருகின்றன.

வாயில் திராவகம் போன்ற திரவம் வலுக்கட்டாயமாக ஊற்றப்பட்டதால் உயிருக்குப் போராடும் ஏகாம்பரம்.



உச்சநீதி மன்றம் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக, ஒருவரை கைது செய்யும் பொழுது போலீசார் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளை, பதினொரு கட்டளைகளாகத் தொகுத்து, அவற்றைக் கட்டாயம் போலீசார் பின்பற்ற வேண்டும் என உத்திரவிட்டுள்ளது.

போலீசார் இக்கட்டளைகளை மயிரளவிற்குக் கூட மதிக்கவில்லை என்பதோடு, நிருபர் சிவாவை அவரது வீட்டில் இருந்து பகிரங்கமாகவே கடத்திச் சென்றனர். தமிழ்நாடு போலீசும், கர்நாடக போலீசும் அவரை மாறி மாறி போலீசு காவலில் வைத்துச்சித்திரவதை செய்வதோடு, அவர் பிணையில் வெளியே வந்துவிடாதபடி, சிவா மீது அடுத்தடுத்து பொய் வழக்குகள் போடப்படுகின்றன. வீரப்பன் நடத்திய வெள்ளித் திருப்பூர் ஆயுதக் கொள்ளை வழக்கு, போலீசு ஆள்காட்டி கந்தவேலு கொலை வழக்கு ஆகியவற்றில் நிருபர் சிவா சேர்க்கப்பட்டு, அவர் போலீசாரால் மிரட்டப்படுகிறார்.

"தேடுதல்" என்ற பெயரில் சிவாவின் வீடு - ஸ்டூடியோவுக்குள் புகுந்த போலீசு, வீட்டில் இருந்த பொருட்களையும், ஸ்டூடியோவில் இருந்த விலை உயர்ந்த புகைப் படக் கருவிகளையும் அடித்து நொறுக்கியதோடு, சிவாவின் மனைவியையும், மனைவியின் தங்கையையும் பெண் போலீசாரை விட்டு மானபங்கப்படுத்தியது. ஆயுதப் போலீசாரை குவித்து, சிவா வீடு இருந்த தெருவையே சுற்றி வளைத்து, யாரையும் உள்ளே நுழைய விடாமல் அடித்துத் துரத்தி நடத்தப்பட்ட இத்தேடுதல் வேட்டை மூலம் பத்திரிகை உலகையே மிரட்டப் பார்க்கிறது போலீசு.

வீரப்பன் பற்றிய உண்மைகளை சிவாவிடமிருந்து கறப்பதற்காக, போலீசு இந்த அத்துமீறல்களை நடத்தவில்லை. மாறாக எந்த பத்திரிகை நிருபராவது புலனாய்வு என்ற பெயரில் ஜெயா அரசையும் போலீசையும் அம்பலப்படுத்தி எழுதினால், சிவாவிற்கு நேர்ந்த கதிதான் கிடைக்கும் என போலீசு விடுக்கும் பாசிச மிரட்டல் இது.

✱ வீரப்பன் பீதியைக் கிளப்பிவிட்டு, வள்ளியைச் சித்திரவதை செய்து கற்பழித்த போலீசுக்கு, ரீத்தா என்ற இளம் பெண்ணைக் கும்பலாகப் பாலியல் பலாத்காரப்படுத்த எந்தவித முகாந்திரமும் தேவையாய் இருக்கவில்லை.

திண்டிவனத்திலுள்ள ஜே.கே. என்ற விபச்சாரச் சந்தையில் விற்கப்பட்ட ரீத்தாவைக் காப்பாற்ற முயன்ற இளைஞர்கள் மீது, விபச்சாரத் தரகர்களுக்கு ஆதரவாக சாராய வழக்கு போட்டு உள்ளே தள்ளியது திண்டிவனம் போலீசு. விபச்சார வழக்கின் கீழ் கைது செய்யப்பட்டு, செஞ்சி கிளைச் சிறையில் அடைக்கப்பட்ட ரீத்தா சிறைக் காவலர்களால் கும்பலாகப் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டார்.

இது பற்றிய விசாரணையில், "சிறைக் காவலர்கள் ரீத்தாவை வெளியே அழைத்துப் போய், ஊர் பெரிய மனிதர்களுக்கும் கூட்டிக் கொடுத்திருக்கலாம்; ரீத்தா மட்டுமல்லாமல் இதற்குமுன் செஞ்சி கிளைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த பல்வேறு இளம் பெண்களை வெளியே அழைத்துப் போய், ஊர்ப் பெரிய மனிதர்களோடு போலீசும் சேர்த்து கற்பழித்திருக்கக்கூடும்" என்ற சந்தேகம் எழுந்துள்ளது. சுருக்கமாகச் சொன்னால், செஞ்சி கிளைச் சிறையை ஒரு விபச்சார விடுதியைப் போல போலீசு நடத்தி வந்திருக்கிறது. இப்படிப்பட்ட பெண் புரோக்கர் கும்பலா மக்களின் நண்பனாக இருக்க முடியும்?


படிப்பகம்

www.padippakam.com

ரீத்தா, போலீசு மிருகங்களிடமிருந்து காப்பாற்றப்பட்டு விட்டாலும், நடந்த உண்மையைக் காப்பாற்றுவதுதான் இப்பொழுது பெரும் போராட்டமாக இருக்கிறது. ரீத்தா சிறைக் காவலர்களால் கற்பழிக்கப்பட்ட குற்றத்திற்கு நேரடி சாட்சியாய் இருக்கும் ஏகாம்பரம் என்ற இளைஞர், அடையாளம் தெரியாத கும்பலால் கடத்தப்பட்டுத் தாக்கப்பட்டதோடு, அவரது தொண்டைக்குள் திராவகம் போன்ற திரவத்தை ஊற்றி, அவரது குரலைச் சிதைத்து விடவும் அக்கும்பல் முயன்று இருக்கிறது. ரீத்தாவை திண்டிவனம் விபச்சாரச் சந்தையில் இருந்து காப்பாற்ற முயன்ற சென்னையைச் சேர்ந்த நான்கு இளைஞர்களும் உயிருக்குப் பயந்தபடி இருக்கின்றனர். இச்சாட்சிகளை போலீசிடம் இருந்து உயிரோடு காப்பாற்றினால்தான், நடந்த உண்மையை நிரூபிக்கவே முடியும் என்பதுதான் இந்த வழக்கின் இப்போதைய நிலை. தொழில்முறை கிரிமினல்களுக்கும் போலீசுக்கும் இடையே எந்த வேறுபாடும் கிடையாது என்பதைத்தான் ரீத்தா விவகாரமும் இந்தத் தாக்குதல்களும் எடுத்துக் காட்டுகின்றன.

போலீசின் இந்த மனித உரிமை மீறல்கள், சித்திரவதைகள், படுகொலைகள், குரூர வக்கிரங்கள் அனைத்தையும் முதலாளித்துவ அறிஞர்கள் தனிப்பட்ட போலீசின் தவறுகளாகத் தட்டிக் கழிக்கின்றனர். ''சோ'' போன்ற பார்ப்பன - பாசிஸ்டுகளோ ''போலீசுக்கு எதிராக மனித உரிமைக் குற்றச்சாட்டுகளைக் கூறக் கூடாது; அப்படி குற்றம் சாட்டினால், அவர்களின் கடமை வேகம் தடைப்படும்; அவர்களின் மனவெழுச்சி பாதிக்கப்படும்'' எனக் கூறி, போலீசின் அத்துமீறல்களை நியாயப்படுத்துகிறார்கள். ''பணத்துக்காகத்தான் போலீசு மீது இப்படி அபாண்டமாக பழி சுமத்துகிறார்கள்'' என பாசிசத் திமிரோடு பேசி, பாதிக்கப்பட்ட மக்களை அவமானப்படுத்துகிறார்கள்.

ஒரு பெண்ணை நிர்வாணப்படுத்தி சித்திரவதை செய்வது; அவள் கண் எதிரே கணவனைச் சுட்டுக் கொன்றுவிட்டு, கதறியழும் அவளை அப்படியே கற்பழிப்பது; அந்த வன்புணர்ச்சியைப் பார்த்து ரசிப்பது - இப்படிப்பட்ட குரூரமான மனநிலை கொண்டவர்களை ''மனநோய் குற்றவாளிகள்'' என்றுதான் கூறமுடியும். ஆனால், இப்படிப்பட்ட குற்றவாளிகள் தான் அதிரடிப்படை வீரர்களாக, கமாண்டோக்களாகத் தேர்வு செய்யப்படுகின்றனர். இப்படிப்பட்ட சித்திரவதைகளை எந்தவொரு போலீசுக்காரனும் குற்றமாகப் பார்ப்பது கிடையாது. மாறாக, உண்மையை வரவழைக்க இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும் என இந்தக் குரூரத்தை போலீசுதுறை நியாயப்படுத்துகிறது.

சமூக விரோதிகள், தேச விரோதிகள் என ஆளும் கும்பலால் குற்றம் சாட்டப்படும் பயங்கரவாதிகள் கூட, யாரையாவது இப்படி குரூரமாகச் சித்திரவதை செய்ததாகவோ, பாலியல் பலாத்காரப்படுத்தியதாகவோ குற்றம் சாட்டப்பட்டது கிடையாது. சட்டம் - ஒழுங்கையும், நாட்டையும் காப்பதற்காகவே உருவாக்கப்பட்டிருக்கும் போலீசு, இராணுவத்தின் மீதுதான் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் அடுக்கப்படுகின்றன. அதுவும் பொது மக்களாலேயே கூறப்படுகின்றன.

விபச்சாரத் தரகர்கள், கள்ளச் சாராய வியாபாரிகள், ரவுடிகள் ஆகிய சமூக விரோதக் கும்பலைத் தயார் செய்து ஊருக்குள் இறக்கி விடுவது தொடங்கி, அவர்களின் தொழிலுக்குப் பாதுகாப்பு கொடுப்பது வரை; அப்பாவி மக்களைச் சட்ட விரோதக் காவலில் அடைத்து வைத்து சித்திரவதை செய்வது, கற்பழிப்பது தொடங்கி கொட்டடியில் கொலை செய்வது வரை; பொது மக்களின் சொத்துக்களைச் சூறையாடுவதில் தொடங்கி அவர்களைச் சுட்டுக் கொல்வது வரை இப்படி அனைத்து விதமான மக்கள் விரோத, சமூக விரோத பயங்கரவாதச் செயல்களையும் செய்வதற்கு சட்டபூர்வமாகவே தனக்கு உரிமை இருப்பதாகவே போலீசு கருதிக் கொள்கிறது. அதனால்தான், போலி மோதல் கொலைகளுக்காக சில பஞ்சாப் போலீசு அதிகாரிகள் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டதை ரத்து செய்யாவிட்டால், அதை எதிர்த்துப் போராடுவோம் என பஞ்சாப் போலீசு அரசையே மிரட்டியது. நக்சல்பாரிகளை நர வேட்டையாடுவதிலும், கீழ்நிலை போலீசாரின் அயோக்கியத்தனங்களை நியாயப்படுத்துவதிலும் கைதேர்ந்த உமேஷ் சந்திரா என்ற ஐ.பி.எஸ். அதிகாரியை ஆந்திர அரசு மாறுதல் செய்தவுடனேயே, அதை எதிர்த்து ஆந்திர போலீசு கரீம் நகரில் பெரும் கலவரத்தை நடத்தியது.

வேறுவிதமாகச் சொன்னால், ''காவல்'' துறை என்பது, ஆயுதம் ஏந்திய, அமைப்பு ரீதியாகத் திரட்டப்பட்ட, சட்டபூர்வ பயங்கரவாதக் கும்பல்தான். அரசு வேலைக்கு ஆளெடுப்பதற்குத் தடை விதித்துள்ள ஜெயா, இப்பயங்கரவாதக் கும்பலுக்கு ஆளெடுப்பதற்குத் தடை விதிக்கவில்லை; கஜானா காலி என மக்களிடம் கைவிரித்து விட்டு, போலீசை நவீனப்படுத்துவதற்கு நிதியைக் கொட்டிக் கொடுக்கிறார். பணக்காரன் தன் வீட்டு நாயைப் பெருந்தீனி போட்டு வளர்ப்பதற்கும், அரசு போலீசு துறையை ஊதிப் பெருக்குவதற்கும் பெருத்த வேறுபாடு கிடையாது.

இந்த அரசாங்க நாய் 'தீவிரவாதி'களை மட்டுமல்ல, பொது மக்கள் மீதும் விழுந்து பிடுங்குகிறது. சாலை வசதி கேட்டு, குடிநீர் வசதி கேட்டு, ரேஷனில் அரிசி, மண்ணெண்ணெய் கேட்டு, சம்பள உயர்வு கேட்டு, அநியாய கட்டண உயர்வைக் குறைக்கச் சொல்லி இப்படி உழைக்கும் மக்கள் தங்களின் அடிப்படை தேவைகளுக்காகவும், உரிமைகளுக்காகவும் போராடும் பொழுதெல்லாம் போலீசின் அடக்குமுறையை எதிர்கொள்கிறார்கள். ''தடா'', ''பொடோ'', ''குண்டர் சட்டம்'', கலவரப் பகுதி சட்டம், சிறப்பு ஆயுதப் படை சட்டம் போன்ற ஆள்தூக்கி கருப்புச் சட்டங்கள் அனைத்தும் போராடும் மக்களின் மீது போலீசு ஏவிவிடும் அடக்குமுறையை, போலீசின் மனித உரிமை மீறல்களைச் சட்டபூர்வமாக நியாயப்படுத்துவதற்காகவே கொண்டு வரப்பட்டுள்ளன. அரசு, நீதிமன்றம், ஆளுங்கட்சி அனைத்தும் இச்சட்டங்களின் மூலம் போராடும் பொது மக்களுக்கு எதிராக போலீசுக்குக் கொம்பு சீவி விடுகின்றன.

போலீசு நினைத்தால் எந்தவொரு குடிமகனையும் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற சட்டபூர்வ பாசிசம் அரங்கேற்றப்படுகிறது. எனவே, உழைக்கும் மக்கள் மானத்தோடு உயிர்வாழ வேண்டும் என்றாலே, நாட்டிலேயே மிகப் பெரிய சமூக விரோத கிரிமினல் கும்பலாக இருக்கும் போலீசு அமைப்பைக் கலைக்கக் கோரியும்; அதற்குப் பதிலாக, மக்களுக்குப் பதில் சொல்ல கடமைப்பட்டுள்ள ஆயுதந்தாங்கிய மக்கள் பாதுகாப்பு குழுக்களை அமைக்கக் கோரியும் போராட வேண்டும்.

● ரஹீம்



அடுக்கடுக்காகப் பொய் வழக்குகள் போடப்பட்டு சித்திரவதை செய்யப்படும் நக்கீரன் நிருபர் சிவசுப்பிரமணியன்.



படிப்பகம்

www.padippakam.com

# ஜனநாயகத் தொட்டிலா? பயங்கரவாதிகளின் பாசறையா?

நகுயென் ஹூ சான் - இவன் ஒரு பயங்கரவாதி. வியட்நாமில் போலி கம்யூனிஸ்டுகள் தலைமையிலான ஆட்சியைத் தூக்கியெறிந்துவிட்டுச் சுதந்திரமான முதலாளித்துவ ஆட்சியை நிறுவும் நோக்கத்துடன் இவன் நடத்தியுள்ள பயங்கரவாதத் தாக்குதல்கள் ஏராளம்.

வியட்நாமின் விடுதலைப் போராட்டத் தலைவரும் தேசத் தந்தையுமான தோழர் ஹோசிமின் உருவச்சிலைகளை உடைத்தெறியும் நோக்கத்தோடு 1999-இல் இவனும் இவனது கூட்டாளிகளும் வியட்நாமில் அடுத்தடுத்து குண்டு வெடிப்புத் தாக்குதல்களை நடத்தினர். இதில் இவனது கூலிப்படையைச் சேர்ந்த 38 பேர் கைதாயினர். ஆகஸ்ட் 2000-இல் இக்கும்பல் இலண்டன் மாநகரிலுள்ள வியட்நாமியத் தூதரகத்துக்குத் தீ வைத்தது. 2001-இல் கம்போடியத் தலைநகர் நாம்பென்னிலுள்ள வியட்நாமிய தூதரகத்தின் மீதும், தாய்லாந்தின் தலைநகர் பாங்காக்கிலுள்ள வியட்நாமிய தூதரகத்தின் மீதும் இக்கும்பல் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தியது. செப்டம்பர் 2001-இல் பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகரான மணிலாவிலுள்ள வியட்நாம் தூதரகத்தில் குண்டு வைக்க முயற்சித்த இக்கும்பலைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டனர்.

''சுதந்திர வியட்நாமிய அரசாங்கம்'' எனும் அமைப்பை உருவாக்கிக் கொண்டுள்ள நகுயென் ஹூ சான், தன்னை இந்த அரசாங்கத்தின் தலைமை தளபதியாக அறிவித்துக் கொண்டுள்ளான். அதிநவீன ''எலக்ட்ரானிக்'' குண்டுகளையும் ஏறத்தாழ ஒரு லட்சம் ஆதரவாளர்களையும் கொண்டுள்ளதாகக் கூறும் இவன், ''நாங்கள் இன்னும் பேரழிவை விளைவிக்கும் தாக்குதலை நடத்தவில்லை. எமது அடுத்த தாக்குதல் கொடியதாகவும் தீவிரமாகவும் இருக்கும். வேறெந்த நாட்டிலும் அல்லாமல் வியட்நாமிலேயே அடுத்த தாக்குதலை நடத்துவோம்'' என்று கொக்கரிக்கிறான்.

அதெல்லாம் இருக்கட்டும். வியட்நாமைச் சேர்ந்த இவன் எங்கே பதுங்கியிருக்கிறான் தெரியுமா? வியட்நாமியக் காடுகளிலோ மலைகளிலோ அல்ல. உலகின் ஜனநாயகத் தொட்டிலாக முதலாளித்துவவாதிகளால் சித்தரிக்கப்படும் அமெரிக்காவில்தான் இவன் தங்கியிருக்கிறான். கலிபோர்னியாவின் புறநகர் பகுதியிலுள்ள ''கார்டன் குரூவ்'' எனும் அடுக்குமாடி குடியிருப்பில் தனது அலுவலகத்தை வைத்துக் கொண்டு இவன் செயல்படுகிறான். ''அமெரிக்கா, உலகெங்கும் பயங்கரவாதத்துக்கு எதிராகப் போர் தொடுத்த போதிலும், நான் என்னை மறைத்துக் கொள்ளவேண்டிய அவசியம் ஏதுமில்லை'' என்று இவன் வெளிப்படையாகவே பேட்டியளிக்கிறான். ஏனெனில் இவன் அமெரிக்காவால் வளர்க்கப்பட்டு வரும் செல்லப் பிள்ளை!

அமெரிக்காவால் ஊட்டி வளர்க்கப்படும் கம்போடிய பயங்கரவாதிகள் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் காயமடைந்தோர்.



இப்பயங்கரவாதியைக் கைது செய்து தம்மிடம் ஒப்படைக்கும்மாறு வியட்நாமிய அரசு அமெரிக்காவிடம் பலமுறை கோரிய போதிலும், இன்றுவரை அமெரிக்கா இதற்கு செவிசாய்க்கவே இல்லை. இவனது கூட்டத்தைச் சேர்ந்த ஒரு சிலரை மட்டும் கைது செய்து ஜனநாயக நாடகமாடும் அமெரிக்கா பயங்கரவாதக் கும்பலின் தலைவனாகிய சான் மீது இன்றுவரை கை வைக்கவேயில்லை. மேலும் வியட்நாமுடன் அமெரிக்காவுக்கு பகைமையோ முரண்பாடோ இல்லை. இரு நாடுகளுக்குமிடையே அரசுத் துறை உறவுகள் சுமுகமாகவே உள்ளன. ஆனாலும் தனது நாட்டில் தங்கியுள்ள பயங்கரவாதியைக் கைது செய்யவோ நடவடிக்கை எடுக்கவோ அது தயாராக இல்லை.



நகுயென் ஹூசான்: வியட்நாமில் சீர்குலைவு - சதி வேலைகளில் ஈடுபட்டு வரும் பயங்கரவாதி.

காரணம், வியட்நாமில் பெயரளவிலான கம்யூனிஸ்டுகளின் ஆட்சி நீடிக்கக் கூடாது என்பதில் அமெரிக்காவும் அதனால் ஊட்டி வளர்க்கப்படும் பயங்கரவாதக் கும்பலும் ஒன்றுபட்டு நிற்கின்றனர்.

இதேபோல சுன் யாசித் என்பவன் கம்போடியாவைச் சேர்ந்த பயங்கரவாதி. இவன் ''கம்போடிய சுதந்திரப் போராட்டக்காரர்கள்'' என்ற பெயரில் ஒரு பயங்கரவாத அமைப்பை அமெரிக்காவின் கலிபோர்னியாவிலுள்ள ''லாங் பீச்'' பகுதியில் அமைத்துக் கொண்டு கம்போடியாவில் சீர்குலைவு - சதிவேலைகளில் ஈடுபட்டு வருகிறான். கடந்த ஆண்டு நவம்பரில்


படிப்பகம்

www.padippakam.com

இப்பயங்கரவாத கும்பல், கம்போடியத் தலைநகர் நாம்பென்னில் ஏவுகணைத் தாக்குதலை நடத்தி 8 பேரைக் கொன்றொழித்தது. ''கம்போடியாவின் தற்போதைய பிரதமரான ஹுன் சென் ஒரு முன்னாள் கம்யூனிஸ்டு; எனவே அவர் சர்வாதிகார ஆட்சி நடத்துகிறார்; அவரைத் தூக்கியெறிந்து விட்டு கம்போடியாவை விடுதலை செய்து சுதந்திரமான ஆட்சியை நிறுவுவதே எமது லட்சியம்'' என்று கூறும் சுன்யாசித், அமெரிக்காவில் தனக்கு 500 ஆதரவாளர்களும், கம்போடியாவில் 20000 தொண்டர்களும் உள்ளதாக பேட்டியளிக்கிறான்.

தனது 'சுதந்திர' கம்போடிய நாட்டுக்கான கொடி மற்றும் இலச்சினைகளைத் தனது அலுவலகத்தில் வரைந்து வைத்துள்ள இவன், அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பென்டகனைச் சேர்ந்த அதிகாரிகளுடன் வெளிப்படையாகவே கூடிக்குலாவுகிறான். தனது பேட்டிகளிலும் இதைப் பெருமையாக அறிவிக்கிறான். ஆனால் அமெரிக்க ஆட்சியாளர்களோ இவையெல்லாம் உண்மையல்ல என்று முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்க முயற்சிக்கின்றனர்.

கம்போடியாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையே அரசுத்துறை உறவுகள் சுமுகமாக இருந்தபோதிலும், கம்போடிய அரசு அமெரிக்காவுக்கு ஆதரவாக இருந்தபோதிலும், பிரதமர் ஹுன் சென்-ஐ அகற்றுவதில், அமெரிக்காவும் அதனால் ஊட்டி வளர்க்கப்படும் பயங்கரவாதக் கும்பலும் ஒன்றுபட்டு நிற்கின்றனர். இதனாலேயே சுன் யாசித் கும்பலைக் கைது செய்யவோ, நடவடிக்கை எடுக்கவோ இன்றுவரை அமெரிக்கா முன்வரவில்லை.

பயங்கரவாதத்துக்கு எதிராகப் போர் தொடுத்து உலகை மீட்கப் போவதாகப் பெருங்கூச்சல் போடுகிறது அமெரிக்கா. எந்த நாட்டில் பயங்கரவாதி இருந்தாலும், எந்த நாடு அவர்களுக்கு அடைக்கலம் அளித்தாலும் அந்நாட்டின் மீது போர் தொடுப்போம் என்று எச்சரிக்கிறார் 'ஜனநாயகக் காவலர்' புஷ். ஆனால் அமெரிக்காவிலேயே அதன் ஆதரவோடு பயங்கரவாதிகள் உருவாக்கப்பட்டு வளர்க்கப்படுகிறார்கள்; அவர்கள் அமெரிக்காவின் அடியாட்களாகச் செயல்பட்டு உலகின் பல நாடுகளில் பயங்கரவாத - சீர்குலைவு நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் என்ற உண்மைக்கு வியட்நாம் - கம்போடிய பயங்கரவாதக் கும்பல்களே சான்று கூறப் போதுமானது. உலகின் மிகப்பெரிய கிரிமினலும் ரவுடியும் போலீசும் - இவையனைத்தும் ஒன்றாய் திரண்ட பயங்கரவாதியும் யார் என்பதற்கு இதைவிட வேறு விளக்கம் தேவையில்லை. இந்த பயங்கரவாத அமெரிக்க மேலாதிக்க வல்லரசுக்கு எதிராக உலகப் போரைத் தொடுப்பதொன்றுதான், உலக நாடுகளும் மக்களும் நீடித்த சுதந்திரம் பெறுவதற்கான ஒரே வழி!

● குமார்

## ஏகாதிபத்திய நாடுகளில்
# வளம் கொழிக்கவில்லை வறுமை தாண்டவமாடுகிறது

கடந்த நான்காண்டுகளில் வங்கியில் வாங்கிய கடனைக் கட்டமுடியாத விவசாயிகள் 30 பேர் தற்கொலை செய்து கொண்டனர்.

முதலாளிகள் வங்கிகளில் வாங்கி, திருப்பிச் செலுத்த முடியாமல் தள்ளுபடியான தொகை சுமார் ஆறு லட்சத்து எழுபத்தி ஐயாயிரம் கோடி ரூபாய்.

— இவை ஏதோ இந்தியாவைப் பற்றியோ, வேறு ஏழை நாட்டைப் பற்றியோ உள்ள விவரமல்ல. உலகிலேயே பணக்கார நாடுகள் வரிசையில் இரண்டாமிடத்தில் உள்ள ஜப்பான் நிலைமை.

''ஜப்பானைப் பார்! சுறுசுறுப்பாக வேலை செய்யும் மக்களைப் பார்!'' என்று இங்குள்ள முதலாளிகளும் பத்திரிகைகளும் கூறினார்கள். அந்த ஜப்பானியத் தொழிலாளிகளுக்கு இன்று வேலை உத்திரவாதம் கிடையாது. ஜப்பானின் 65 சதவீத மக்கள் எவ்விதப் பாதுகாப்புமற்ற இருண்ட எதிர்காலத்தையே எதிர் கொள்கிறார்கள்.

ஜப்பானில் வேலையில்லாத் திண்டாட்டம் இதுவரை இல்லாத அளவு 5.6% ஆக அதிகரித்துள்ளது. 32% ஆலைகள் மூடப்பட்டு, அவை சீனாவில் திறக்கப்பட்டுள்ளன. மேலும் இருக்கின்ற ஆலைகளில் 42%-ஐ சீனாவிற்குக் கொண்டு செல்வதன் மூலமே நீடிக்க முடியும் என ஜப்பானிய பெருமுதலாளிகள் எண்ணுகின்றனர்.

லே-ஆஃப் விடப்பட்ட ஜப்பானியத் தொழிற்சாலைகளின் பொறியாளர்கள் சீனாவிற்கு வேலை தேடி ஓடுகின்றனர். ஜப்பானில் வாங்கியதைவிட பாதிதான் சம்பளமென்றாலும் அதாவது கிடைக்கிறதே என்று அலைபாய்கின்றனர்.

அமெரிக்காவிலும் இதுதான் நிலைமை. கடந்த டிசம்பரில் வேலையற்ற அமெரிக்கர்களின் தொகை 83 லட்சம். 2002-க்குள் இது மொத்த மக்கள் தொகையில் 6.5% ஆகுமென்கின்றனர் நிபுணர்கள். அங்குள்ள 5 குழந்தைகளில் ஒன்று வறுமையில் வாழ்கிறது. பிறக்கிற ஆயிரம் குழந்தைகளில் 7 குழந்தைகள் உடனே இறக்கின்ற அளவு வறுமை கோரத் தாண்டவமாடுகிறது.

வியட்நாம் போரில் ஈடுபட்ட, 64 வயதான ஜார்ஜ் பில்டன் என்ற முன்னாள் இரா

**அரசாங்க கஞ்சித் தொட்டியில் ஒரு குவளை ''சூப்'' வாங்கிக் குடித்து வயிற்றைக் கழுவும் வேலையிழந்த ரசியத் தொழிலாளிகள்.**





படிப்பகம்

www.padippakam.com

ணுவ சிப்பாய் வீடற்றவராக நியூயார்க் நகரின் நெடுஞ்சாலை மேம்பாலத்தினடியில், ஜனவரி 3-ம் தேதியன்று கடுங்குளிரில் உறைந்து பிணமாகக் கிடந்தார்.

ஜெர்சி நகர், ஹட்சன் நதிக்கரையில், கார்கள் நிறுத்துமிடத்தில் இதே போல 60 வயது நபர் குளிரில் விரைத்து இறந்து கிடந்தார்.

அமெரிக்காவில் வாழ வழியின்றி, வீடற்று நிர்க்கதியான மக்கள் தொகை நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. சிக்காக்கோ நகரில் (மே நாள் உரிமைக்கு போராடி உயிர் நீத்த தியாகிகளின் பெயரைச் சொல்லும் அதே நகர்) இந்த புத்தாண்டுக்கு 5 நாட்கள் முன்பு கடுங்குளிரினால் 5 பேர் மாண்டனர். இங்கு வீடற்றவர்கள் எண்ணிக்கை 35% அதிகரித்துள்ளது.

இதேசமயம் பில் கேட்சின் சொத்து மதிப்பு 1996-இல் 1850 கோடி டாலராயிருந்தது, 1997-இல் 3980 கோடி டாலராக ஒரே ஆண்டில் இரு மடங்குக்கும் மேலாகி 1999-இல் 8500 கோடி டாலராக அதிகரித்துள்ளது. ஒரே ஒரு நபரின் கையில் இத்தனை கோடி டாலர்கள் குவிய, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்கள் தொகை 3.6 கோடியாக அதிகரித்துள்ளது.

அமெரிக்காவின் 1 சதவீத ஏகபோக முதலாளிகளிடம் அமெரிக்காவின் மொத்த சொத்து மதிப்பில் 50% குவிந்துள்ளது. 90% மக்களிடம் வெறும் 16.7% சொத்துக்களே உள்ளன.

கம்யூனிசம் தோற்றுவிட்டதாகக் குதூகலித்த முதலாளித்துவ ரசியாவில் இன்று கஞ்சித் தொட்டிகள். இராணுவத்தினருக்குக் கூட சம்பளம் தர இயலா நிலையில் திவாலான அரசு. குளிர்காலத்தில் வீடுகளை சூடுபடுத்துவதற்கான வசதி செய்ய இயலாத நிலையால் வீட்டுக்குள்ளேயே குளிரினால் விரைத்துச் சாகும் உழைப்பாளிகள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதைத் தடுக்க வக்கற்ற அரசு, இனி வீட்டுக்கான மானியத்தை நிறுத்தி, மக்களை வீடற்றவர்களாக்கி, அமெரிக்கா போல வீதிகளில் குளிரில் சாகடிக்க உள்ளது.

ரசியா அப்பட்டமான முதலாளித்துவ நாடான பின் வறுமை அதிகரித்துக் கொண்டே போகிறது. 3-ல் ஒரு குழந்தை ஊட்டச்சத்துக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளது. 1.6 கோடி குழந்தைகள் வறுமையில் வாடுகின்றன. மருத்துவ வசதியின்றி சாகும் மக்கள் தொகை 32 லட்சமாக உயர்ந்துள்ளது. சமூக ஏகாதிபத்தியமாக இருந்த போது கூட நினைத்துப் பார்க்க முடியாத கொடுமையைத்தான் கொலைகார முதலாளித்துவ ரசியா உருவாக்கியுள்ளது.




''ஐயா, வேலையில்லாமல் பசியால் துடிக்கிறேன்; தருமம் செய்யுங்கள்!'' என்று தட்டியில் எழுதி வைத்துக் கொண்டு தனது நாயுடன் பிச்சை எடுக்கும் ஜெர்மானிய ஆடு-மாடு மேய்ப்பாளர்.

முன்பெல்லாம் உழைக்கும் மக்கள் இப்படி வேலையின்றி உணவின்றிச் சாகும் கொடுமை பின்தங்கிய ஏழை நாடுகளில்தான் நடக்கும் என்ற நிலைமைக்கு மாறாக, இப்போது செல்வ வளமிக்க-பொருளாதார பலமிக்க ஏகாதிபத்திய நாடுகளிலேயே அந்த நிலைமை பற்றிப் படர்கிறது. அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி, ரசியா, பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி என எல்லா ஏகாதிபத்திய நாடுகளிலும் மாபெரும் பொருளாதாரச் சரிவும் வீழ்ச்சியும் நெருக்கடியும் முறைகுலைவும் அராஜகமும் தீவிரமாகி விட்டன. சந்தைப் பொருளாதாரத்தின் மீள முடியாத தோல்வி - வீழ்ச்சியிலிருந்து தப்பிக்க வழி தெரியாமல் அவர்கள் தத்தளிக்கிறார்கள்.

மறுபுறம் இந்த ஏகாதிபத்திய வல்லரசு நாடுகளில் ஆட்குறைப்பு - ஊதியவெட்டு, வேலையின்மைக்கு எதிராகவும் உலகமயமாக்கலுக்கு எதிராகவும் உழைக்கும் மக்களின் போராட்டங்கள் தன்னெழுச்சியாக வெடித்தெழுகின்றன. ரீகனிசம், தாட்சரிசம், பெரஸ்த்ரோய்கா, தனியார்மயம், தாராளமயம், உலகமயம், புதிய பொருளாதாரக் கொள்கை என்று பல முகங்களுடன் கிளம்பி ஆட்டம் போட்ட முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரத்தின் கொடுமையையும் கோரத்தையும் இனியும் சகித்துக் கொள்ள முடியாமல் உலகெங்கும் உழைக்கும் மக்கள் கோடிக்கால் பூதமாகக் கிளம்பி விடுவார்களோ என்று ஏகாதிபத்தியவாதிகள் அஞ்சி நடுங்குகிறார்கள். தோற்றுவிட்டதாக அவதூறு செய்து ஒடுக்கிய கம்யூனிசம் மீண்டும் உயிர்த்தெழுந்து விடுமோ என்று பீதியில் கையைப் பிசைகிறார்கள். எலிகளைப் போல ஏழை நாடுகளை நசுக்கிய அவர்கள், தீவிரமாகிவிட்ட சந்தைப் பொருளாதார வீழ்ச்சியால் பொறியில் சிக்கிய எலிகளாக அலைபாய்ந்து தத்தளிக்கிறார்கள். அச்சத்தையும் மரணத்தையும் ஏற்றுமதி செய்த இப்பயங்கரவாதிகள், அச்சத்தால் முகம் வெளிறிப்போய் கிடக்கிறார்கள்.

தோல்வி; மீள முடியாத தோல்வி! நெருக்கடியிலிருந்து தப்பிக்க இனி என்ன வழி? உள்நாட்டில் பாசிச அடக்குமுறை, உலக மேலாதிக்கச் சுரண்டலுக்காக பிற நாடுகளின் மீது போர் என்பதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியும் தெரியவில்லை. ஆப்கானைத் தொடர்ந்து ஈரான், ஈராக், வட கொரியா மீது போர் தொடுப்போம் என்று வெறிபிடித்து அலையத் தொடங்கிவிட்டார்கள்.

ஆனால், உலகெங்கும் உள்ள உழைக்கும் மக்கள் ஏகாதிபத்தியங்களின் பித்தலாட்ட மோசடிகளை இனியும் நம்பி ஏமாறத் தயாராக இல்லை. ஏகாதிபத்திய உலகின் கொடுமையையும் சீரழிவையும் போர் வெறியையும் அனுபவப்பூர்வமாக உணர்ந்துவரும் உழைக்கும் மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடத் துணிந்து விட்டார்கள். போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கில் அவர்கள் தமக்கே உரித்தான கம்யூனிச சித்தாந்தத்தைப் பற்றி நின்று உயர்த்திப் பிடிப்பார்கள். மரணப் படுக்கையில் வீழ்ந்து விட்ட ஏகாதிபத்தியங்களின் முதுகெலும்பை முறித்து புரட்சியிலே மக்கள் அதிகாரத்தை நிறுவுவார்கள்.

● பச்சையப்பன்



படிப்பகம்

www.padippakam.com

# முட்டுச் சந்தில் திணறும் சி.பி.எம்.

''1947 ஆகஸ்டு 15 அதிகார மாற்றத்தோடு, ஏகாதிபத்திய காலனி ஆதிக்கத்தில் இருந்து இந்தியா அரசியல் சுதந்திரம் அடைந்துவிட்டது. ஆனால் இன்னமும் பொருளாதார சுதந்திரம் அடையவில்லை'' என்பதுதான் சி.பி.(எம்) கட்சியின் ஆரம்ப அதிகாரபூர்வ நிலை. அதன் பிறகு, அரசியல், இராணுவம், பொருளாதாரம், பண்பாடு, கல்வி - அறிவியல் தொழில்நுட்பம், அரசு தந்திரம் என்று பல்வேறு துறைகளிலும் இந்திய அரசு ஏகாதிபத்திய சார்பு - கூட்டு ஒப்பந்தங்கள் போடும் போதெல்லாம், நாட்டின் இறையாண்மை அடகு வைக்கப்படுவதாக சி.பி.(எம்) கட்சி புலம்பி வந்திருக்கிறது. இந்திய அரசு அதிகரித்த அளவில் ஏகாதிபத்திய சார்புநிலை எடுத்து வருவதாகவும், இந்தப் போக்கு, நாட்டின் இறையாண்மையை முற்றாக இழப்பதற்கும், பொருளாதாரத் துறையில் மட்டுமல்லாது அரசியல் துறையிலும் நாடு மீண்டும் அடிமையாவதை நோக்கிப் போய்க் கொண்டிருப்பதாகவும் சி.பி.(எம்) தொடர்ந்து, அவ்வப்போது எச்சரித்துக் கொண்டே இருக்கிறது.

இப்போது, ''ஏகாதிபத்தியத்தால் புகுத்தப்படும் உலகமயமாக்கமும் இந்திய ஆளும் வர்க்கங்களால் அமலாக்கப்படும் தாராளமயக் கொள்கைகளும் நமது நாட்டின் அனைத்துத் துறைகளிலும் ஏகாதிபத்திய ஊடுருவலை உச்சபட்சமாக்கி இருக்கிறது. பன்னாட்டு நிறுவனங்களுக்கும் ஏகாதிபத்திய அந்நிய மூலதனத்திற்கும் பொருளாதாரத்தைத் திறந்துவிட்டது இந்திய சமுதாயத்தின் எல்லாத் துறைகளிலும் அவை ஊடுருவி செல்வாக்குச் செலுத்துவதற்கு அடிப்படையாக அமைந்துவிட்டது. அதிகார வர்க்கம், கல்வித் துறை, செய்தி ஊடகம் மற்றும் பண்பாட்டுத் துறைகள் ஆகிய அனைத்தும் ஏகாதிபத்திய ஊடுருவலுக்கு இலக்காகி இருக்கின்றன'' என்று சி.பி.(எம்) கட்சியின் புதிய - மேம்படுத்தப்பட்ட திட்டம் கூறுகிறது.

மேலும் ஏகாதிபத்திய உலகமயமாக்கம் இந்தியா போன்ற நாடுகளைப் பொருளாதார மறுகாலனியாக்கம் செய்வதாகவும், உலகவங்கி, ஐ.எம்.எஃப் மற்றும் உலக வர்த்தக நிறுவனம் (WB, IMF & WTO) ஆகியவை அதற்கான கருவிகளாகச் செயல்படுவதாகவும் அக்கட்சித் திட்டம் சித்தரிக்கிறது.

ஆயினும், சி.பி.(எம்) கட்சி அறிவித்துள்ள ''மக்கள் ஜனநாயகப் புரட்சி''யின் ''ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய விடுதலை'' என்ற முதற்கட்டம் நிறைவடைந்துவிட்டது; ''நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு ஜனநாயகப் புரட்சி'' என்ற இரண்டாவது கட்டம்தான் நிறைவு செய்யப்பட வேண்டும் என்றும் 1964-இல் அறிவித்தவாறு இந்தியப் புரட்சியின் கட்டம், தன்மை, இலக்கு, போர்த்தந்திரம் போன்றவை மாறாமலிருக்கின்றன என்றும் இப்போது அக்கட்சி கூறிக் கொள்கிறது.

''விவசாயம் மற்றும் தொழிற்துறை உற்பத்தி சக்திகள் மீதான நிலப்பிரபுத்துவ, அரை நிலப்பிரபுத்துவத் தளைகளின் மிச்சசொச்சங்களைத் துடைத்தெறியும் வகையில் விவசாயிகளின் நலன்களுக்காகத் தீவிரமான விவசாயச் சீர்திருத்தத்தை அமலாக்குவது மக்கள் ஜனநாயகப் புரட்சியின் எல்லாவற்றுக்கும் மேலான, முதன்மையான கடமையாகும். இதற்குக் கிராமங்களை பழம் பிற்போக்குத் தனங்களோடு கட்டிப் போட்டிருக்கும் சாதி மற்றும் பிற சமூக அமைப்புகள் போன்ற முதலாளித்துவத்துக்கு முந்தைய சமுதாய மிச்சசொச்சங்களைக் கொண்ட சமூக அமைப்பை சீர்திருத்தும் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். உண்மையில் மக்கள் ஜனநாயகப் புரட்சியின் அச்சாக விளங்கும் விவசாயப் புரட்சியை முழுமையாக நிறைவேற்றுவதோடு இந்தக் கடமை பிரிக்க முடியாதவாறு இணைந்திருக்கிறது'' என்று சி.பி.(எம்) கட்சியின் பழைய மற்றும் புதிய மேம்படுத்தப்பட்ட திட்டங்கள் கூறுகின்றன.

சுமைவண்டி இழுக்கும் குதிரைக்கு முன்பு காட்டி ஏமாற்றுவதற்கான புல்லுக்கட்டு போன்றதுதான் சி.பி.(எம்) கட்சியின் புரட்சிச் சவடால்களும். சி.பி.(எம்) கட்சியின் பழைய மற்றும் புதிய - மேம்படுத்தப்பட்ட திட்டங்களே இதற்கு ஆதாரங்களாக உள்ளன.

சி.பி.(எம்) கட்சியின் ''ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, ஏகபோக எதிர்ப்பு மக்கள் ஜனநாயகப் புரட்சி''யின் இரண்டாவது கடமையாக அந்நிய ஏகபோக மூலதனத்தை வேரோடு பிடுங்கி, மொத்தமாகத் தூக்கியெறிந்து முற்றாக ஒழித்துக்கட்டுவதாக 1964 கட்சித் திட்டம் அறிவித்தது. ஆனால், அத்திட்டத்தை மேம்படுத்துவதாகக் கூறிக்கொண்டு 2000-ஆம் ஆண்டு நவம்பரில் நிறைவேற்றிய ''புதிய'' திட்டம், ''இந்திய மற்றும் அந்நிய மூலதனத்தின் ஏகபோகத் தன்மைகளை மட்டும் அகற்றும், தெரிந்தெடுக்கப்பட்ட துறை

புதிய - மேம்படுத்தப்பட்ட கட்சித் திட்டத்தை வகுத்த சி.பி.எம்.-இன் திருவனந்தபுரம் சிறப்பு மாநாட்டுப் பேரணி: புரட்டல்வாதப் பாதையில் பீடுநடை.






படிப்பகம்

www.padippakam.com

களில் அந்நிய நேரடி முதலீட்டை அனுமதிக்கும், அந்நிய நிதி மூலதன நுழைவை தடுக்காது நெறிப்படுத்தும்'' என்று கூறுகிறது.

அதே போல சி.பி.(எம்) கட்சி, மக்கள் ஜனநாயகப் புரட்சியின் அச்சாக விளங்கும் விவசாயப் புரட்சியை முழுமையாக நிறைவேற்றப் போவதாக தனது திட்டத்தில் அறிவித்துள்ளது. ஆனால் இதை எப்படி நிறைவேற்றப் போகிறது என்பதை சற்று விவரமாகப் பார்த்தால் ஒரு ஓட்டுக் கட்சிக்குரிய பொய்யான வாக்குறுதிக்கு மேல் ஒன்றும் கிடையாது என்பது விளங்கும்.



**நட்டஈடு கொடுத்து நிலங்களை வாங்கி, நிலச்சீர்திருத்தம் செய்யக் கிளம்பியுள்ள சுர்ஜித்; குஜ்ரால், தேவேகவுடாவுடன் மூன்றாவது அணியை உருவாக்கும் தரகு வேலையில்.**

1964 மற்றும் புதிய - மேம்படுத்தப்பட்ட கட்சித் திட்டம் (2000) ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள தீவிரமான விவசாயச் சீர்திருத்தம் மற்றும் விவசாயப் புரட்சியை முழுமையாக நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளில் ஆகப் பெரும்பான்மையானவை நேரு - இந்திரா - காமராஜ் காலத்தில் காங்கிரசு பேசிவந்த ஜனநாயக சோசலிசத்தின் வாக்குறுதிகள் போன்றவைதாம். 1964 கட்சித் திட்டம் ஒரே ஒரு விசயத்தில் மட்டும் காங்கிரசு அறிவித்த சீர்திருத்தங்களில் இருந்து மாறுபட்டிருந்தது. ''1. நட்ட ஈடு இல்லாமல் நிலப்பிரபுத்துவத்தை ஒழிப்பது; அதன் பலன்களை விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் ஏழை விவசாயிகளுக்குத் தருவது'' என்று 1964 கட்சித் திட்டம் கூறியது.

ஆனால், அதையும் கூட அடியோடு நீர்த்துப் போகும் வகையில் 2000-இல் சி.பி.(எம்) கட்சி திருத்திவிட்டது. ''பண்ணைப் பிரபுத்துவத்தைத் தீவிர நிலச் சீர்திருத்தத்தை அமலாக்குவதன் மூலம் ஒழிப்பது; விவசாயத் தொழிலாளர்களுக்கும் ஏழை விவசாயிகளுக்கும் இலவசமாக நிலம் தருவது'' என்று இப்போது திட்டம் வகுத்துள்ளது. ***அதாவது ''நிலப்பிரபுக்களின் சொத்துக்கள் அனைத்தையும் நட்ட ஈடின்றிப் பறிமுதல் செய்வது, கூலி-ஏழை விவசாயிகளுக்கு அவற்றை விநியோகிப்பது'' என்பதைக் கைவிட்டு பண்ணை நிலங்களுக்கு நட்ட ஈடு கொடுத்து, விலைக்கு வாங்கி, கூலி - ஏழை விவசாயிகளுக்கு இலவசமாகத் தருவது, நிலப்பிரபுக்களின் பிற சொத்துக்கள் மீது கைவைப்பதில்லை என்று சி.பி.(எம்) கட்சி தனது நிலையை மாற்றிக் கொண்டு விட்டது.***

இதை புதிய - மேம்படுத்தப்பட்ட திட்ட நிறைவேற்றத்துக்காகக் கூடிய 2000-ஆம் ஆண்டு நவம்பர் திருவனந்தபுரம் சிறப்பு மாநாட்டில் அதன் பொதுச் செயலாளர் அப்பட்டமாக ஒப்புக் கொண்டுள்ளார். இது குறித்து, ''பண்ணைப் பிரபுத்துவத்தை ஒழிப்பதில் 'நட்ட ஈடு தராமல்' என்பதை அழிக்கும் ஒரு மாற்றத்தை மட்டும் செய்துள்ளோம். எல்லா விவகாரங்களிலும் நட்ட ஈடு தரவேண்டும் என்று நாம் கோருவதாக இதற்கு பொருளில்லை. இது குறிப்பிட்ட காலகட்டத்தின் நிலைமைகள் மற்றும் பண்ணை பிரபுத்துவத்தை ஒழிக்கும் நிகழ்ச்சிப் போக்கில் வர்க்க சக்திகளின் சேர்க்கையையும் பொருத்திருக்கும்.'' ஆனால் இந்த மாற்றத்திற்கு வேறு தகுந்த விளக்கம் ஏதும் தரப்படவில்லை. அடிப்படையான இந்த மாற்றத்திற்கு அக்கட்சி மாநாட்டுப் பிரதிநிதிகளிடமிருந்து எதிர்ப்பு எதுவும் எழவில்லை; விளக்கங்கள் மட்டுமே கோரப்பட்டன. அந்த அளவிற்கு அக்கட்சி சீரழிந்து போயுள்ளதையே இது காட்டுகிறது.

''தனியார்மயம், தாராளமயம், உலகமயமாக்கம் அடிப்படையிலான பொருளாதாரச் சீர்திருத்தக் கொள்கை தவிர்க்க முடியாதது, பொருளாதார முன்னேற்றத்துக்கு அவசியமானது'' என்று சி.பி.(எம்) கட்சியின் சோசலிச ''மாடலுக்கு'' உதாரணமாக விளங்கும் சீனா போன்ற நாடுகளும் அதன் மேற்கு வங்கக் கூட்டணி அரசும் ஏற்றுக் கொண்டு விட்ட பிறகு அதற்குத் தகுந்த வகையிலான கட்சித் திட்டத்தையும் திருத்திக் கொள்வதை அதன் எல்லாமட்டத் தலைவர்களும் தலை அசைத்திருக்கிறார்கள். இந்தத் திருத்தப்பட்ட அம்சத்தோடு பின்வரும் சலுகைகள் செய்யப் போவதாக அக்கட்சித் திட்டம் கூறுகிறது.

''2. ஏழை விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் சிறு கைவினைஞர்கள், வட்டிக் கடைக்காரர்கள் மற்றும் நிலப்பிரபுக்களிடம் பட்டுள்ள கடன்கள் இரத்து செய்யப்படும்.

3. பெரும் வர்த்தகங்கள், பன்னாட்டுத் தொழில் கழகங்கள், மற்றும் கடுமையான விலை ஏற்ற - இறக்கங்கள் ஆகியவற்றில் இருந்து விவசாயிகளைப் பாதுகாப்பதற்காக அரசு வழிநடத்தும் ஒரு சந்தைமுறை வளர்க்கப்படும். விவசாயிகள், கைவினைஞர்கள், விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோருக்கு நீண்டகால, சுலபக் கடன்களும் விவசாய விளை பொருட்களுக்கு நியாயமான விலையும் உறுதி செய்யப்படும்.

4. நீர்ப்பாசன மற்றும் மின் வசதிகளை அதிகபட்சமாக்கி அவை முறையாகவும் சமமாகவும் பயன்படுத்தப்படும்; விவசாயத் துறையில் சுயசார்பு ஆராய்ச்சியும் வளர்ச்சியும் ஊக்குவிக்கப்படும்; உற்பத்தித் திறனைப் பெருக்கும் நல்ல விதைகள் மற்றும் நவீனத் தொழில்நுட்பம் ஆகியவற்றைப் பயன்படுத்தி விவசாய முறைகளை மேம்படுத்துவதற்காக விவசாயிகளுக்கு உதவப்படும்.

5. விவசாயத் தொழிலாளர்களுக்குப் போதிய ஊதியங்கள், சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் குடியிருப்பு நிலைமைகள் உறுதி செய்யப்படும்.

6. விவசாயம் மற்றும் பிற சேவைகளில் தன்னார்வ அடிப்படையில் உதவும் மற்றும் கைவினைஞர்களின் கூட்டுறவுகள் மேம்படுத்தப்படும்.

7. உணவு தானியங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை மக்களுக்கு மலிவாக வழங்கும் ஒரு நேர்த்தியான விநியோக முறை அறிமுகப்படுத்தப்படும்.''

சி.பி.(எம்) கட்சியின் பழைய - புதிய திட்டங்களில் விவசாயிகள் மற்றும் விவசாய நலன்களுக்காக கூறப்பட்டிருப்பனவற்றை அப்படியே மேலே கொடுத்துள்ளோம். அதற்குக் காரணம் பிற ஓட்டுக் கட்சிகளின் சீர்திருத்த சலுகை வாக்குறுதிகளுக்கு மேல் சி.பி.(எம்) கட்சியிடம் வேறு எதுவும் கிடையாது என்பதை நிரூபிப்பதுதான். இவ்வாறு ஒரு ஓட்டுக்கட்சிக்குரிய வாக்குறுதிகளை வைத்துக் கொண்டு நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு விவசாயப் புரட்சி

www.padippakam.com

செய்யப்போவதாக சவடால் அடித்து வருகிறது சி.பி.(எம்) கட்சி. அதுமட்டுமல்ல ''சி.பி.(எம்) கட்சியின் தலைமையிலான இடதுசாரி அரசாங்கங்களால் மேற்கு வங்கம், திரிபுரா, கேரளாவில் மட்டும் தற்போதைய சட்டங்களின்படி நிலச் சீர்திருத்தங்கள் அமலாக்கப்பட்டிருக்கின்றன'' என்று அக்கட்சித் திட்டம் கூறுகிறது. அப்படியானால் தற்போதைய சட்டங்களின்படி சி.பி.(எம்) கட்சியின் திட்டம் முன்வைத்துள்ள பிற சீர்திருத்தங்களையும் செய்துவிடுவதற்கு என்ன தடையாக உள்ளது. அதாவது இடதுசாரி - கூட்டணி அரசாங்கங்கள் மூலமாகவே, தற்போதைய சட்டங்களைப் பயன்படுத்தி கடன்கள் இரத்து, அரசு நெறிப்படுத்தும் சந்தை, நீர்பாசன - மின்திட்டங்கள், போதிய ஊதிய உயர்வு, கூட்டுறவு அமைப்புகள், நேர்த்தியான பொது விநியோக முறை, நீண்டகால - குறைந்த வட்டிக் கடன் போன்றவை தந்துவிட முடியும் என்றாகிறது. இப்படிப்பட்ட சலுகைகள் எம்.ஜி.ஆர்., கருணாநிதி ஆட்சிகளில் கூட வழங்கப்படுகின்றன.

தீவிரமான விவசாயச் சீர்திருத்தங்களோடு சி.பி.(எம்) கட்சியின் திட்டம் சாதியம் போன்ற முதலாளித்துவத்துக்கு முந்தைய சமூக அமைப்புகளை அடியோடு துடைத்தெறியும் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் கூட பேசுகிறது. ஆனால் இதற்கான தீர்வாக, ''ஒரு சாதி மற்றொரு சாதியைச் சமூக ஒடுக்குமுறை செய்வது ஒழிக்கப்படும். தீண்டாமை மற்றும் அனைத்து சமூக ஒடுக்குமுறைகளும் சட்டப்படி தண்டிக்கப்படும். தாழ்த்தப்பட்ட சாதிகள், பழங்குடி மக்கள் மற்றும் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கு சேவை மற்றும் பிற கல்வி வசதிகளில் சிறப்பு வாய்ப்புகள் செய்து தரப்படும்'' என்று சி.பி.(எம்) கூறுகிறது. இவையும் கூட ஏற்கனவே உள்ளவைதாம்; புதிதாக ஒன்றும் கிடையாது.

நிலப்பிரபுத்துவ, அரைநிலப்பிரபுத்துவ அமைப்பை ஒழித்துக் கட்டுவது; நிலப்பிரபுக்களின் நிலங்கள் உட்பட அனைத்துச் சொத்துக்களையும் பறிமுதல் செய்து கிராமப்புற உழைக்கும் மக்களிடையே மறுபங்கீடு செய்வது, சாதீயம் - தீண்டாமை போன்ற முதலாளித்துவத்துக்கு முந்தைய சமூக ஒடுக்குமுறைகளை அத்து மீறல்கள் மூலம் அடியோடு துடைத்தெறிவது, இவற்றின் மூலம் நிலப்பிரபுத்துவ ஆதிக்கத்தைத் தூக்கியெறிவது; மக்கள் தமது சொந்த பலத்தைக் கொண்டு கீழிருந்து கலகம் செய்து கிராமப்புற அதிகாரத்தைக் கைப்பற்றுவதுதான் நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு விவசாய புரட்சி ஆகும்.

ஆனால், சி.பி.(எம்) கட்சி இப்படிப்பட்ட விவசாயப் புரட்சியின் மூலம் நிலப்பிரபுத்துவம் மற்றும் அரைநிலப்பிரபுத்துவம் ஆகியவற்றை ஒழித்து பண்ணை நிலப்பிரபுக்களின் நிலங்களைக் கைப்பற்றுவதாகவும் மறுபங்கீடு செய்வதாகவும் கூறவில்லை. அதன் சுமார் 40 ஆண்டுகால வரலாற்றில் இப்படிப்பட்ட முயற்சி எதிலும் ஈடுபடவில்லை. அது செய்ததெல்லாம், ''நிலப்பறி இயக்கம்'' என்கிற பெயரில் ஒரு பகுதி விவசாயிகளைத் திரட்டிக் கொண்டு போய் பண்ணை நிலப்பிரபுக்களின் நிலங்களில் செங்கொடிகளை நட்டு விட்டுக் கோஷம் போடுவதும், போலீசு வந்தால் தாமே முன் வந்து கைதாகி சிறைக்குப் போவதும், வெளியே வந்தபிறகு போராட்டம் வெற்றி என அறிவித்து சிகப்புத் துண்டு அணிவிப்பு விழாக்கள் நடத்தியதும்தான்!

இதுவும் கூட 1967-69 கால கட்டங்களில் அக்கட்சியின் புரட்சிகர அணிகளின் நிர்பந்தம் மற்றும் தன்னெழுச்சியான நிலப்பறிமுதல் இயக்கங்கள் தோன்றி நக்சல்பாரி எழுச்சி வெடித்தபோதுதான். அதன் பிறகு இப்படிப்பட்ட எழுச்சிகள் கூடாதென்று ஒடுக்குவதை நியாயப்படுத்திய சி.பி.(எம்) தலைமை மேற்கு வங்கம், திரிபுரா, கேரளாவில் அப்போது அமைக்கப்பட்ட இடதுசாரி கூட்டணி அரசுகள் மூலமாக சட்டங்கள் போட்டு, ஏற்கனவே உள்ள அரசு இயந்திரத்தைக் கொண்டு நிலச்சீர்திருத்தங்களை நிறைவேற்றி விட்டதாகக் கூறிக் கொண்டது. இதேபாணியில் பிற மாநிலங்களிலும் நிலச்சீர்திருத்தங்களை நிறைவேற்றிவிட முடியும் என்று அக்கட்சி நம்புகிறது. அதேசமயம் மேற்கு வங்கம், கேரளா, திரிபுராவில் அமைந்ததைப் போன்று சி.பி.(எம்) தலைமையிலான இடதுசாரி - ஜனநாயகக் கூட்டணி அரசுகள் பிற மாநிலங்கள் மற்றும் மத்தியில் அமையும் என்ற நம்பிக்கை அக்கட்சிக்குக் கிடையாது. லல்லு, முலயம், சந்திரபாபு நாயுடு, தேவே கவுடா போன்றவர்களுடன் கூட்டுச் சேர்ந்து மூன்றாவது அணி அமைந்து ஏதாவது ஒரு வகையில் பிற மாநிலங்களிலும், மத்தியிலும் ஆட்சிக்கு வந்து நிலச்சீர்திருத்தங்களை அமலாக்கி விட முடியும் என்று சி.பி.(எம்) கட்சி நம்புகிறது. இடதுசாரி கட்சிகள் மட்டுமல்லாது, பிற கட்சிகளின் கூட்டணி அரசில் நட்ட ஈடு இல்லாமல் பண்ணை நிலப்பிரபுக்களின் நிலங்களை மீட்டு, மறுபங்கீடு செய்வது சாத்தியமில்லை என்பதால்தான் வர்க்க சக்திகளின் சேர்க்கையைப் பொருத்தும், நிலைமைகளைப் பொருத்தும் ''நட்ட ஈடு'' தருவது அமையும் என்று சி.பி.(எம்) கட்சி இப்போது திருத்திக் கொண்டுள்ளது.

''ஜனநாயகப் புரட்சியின் அச்சாக விளங்கும் விவசாயப் புரட்சியை முழுமையாக்கும் முக்கியக் கூறாகிய விவசாய உறவுகள் மற்றும் நிலச் சீர்திருத்தங்கள்'' பற்றிய சி.பி.(எம்) கட்சியின் நிலையே இவ்வாறு நீர்த்துப் போய் விட்டது. அதுமட்டுமல்ல, 1970-க்குப் பிறகு சி.பி.(எம்) கட்சியே முழுக்க முழுக்க நகர்ப்புற, நடுத்தர வர்க்க அடித்தளம் கொண்டதாக மாறிப் போய் விட்டது. ''அதன் ஜனநாயகப் புரட்சியின் அச்சு விவசாயப் புரட்சி'' என்று கூறினாலும் கிராமப்புறங்களில், விவசாயிகளின் இயக்கத்தையும் அமைப்பையும் கட்டுவதற்கு அது சிறிதும் அக்கறை காட்டுவதில்லை.

சாதீயம், தீண்டாமை போன்ற முதலாளித்துவத்துக்கு முந்தைய நிலப்பிரபுத்துவ, அரைநிலப்பிரபுத்துவ சமூக அமைப்புகளை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளைப் பற்றி சி.பி.(எம்) கட்சித் திட்டம் பேசினாலும் அதற்கான பருண்மையான நடைமுறை என்பது லல்லு, முலயம், வி.பி.சிங், தேவே கவுடா போன்ற சி.பி.(எம்) கட்சி கூட்டாளிகளின் இடஒதுக்கீடு என்கிற சமூக நீதிக் கொள்கைக்கு ஆதரவு தருவதற்கு மேல் ஒன்றுமில்லை. அதுவும்கூட சி.பி.(எம்) கட்சித் தலைமையின் பார்ப்பன - மேல் சாதித் தலைமை காரணமாக அரைகுறையாகவே உள்ளது. சி.பி.(எம்) கட்சி பலமாகவும், அரசமைக்கும் வாய்ப்பும் கொண்ட மேற்கு வங்கம், கேரளா, திரிபுராவில் ''இட ஒதுக்கீடு ஒரு முக்கியமான பிரச்சினையில்லை'' என்று ஒதுக்கிவிட்டது.

(தொடரும்)


**இப்போது விற்பனையில்**

**கட்சி அமைப்பு பற்றி**

கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பு பற்றியும், ஊழியர்கள் பற்றியும் தோழர்கள் ஸ்டாலின், காகனோவிச், டிமிட்ரொவ், மா சே துங் ஆகியோரின் செறிவான வழிகாட்டுதல்களைக் கொண்ட தொகுப்பு. கம்யூனிஸ்ட் கட்சி ஊழியர்கள் ஒவ்வொருவரும் கற்றுத் தேற வேண்டிய அவசியமான நூல்.

விலை : ரூ. 15.00

பிரதிகளுக்கு:

கீழைக்காற்று வெளியீட்டகம், 10, அவுலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை, சென்னை - 600 002. © 841 2367




படிப்பகம்

www.padippakam.com

**2-ஆம் பக்கத் தொடர்ச்சி**

★ இருபத்தாறு வயதான பந்தேலா சுரேந்தர் வாராங்கல்லில் உள்ள ''ஈ.எஸ்.ஐ.'' மருத்துவமனையில் கடைநிலை ஊழியராக வேலை பார்த்து வந்தார். இவரது பதினாறு வயதான மனைவி விஜயாவும், ஒரு வயது மகனும், பெற்றோர்களும் வாராங்கல்லுக்கு அருகில் உள்ள கொர்ரபெண்டா கிராமத்தில் வசித்து வருகின்றனர். டிசம்பர் 24 இரவு தனது வீட்டில் இருந்து வேலைக்குக் கிளம்பிச் சென்ற சுரேந்தர், மறுநாள் காலையில் வீட்டுக்குத் திரும்பாததால், அவரின் பெற்றோர்கள் அவரைத் தேடி மருத்துவமனைக்கு வந்தனர். மருத்துவமனையின் கண்காணிப்பாளர் சுரேந்தரை இரவு 9 மணிக்குப் பார்த்ததாக அவர்களிடம் கூறினார். சுரேந்தரின் சக ஊழியர் பிரபாகர், தானும் சுரேந்தரும் இரவு 12 மணி வரை ஒன்றாக இருந்ததாகக் கூறினார். அதன் பிறகு சுரேந்தரை யாரும் பார்க்கவில்லை. முன்னைப் போல சுரேந்தரை போலீசார் சட்டவிரோதமாக இழுத்துச் சென்றிருப்பார்களோ என அனைவரும் சந்தேகப்பட்டுக் கொண்டிருந்த பொழுது, சுரேந்தரின் உடலை வாங்கிக் கொள்ள வருமாறு போலீசு, சுரேந்தரின் குடும்பத்துக்குத் தகவல் அனுப்பியது.

★ வாராங்கலில் உள்ள கிர்மஜிபெடா எனும் பகுதியில் வசித்து வரும் ஆட்டோ ஓட்டுநரான பிஸாதி சங்கர், டிசம்பர் 25-ஆம் தேதி அதிகாலை ஒரு மணிக்கு ஆந்திர போலீசாரால் அவரது வீட்டில் இருந்து கடத்திச் செல்லப்பட்டார். போலீசார் அவரைக் குண்டுக் கட்டாகத் தூக்கிச் செல்லும் பொழுது, அவரது மனைவியிடம் இந்த வீட்டை உடனே காலி செய்துவிட வேண்டும் என்று மிரட்டிச் சென்றனர். உயிரோடு பிடித்துச் செல்லப்பட்ட தனது கணவர், போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டதை சங்கரின் மனைவி தொலைக்காட்சி செய்திகளின் மூலம்தான் தெரிந்து கொண்டார்.

வெவ்வேறு பகுதிகளில் இருந்து பிடித்துச்செல்லப்பட்ட இந்த நான்கு தோழர்களின் குண்டு துளைக்கப்பட்ட உடல்கள் ஒன்றாக பத்மக்ஷம்மா குட்டலு என்ற குன்றின் அடிவாரத்தில் கிடந்தன.

''மக்கள் போர்க் குழுவைச் சேர்ந்த நக்சல்பாரிகள் டிசம்பர் 24 இரவு 9 மணி அளவில் வாராங்கல் நகரிலுள்ள ஹனுமகொண்டா போலீசு நிலையத்தைக் குண்டு வீசித் தகர்த்தனர். அந்தக் குற்றவாளிகளைத் தேடி போலீசார் ரோந்து வந்த பொழுது, யாரோ சிலர் போலீசாரைச் சுட்டதாகவும், போலீசார் தங்களைத் தற்காத்துக் கொள்ள திருப்பிச் சுட்டதில், நால்வர் இறந்து போனதாகவும், நால்வர் தப்பியோடிவிட்டதாகவும் கூறி, ஆந்திர போலீசு இப்போலி மோதல் கொலைகளை நியாயப்படுத்துகிறது.

வாராங்கல்லில் உள்ள ஹனுமகொண்டா போலீசு நிலையம் மீது டிசம்பர் 24-ஆம் தேதி இரவு 9 மணி அளவில்தான் தாக்குதல் நடந்துள்ளது. ஆனால், அயிலய்யா அவரது வீட்டில் இருந்து டிசம்பர் 24 அன்று மாலை 6.00 மணிக்கு போலீசாரால் கடத்தப்பட்டு விட்டார். சிவில் உடையில் வந்த இரண்டு போலீசார் அயிலய்யாவை மோட்டார் சைக்கிளில் கடத்திச் சென்றதை அயிலய்யாவின் வீட்டிற்கு அருகில் உள்ள தேநீர் கடை உரிமையாளரும், ஊர்க்காரர்கள் சிலரும் நேரிடையாகவே பார்த்து இருக்கின்றனர்.

ஹனுமகொண்டா போலீசு நிலையம் தாக்கப்பட்ட அதே சமயம், பண்டேலோ சுரேந்தர் வாராங்கல் ஈ.எஸ்.ஐ. மருத்துவமனையில் பணியாற்றிக் கொண்டிருந்ததாக அம்மருத்துவமனையின் கண்காணிப்பாளரே கூறுகிறார். பள்ளி ஆசிரியர் சந்திரசேகரும், ஆட்டோ ஓட்டுநர் பிஸாதி சங்கரும் டிசம்பர் 25-ஆம் தேதி அதிகாலையில் அவர்களின் வீடுகளில் இருந்து போலீசாரால் கடத்திச் செல்லப்பட்டதற்கு, அந்த இருவரின் நெருங்கிய உறவினர்களே இரத்த சாட்சிகளாக உள்ளனர்.

ஆந்திர போலீசு இந்த உண்மைகளை மூடிமறைத்து விட்டதோடு, சுட்டுக் கொல்லப்பட்ட நால்வரின் மீதும் பல்வேறு வழக்குகள் இருப்பதாகக் கூறி, அந்தத் தோழர்களை கிரிமினல்களாகச் சித்தரித்து வருகிறது. தோழர் அயிலய்யாவின் மீது எந்தவொரு வழக்கும் பதிவு செய்யப்பட்டதே இல்லை. அவர் சந்திரபாபு நாயுடு ஆட்சிக்கு எதிராகப் பாடுகிறார் என்ற ஒரே காரணத்துக்காக, அவரைத் தொண்டைக் குழியில் சுட்டுக் கொன்று தனது வக்கிரத்தைக் காட்டிக் கொண்டது ஆந்திர போலீசு. மற்ற மூன்று தோழர்களின் மீது போடப்பட்டுள்ள வழக்குகள் அனைத்தும் பொய் வழக்குகள். இவர்கள் மீது போடப்பட்ட பல்வேறு வழக்குகள் நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

அனைத்திந்திய புரட்சி பண்பாட்டு இயக்கத்தின் உண்மை கண்டறியும் குழுவும் மற்றும் ஆந்திரப் பிரதேசத்தின் சிவில் உரிமைக் கழகம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளும், போலி மோதலில் கொல்லப்பட்ட நான்கு தோழர்களின் உறவினர்களையும் அப்பகுதி மக்களையும் சந்தித்து, இப்படுகொலை பற்றிய உண்மைகளைக் கண்டறிந்து வெளியிட்டு, ஆந்திர போலீசின் பாசிசகுரூரத்தை அம்பலப்படுத்தியுள்ளன. கடந்த சனவரியில் அனைத்திந்திய புரட்சி பண்பாட்டு இயக்கத்தின் எட்டாவது மாநாடு ஹைதராபாத் நகரில் நடந்த பொழுது, போலி மோதல் கொலைகளை நிறுத்தவும், கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நட்ட ஈடு வழங்கவும், கிரிமினல் போலீசு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவும் கோரி ஊர்வலம் நடத்தப்பட்டு, ஆந்திர மாநில ஆளுநரிடம் மனுவும் கொடுக்கப்பட்டது.



**ஆதரவற்று தவிக்கும் பந்தேலா சுரேந்தரின் குடும்பம்: 'ஹைடெக்' முதல்வர் சந்திரபாபு நாயுடு ஆட்சியின் கோர முகத்தை எதிரொலிக்கும் இரத்த சாட்சிகள்.**

போலி மோதல் படுகொலைகள் மூலம் மக்களையும் புரட்சிகர அணிகளையும் பயபீதியில் தள்ளிவிட முடியும் என்று சந்திரபாபு நாயுடு கருதுகிறார். ஆனால், இதற்கு மாறாக ஒவ்வொரு மோதல் படுகொலையும் புரட்சிகர அணிகளைச் கண்டு ஆளுங் கும்பல் பயபீதியில் உறைந்து போயிருப்பதைத்தான் காட்டுகிறது. அவர்களே தம்பட்டம் அடித்துக் கொள்ளும் ஜனநாயக வழியில் புரட்சிகர அமைப்புகளை எதிர்கொள்ள திராணியற்றுப் போயிருப்பதைத்தான் காட்டுகிறது.

**தகவல்: வீராச்சாமி, ம.க.இ.க.,**
**இராசு,**
**மனித உரிமை பாதுகாப்பு கவுன்சில்.**

Published and Owned by R. SHANMUGARAJ, 25, Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, IInd Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS
FOR INDIA UNDER NO. 42648/85

Regd. No. TN/Chief.PMG-544/2002

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா

இதோ, இந்தப் படத்தில் ஒரு இளைஞர் காதல் சின்னம் "ஆர்ட்டின்" போல தனது தலைமுடியை வெட்டிக் கொண்டு, காதலர் தினத்தை வரவேற்கிறார். சுயமரியாதை இயக்கம் எனும் அமைப்பு காதலர் தினத்தை ஆதரித்து சென்னையில் நடத்திய விழாவில் பறையடித்துப் பாட்டுப்பாடி நடனம் ஆடி காதலர் தினத்தைக் கொண்டாடினார்கள்.



ஏகாதிபத்தியங்களின் வர்த்தகம் நுகர்வுப் பண்பாட்டையொட்டித் திணிக்கப்பட்ட இந்த காதலர் தினத்தை, நகர்ப்புறத்து மேட்டுக்குடி நடுத்தர வர்க்க இளைஞர்கள் மட்டுமல்லாமல், குட்டி முதலாளித்துவ இயக்கங்களும் கொண்டாடுவதில் ஆளுங்கும்பலுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. ஏகாதியத்தியங்கள் விரித்த வலையில் நகர்ப்புற இளைஞர்கள் மட்டும் விழுந்திருந்தால், அவர்களுக்கு அது வெறும் வர்த்தக வெற்றியாக மட்டுமே இருந்திருக்கும். போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட பிற குட்டி முதலாளித்துவ அமைப்புகளும் காதலர் தினத்தை ஆதரிப்பது அவர்களுக்கு அரசியல் வெற்றியும் கூட!



இதோ, இந்தப் படத்தில் ஒரு வாக்குவாதம் நடக்கிறதே, அது எதனால் தெரியுமா? சிவசேனா அமைப்பு காதலர் தினத்தை எதிர்த்து லக்னோ நகரில் நடத்திய ரகளையின் பொழுது, பூங்காவில் இருந்த ஒரு காதல் ஜோடி தண்டிக்கப்பட்டதைக் கண்டித்து நடந்த வாக்குவாதம்தான் இது. "காதலர் தினம் மேற்கத்திய கலாச்சாரம்; இதனால் நமது இந்திய கலாச்சாரம் சீரழிந்து போகும்" எனக்கூறி, சிவசேனா காதலர் தினத்தை எதிர்க்கிறது. இதை வேறு மாதிரியாகச் சொன்னால், காதலர் தினத்தால் இந்திய சாதி - சமூக அமைப்புக்குக் குந்தகம் ஏற்பட்டுவிடும் என்ற அச்சத்தினால், காதலர் தினத்தை சிவசேனா எதிர்க்கிறது. காதலர் தினத்தை ஆதரிக்கும் இயக்கங்களோ, "எதிரிக்கு எதிரி நண்பன்" என்ற வகையில், இயந்திர கதியில் காதலர் தினத்தை ஆதரிக்கிறார்கள். இந்த ஆதரவிற்கு "காதல் = சாதி ஒழிப்பு" என்ற மேல்பூச்சைப் பூசிவிடுகிறார்கள்.

நமது நாட்டில் சாதி மாறி காதலித்துத் திருமணம் செய்து கொண்டவர்களில் எத்தனை பேர், தங்களது சொந்த வாழ்வில் சாதி ஒட்டிக் கொள்ளாமல் உதறி எறிந்திருக்கிறார்கள்? காதலிப்பவர்களில் பெரும்பாலோர் சாதி ஒழிப்புக்காகக் காதலிப்பது கிடையாது. இன்னும் சொல்லப் போனால், இந்த எண்ணத்தோடு சாதி மாறி காதலித்துத் திருமணம் செய்து கொள்வதனால் மட்டுமே சாதியை ஒழித்து விட முடியாது. காதலர் தினத்தைக் கொண்டாடும் விட்டேத்தி இளைஞர்களுக்கோ இந்த முற்போக்கான எண்ணம் அறவே இருப்பதில்லை.

காதலர் தினத்தை எதிர்க்க இந்து மதவெறியர்கள் போட்டுக் கொள்ளும் "இந்திய கலாச்சாரம்" என்ற முகமூடி, சாதிய கட்டுமானத்தைக் கட்டிக் காக்கிறது. காதலர் தினத்தை ஆதரிக்க குட்டி முதலாளித்துவ இயக்கங்கள் போட்டுக் கொள்ளும் "சாதி ஒழிப்பு" என்ற முகமூடியோ, "காதலர் தினம்" என்ற பெயரில் ஏகாதிபத்தியங்கள் திணித்த நுகர்வுப் பண்பாட்டிற்கு முட்டுக் கொடுக்கிறது.



காதலர் தினத்தை ஆதரிக்காமலேயே வயது வந்த ஆணும், பெண்ணும் காதலிப்பதை ஆதரிக்கலாம் - தனது வாழ்க்கைத் துணையைத் தானே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் ஜனநாயக உரிமை எனும் அடிப்படையில். இந்த உரிமையைத் தர மறுக்கும் இந்து மதவெறியர்கள் போன்ற பிற்போக்கு சக்திகளையும், இந்த உரிமையை வியாபாரம் பண்ணும் ஏகாதிபத்திய நுகர்வுப் பண்பாட்டையும் ஒருசேர எதிர்க்காமல் சாதி ஒழிப்பைப் பற்றிப் பேச முடியாது! அதற்கு காதலர் தினக் கொண்டாட்டம் போன்ற எளிய, குறுக்கு வழியெல்லாம் பயன் படாது!

படிப்பகம்